353

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 23, 1999 தொகுதி

எண் 2.

(2)

D
V2ıı,31 Acc
Acc. bk 2
22|99ı

வெளியீடு 09-02-2000 Issued 09-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 23, 1999 - தொகுதி 66 - எண் 2

Tuesday, 23rd March, 1999—Volume 66 - No. 2

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**

**Chennai - 600 009**

*விலை ரூ. 3.00*] [Price Rs. 3.00

**23-3-1999**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*

**1. வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 123-172

**2. உரிமைப் பிரச்சினை—**

முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை 172-174

**3. தன்னிலை விளக்கம்—**

பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து திரு. தாமரைக்கனியின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம் 174-175

**4. அறிவிப்புகள்—**

(அ) உறுப்பினர் திரு. தாமரைக்கனி கைது 175-176

(ஆ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை 176-177

(இ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் 178, 248-250

V2'',31'000
800.66.2




| | பக்கங்கள் |
|---|---|
| **அறிவிப்புகள்** தொடர்ச்சி | |
| (ஈ) முன்னாள் முதலவர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கையின் மீதான உரிமைப் பிரச்சினை குறித்து—பேரவைத் தலைவர் தீர்ப்பு | 251-252 |
| **5. பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து முதலமைச்சரின் விளக்கம்** | 178-182 |
| **6. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| தீவிரவாதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே சிறைச்சாலைகளில் ஏற்பட்ட மோதல்— | 182-203 |
| திரு. சி. ஞானசேகரன் | 182-184 |
| திரு. கே. சுப்பராயன் | 184-186, 201 |
| திரு. ஐ. கணேசன் | 187-188, 200, |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 188-189 |
| திரு. சி. வேலாயுதன் | 189-193 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 191, 192, 202-203 |
| * டாக்டர் க. கிருஷ்ணசாமி | 195 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 195-196 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 197-200 |
| திரு. ஆர். சொக்கர் | 201-202 |


22091


| | பக்கங்கள் |
|---|---|
| **7. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| * திரு. இரா. மணிமாறன் | 203-206 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 206-213 |
| திரு. செ. இராமலிங்கம் | 213-217 |
| திரு. சி. டி. தண்டபாணி | 218-222 |
| திரு. சி. வேலாயுதன் | 222-227 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 225 |
| * திரு. கே. தங்கமணி | 228-234 |
| * திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 234-239 |
| * திரு. ஜி. நிஜாமுதீன் | 239-244 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 243 |
| திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார் | 245-248 |
| **8. அரசினர் தீர்மானம்—** | |
| பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை | 250-251 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 252-253 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 9, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 மார்ச் 23, செவ்வாய்க்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்*
*களைகட் டதனொடு நேர்"*

கொலை முதலிய கொடுமைகள் புரிவோரை, ஓர் அரசு தண்டனைக்குள்ளாக்குவது, பயிரின் செழிப்புக்காகக் களை எடுப்பது போன்றதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 141, டாக்டர் இஎஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**141—**

**தமிழ் மாமுனிவரின் வாழ்க்கை வரலாறு**

***9611—டாக்டர் இஎஸ்.எஸ். இராமன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ் மாமுனிவர் வடவெல்லைத் தந்தை மங்கலங்கிழார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடப் புத்தகங்களில் இடம்பெற அரசு ஆவன செய்யுமா?*

[1999 மார்ச் 23

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இனி வருங்காலத்தில் தமிழ் மாமுனிவர் வடவெல்லைத் தந்தை மங்கலங்கிழார் அவர்களின் வாழ்க்கை வரலாறு இடம் பெறுவது குறித்து பாடநூல் குழு பரிசீலனை செய்ய அறிவுறுத்தப்படும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வடவெல்லையில் இருக்கின்ற என்னுடைய தொகுதியான பள்ளிப்பட்டும், திருத்தணியும் தமிழகத்தோடு இருப்பதற்கு முதுபெரும் காரணமாக இருந்தவர் வடவெல்லைத் தந்தை என்று பாராட்டப்பட்ட மங்கலங்கிழார் என்ற தமிழ் மாமுனிவர். சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் அரசியலில் இருந்த காரணத்தால் அவருடைய பெயர் சிறப்பாக அறியப்பட்டிருந்தாலும், அதற்கு மூல வித்தாக இருந்தவர் பேராசிரியர் மங்கலங்கிழார் ஆவார். ஒரு துறவி போல வாழ்ந்து ஊர் ஊராகச் சென்று தமிழைக் கற்பித்து அன்றைக்குத் தெலுங்குப் பகுதியாக இருந்த என்னுடைய தொகுதியில் பல தமிழர்களை உருவாக்கிய பெருமை அவரைச் சாரும். நான் செய்த பணியைவிட மங்கலங்கிழார் செய்த பணி மகத்தானது என்று திரு.வி.க. அவர்கள் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் அதேபோல, ம.பொ.சி. அவர்கள்கூட தன்னுடைய வரலாற்று நூலிலே மங்கலங்கிழார் என்ற தமிழ் மாமுனிவரின் அழைப்பின் பேரில் யான் வடவெல்லை சென்றேன் என்று குறிப்பிட்டு, தொடக்க வித்தாக அவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நன்றியோடு குறிப்பிடுகிறார்கள். 1953-லே காலமான மங்கலங்கிழார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை, தன்னலமற்ற ஒரு துறவிபோல வாழ்ந்தவருடைய வரலாற்றை பாடப் புத்தகங்களில் வைப்போமேயானால் மாணவர்களுக்கு அது சிறந்த பாடமாக அமையும். ஆகவே, அந்தக் கருத்தினை அரசு பரிசீலித்து, குறிப்பாக தொடக்கக் கல்வி பாடநூலிலாவது அவருடைய வரலாறு எளிமையாக ஆக்கப்பட்டு வைக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தகைய வரலாற்றை இடம்பெறச் செய்வது மற்ற பேரறிஞர்களுடைய வரலாற்றை வைப்பதைவிட சிறப்பாக இருக்கும். ஏனென்றால், துறவிக்குள்கூட நோக்கம் உண்டு. 'துறவிக்குள்கூட நோக்கம் உண்டு' என்று நான் ஒரு கட்டுரை எழுதினேன். அதிலே துறவிக்குள் நோக்கம் இருக்கிறது, மோட்சம் அடைய வேண்டுமென்று......



1999 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அத்தகைய நோக்கம்கூட இல்லாத ஒரு மாபெரும் மனிதராக வாழ்ந்த மங்கலங்கிழாருடைய வரலாற்றைப் பாடப் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிரண்டு விளக்கங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒன்று, பாடப் புத்தகத்தில் இன்னாருடைய வரலாறு வைக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் வலியுறுத்த முடியாது. மிகப் பெரிய தலைவர்களுடைய வரலாறு மட்டும்தான் வரலாறு என்ற முறையில் நான்கு பக்கம், ஆறு பக்கம் என்ற அளவில் பாடப் புத்தகத்தில் இடம் பெறுகிறது. காந்தியடிகள், நேரு போன்றவர்களின் வரலாறு இடம்பெறுகிறது. இன்னும் சொல்லப்போனால், காமராஜருடைய வரலாறுகூட இடம்பெறவில்லை. வரலாறு என்ற முறையில் இடம்பெறவில்லை. அண்ணா அவர்கள் வரலாறுகூட இடம்பெறவில்லை. ஆனால், அவர்கள் சொன்ன கருத்துக்கள் இடம்பெறுகின்றன. திரு.வி.க. வரலாறு இடம்பெறவில்லை. திரு.வி.க. வரலாறு தனிப் புத்தகங்கள் கல்லூரியில் பாடமாகவும், மு.வ. எழுதியதோ அல்லது வேறு ஒருவர் எழுதியதோ இடம்பெறக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, 10-வது வரையில் அல்லது +2 வரையில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தலைவரைப் பற்றிய வரலாற்றை இடம்பெறச் செய்வது என்பது ஒரு நோக்கமாகக் கொண்டு செய்ய முடியாது. மங்கலங்கிழாருடைய பெருமையையோ, புகழையோ வேறு வகையில் ஏதேனும் ஒரு கட்டுரை மூலமாக, கருத்து மூலமாக இடம்பெறச் செய்ய முடியும்.

மற்றொன்று. நோக்கமுடைய துறவி என்று திரு. இராமன் அவர்களே சொன்னார்கள். நோக்கமுடைய துறவிகள் எல்லாம் மாறுபாட்டுக்கு இடம் கொடுக்கக்கூடியவர்கள். அவர் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக நான் பாராட்ட விரும்புகிறேன். நானும் அந்தக் கொள்கை உடையவன். நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். தமிழ்த் தொண்டு பாராட்டத்தக்கது. ஆனால் ஒரு தனிப் பாடமாக வரமுடியுமா என்பதை N.C.E.R.T.-உடைய ஆலோசனையோடு அதே கண்ணோட்டத்தில் பாடத் திட்டங்களை வகுக்கிற அந்தப் பாட ஆசிரியர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது.

[1999 மார்ச் 23

அவர்களுக்கு இப்படி பல ஆலோசனைகளை வழங்குகிறோம். அந்த ஆலோசனைகளிலே, இவரைப்பற்றியும் கருதிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடவெல்லைப் போராட்டத் தியாகி, மங்கலங்கிழார் அவர்கள், வடவெல்லைக்காக பெரிய போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அவரோடு போராட்டத்திற்குச் சென்ற ஒரு சிலருக்குப் போராட்ட நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு வழங்கப்படவில்லை. அதனை அரசு கவனிக்க வேண்டும். இரண்டாவது, 1996 ஆம் ஆண்டிலிருந்து டாக்டர் இராமன் அவர்கள் மங்கலங்கிழாருக்காகப் பேசி வருகிறார். எனவே, அதைக் கருத்திலே கொண்டு, அந்தப் போராட்டத் தியாகியினுடைய — நான் அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன்; அந்தக் குடும்பம் பெரிய குடும்பம்; பெரிய அளவிலே அவர்கள் தியாகம் செய்திருக்கிறார்கள்; போராடியிருக்கிறார்கள்; எதையும் எதிர்பார்க்காமல் செய்திருக்கிறார்கள் — வரலாற்றைப் புத்தகத்திலே பதிக்க இயலவில்லை என்றாலும்கூட, ஒரு சில நிகழ்வுகளையாவது பாடப் புத்தகத்திலே பதிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய இயக்கத்திலே உள்ளவர்கள்தான் எல்லைப் போராட்டங்களைப்பற்றி அதிக முக்கியத்துவம் தர வேண்டுமா, தர வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். என்னுடைய கருத்தைக் கேட்டால், வடவெல்லைப் போராட்டம், தென்னெல்லைப் போராட்டம், மேற்கெல்லைப் போராட்டம், வைக்கம் போராட்டம் என்று எல்லாப் போராட்டங்களும் வர வேண்டும் என்றுதான் விரும்புவேன். ஆனால், சில நேரங்களில், பாட நூல்களைத் தெரிவு செய்கிறவர்கள், புத்தகங்களைத் தெரிவு செய்கிறவர்கள், போராட்ட உணர்வு வரக்கூடிய கருத்துக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்ற ஓர் எண்ணத்திற்கு ஆளாகிறார்கள். இருந்தாலுங்கூட, வரலாறு என்ற அடிப்படையில், எப்படியாவது இடம்பெறச் செய்ய முடியுமானால், அதைப்பற்றி ஆலோசிக்கலாம். மங்கலங்கிழார் அவர்கள் குறித்து, டாக்டர் இராமன் அவர்களுக்கு ஓர் ஈடுபாடு இருக்குமானால், எனக்கும் ஓர் ஈடுபாடு உண்டு.



1999 மார்ச் 23]

என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்த திரு. அம்பிகாபதி அவர்களுடைய அருமைத் தந்தையார் அவர்கள் என்ற வகையில் அந்த ஈடுபாடு எனக்கு உண்டு.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் தொடர்பாக இந்த அரசு ஒரு நூற்றாண்டு விழாவை நடத்தியது. அதிலே, அவருக்குச் சிறப்பு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய இரண்டு நூல்கள் மறுபதிப்புச் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆனால், இவ்வளவு சிறப்பாக மங்கலங்கிழார் அவர்களுடைய பிரச்சினையைத் தொடர்ந்து எடுத்து, அலசி ஆராய்ந்து வருகிற — நீண்ட நாட்களாக அலசி ஆராய்ந்து வருகிற — நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு இராமன் அவர்கள், அந்த விழாவிற்கு ஏனோ வரவில்லை. ஆனால், ஊர்க்காரர்கள் எல்லாம் திரண்டு வந்திருந்தார்கள். அவருக்கு மட்டும் வர வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று கருதுகிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலங்கிழார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை, அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதே நான்தான். அதற்காக, அந்த விழாவை எடுத்ததற்காக, மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்த விழா நடைபெற்ற நாளில், நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியிலே, நான்கைந்து பகுதிகளிலே வந்து சிறப்பு செய்ய ஒப்புதல் அளித்து, எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, அந்த ஓரிரு மணி நேர அவகாசத்திலே, அந்தக் கடமையில் தவறிய உறுப்பினராக நான் இருந்துவிட்டேன். இருப்பினும், அன்னாருக்கு சிறப்பு செய்த தமிழக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 142, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**142—**

**சிங்காரவேலர் வாழ்க்கை வரலாற்றைப் பாடமாக்குதல்**

***14644—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 23

சிங்காரவேலரைப்பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ள அவரது வாழ்க்கை வரலாற்றைப் பாடமாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பாடநூல்கள் யாவும் அச்சிடப்பட்டு, மாணவர்கள் பயன்படுத்தி வருவதால், அடுத்தமுறை பாடநூல்கள் மாற்றி எழுதப்படும்போது, சிங்காரவேலனாரின் வாழ்க்கை வரலாற்றைப் பாடநூல்களில் சேர்ப்பதற்குப் பாடநூல் தயாரிப்புக் குழுவினைப் பரிசீலிக்குமாறு அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவுடைமை இயக்கத்தை இந்தியாவில் தோற்றுவித்தவர்களில் ஒருவரும், மூட நம்பிக்கையை எதிர்த்து, விஞ்ஞான ரீதியில் அரிய பல கட்டுரைகளை எழுதியவரும், இன்னும் சொல்லப்போனால், பேரறிஞர் அண்ணா அவர்களால், மயிலாப்பூரிலே பிறந்திருந்தால், மாஸ்கோவிலே சிலை கேட்டிருப்பார்கள் என்று சொல்கிற அளவுக்குப் பெருமைப்படத்தக்கவருமான சிங்காரவேலனாரின் வாழ்க்கை வரலாறு அடுத்த ஆண்டு பாடநூல்களில் சேர்க்கப்படும் என்று மாணபுமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர்க்கப்படும் என்ற உறுதியைக் கூற அமைச்சருக்கு உரிமை கிடையாது. சேர்ப்பது பற்றிப் பரிசீலியுங்கள் என்று பாடநூல் கழகத்தைக் கேட்டுக்கொள்ளத்தான் உரிமையுண்டு. கேட்டுக்கொண்டுவிட்டேன் என்றுதான் தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் விழிப்படைவதற்கு முன்பு விழிப்படைந்த மறக்க முடியாத ஒரு மகத்தான மனிதர் சிங்காரவேலர். அவர் வாழ்ந்த காலத்தில் வலியுறுத்திய அறிவியல்பூர்வமான கருத்துக்களைத் தமிழ்நாட்டுப் பாடத் திட்டத்திலே இணைத்துக்கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல்பூர்வமான அடிப்படைக் கருத்துக்களை யார் சொன்னாலும், அவை ஒருவருக்கே தொடர்பு உடையதல்ல. அறிவியல்பூர்வமான கருத்துக்கள் பாடப் புத்தகங்களில் இடம்பெற வேண்டிய பகுதிகள் இடம்பெற்று வருவது உண்மை. ஆனால், சிங்காரவேலனார் அவர்களுடைய பெயரால் செய்யக்கூடிய வாய்ப்புகள் சற்றுக் குறைவு. அவருடைய வரலாறு, அவருடைய சமூகத் தொண்டு, அவருடைய நாட்டுப் பணி, இன்னும் சொல்லப்போனால், பொதுவுடைமை இயக்கப் பணி என்று இடம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்தால்தான் வரலாறு என்ற முறையில் இடம்பெறும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய உற்ற நண்பராக, மிகச் சிறந்த சிந்தனையாளராக, பகுத்தறிவுவாதியாக வாழ்ந்த மரியாதைக்குரிய சிங்காரவேலனார் அவர்களுடைய கட்டுரைத் தொகுப்புகளும் மற்றவையும் உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவை ஆய்வுக்குரியனவாகவும் இருக்கின்றன. எனவே, அவற்றைக் கல்லூரிகளிலே பாடப் புத்தகங்களிலே சேர்க்கக்கூடிய அளவிற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்வதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அறிவியல் துறையில், உலகத்தில் அறிவியல் விஞ்ஞானிகள் கண்ட உண்மைகளைத்தான் சிங்காரவேலனார் அவர்கள் நமக்கு எடுத்துச் சொன்னார்கள். அவர்களே கண்டுபிடித்த அறிவியல் உண்மைகள் என்று எதையும் கூறிக்கொள்ள முடியாது. Neither invention nor discovery. அவர்கள் உலகத்தார் அறிந்த உண்மைகளை, இந்த நாடு, தமிழர்கள், தமிழ்நாட்டு மக்கள் அறியாத ஒரு நிலையில் கண்மூடித்தனத்திலே இருக்கிறார்கள் என்பதற்காகப் பகுத்தறிவு விளக்கங்களை நமக்குக் கொடுத்தார்கள். அதைப் பரப்புகிற பணியைத்தான் நாம் ஓரளவு செய்து கொண்டிருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களுக்கு அதனாலேதான் சிங்காரவேலனாரிடத்திலே

[1999 மார்ச் 23

ஈடுபாடு. ஆனால், அறிவியல் கருத்துக்களைச் சொல்கிறபோது நியூட்டன் தொடங்கி ஐன்ஸ்டீன் வரையில் வெவ்வேறு விதமான அந்தக் கருத்துக்கள் பள்ளி மாணவர்களுடைய வயதிற்கு மற்றும் படிப்பிற்கு ஏற்ற முறையில் இடம் பெறுகின்றன. அதிலே ஓர் அத்தியாயமாக சிங்காரவேலனார் இடம்பெறக்கூடிய வாய்ப்பில்லை. பெரியார் அவர்கள் விஞ்ஞான கருத்துக்களைச் சொல்கிறபோது பெரியார் அவர்களுடைய பெயர் அதிலே இடம் பெறாது. ஆனால், மக்களை பகுத்தறிவு வழியிலே திருப்புவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் இடம்பெறும். எனவே, அந்த முறையிலேதான் அந்தக் கருத்துக்களைப் பாடநூல் திட்டத்தில் இடம்பெறச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோராலும் பாராட்டப்படுகிற மிகச் சிறப்பிற்குரிய சிங்காரவேலனார் பற்றிய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி வருகிற இந்த வேளையில், மாமேதை சிங்காரவேலனாருடைய திருவுருவப் படத்தை நமது சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டப்பேரவையில் வைப்பதற்குரிய திருவுருவப் படங்கள் வேறு; மக்களுடைய மனதிலே வைத்து பாராட்டப்பட வேண்டிய படங்கள் வேறு. மக்கள் மனதிலே வைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கொள்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *143* மற்றும் *144*, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய இவ்விரு வினாக்களும் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண் *145*, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.



1999 மார்ச் 23]

**145—**

**தனி வட்டாட்சியர் அலுவலகம்**

***17554—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதிக்கு தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனந்தமங்கலம், தின்னலூர், ஓரத்தி ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கும் அங்கிருந்து செய்யூர் செல்வதற்கும் ஏறக்குறைய 50 கி.மீ. தூரம் இருக்கிறது. மேலும் அங்கிருந்து செல்ல வேண்டுமானால் இரண்டு பேருந்துகள் மாறிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அச்சரப்பாக்கத்திலேயே ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எனது பதில் இதுவாகும். புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தும்போது மாவட்டத் தலைநகரங்களிலுள்ள அனைத்து அலுவலகங்களையும் ஒரேயிடத்தில் அமைக்க, மாவட்ட பெருந்திட்ட வளாகங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றபின் நான்கு புதிய மாவட்டங்கள், எட்டு புதிய வருவாய்க் கோட்டங்கள், *24* புதிய வட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கியுள்ளது. அவை அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் *234* சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. *234* சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தனி வட்டாட்சியர் அலுவலகம் அமைப்பது என்பது தற்போதுள்ள நிதிநிலையில் இயலாத காரியம். பிரச்சினை முடிந்து போயிற்று.

[1999 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, திரு. சி. கோபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**146—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்**

***4861—திரு. சி. கோபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டுத் தொகுதி, சின்னக்கோவித்தம்பாடி கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோவித்தம்பாடி, பள்ளிகொண்டான் பேரூராட்சியிலே இருக்கின்ற ஒரு கிராமம் ஆகும். இந்தக் கிராமத்திலே தற்போது விசைப்பம்பு மூலமாக நேரடியாகத் தண்ணீர் விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலாவது இங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, அதன் மூலமாகத் தண்ணீர் விநியோகம் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னக்கோவித்தம்பாடி என்பது பள்ளிகொண்டான் பேரூராட்சியில் ஒரு பகுதி. பள்ளிகொண்டானிலிருந்து ஏறத்தாழ 3.5 கிலோமீட்டர் தூரத்தில் அது இருக்கிறது. தற்போது, அந்தக் குடிநீர் திட்டத்தைப் பயன்படுத்துகிற பகுதியில் ஆயிரம் பேர் வசிக்கிறார்கள். பக்கத்தில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பொதுக் கிணறு



1999 மார்ச் 23]

அமைத்து, நேரடியாகத் தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ஆனால், நாம் நிர்ணயித்த அளவிற்கு தண்ணீர் கொடுக்க முடியாமல் இருப்பது உண்மை. ஆனாலும், அதற்கென அதிகமாகச் செலவழிப்பதற்கு அஞ்சி, அதற்கு சற்றுக் குறைவாக ஏதாவது தொகை செலவழித்துச் செய்யலாமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறேன். அதற்கான ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 147, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**147—**

**திருநகர் பகுதியைப் பொழிச்சலூருடன் சேர்த்தல்**

***14742—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் வட்டம், அனகாபுத்தூர் பேரூராட்சி எல்லையில் உள்ள திருநகர் பகுதியைப் பொழிச்சலூர் கிராமத்தோடு சேர்த்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநகர் பகுதி, அனகாபுத்தூர் பேரூராட்சி எல்லையில் இருந்தாலும், அனகாபுத்தூரிலிருந்து இங்கு வருவதற்கு வழியே கிடையாது. பம்மல் எல்லை வழியாக, பொழிச்சலூர் எல்லை வழியாக வந்து போக வேண்டிய நிலை இருக்கிறது. அங்கே இருக்கிற மக்களுக்குக் குடிதண்ணீர்கூட பொழிச்சலூர் எல்லையிலே ஒரு மூலையிலே குழாய் அமைத்து அதிலேயிருந்துதான் தண்ணீர் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, எந்தத் தொடர்பும் இல்லாத இந்த இடத்தை, பொழிச்சலூர்

[1999 மார்ச் 23

கிராமத்தோடு சேர்த்துவிட்டால் நன்றாக இருக்கும். வசதிகள் செய்வதற்கு பொழிச்சலூர் கிராமமும் தயாராக இருக்கிறது என்கிற காரணத்தினால், அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு—சாலை இல்லை என்கிற காரணத்திற்காகவும், குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியவில்லை என்கிற காரணத்திற்காகவும், ஒரு பஞ்சாயத்தை ஒரு நகராட்சியோடு சேர்ப்பது, ஒரு நகராட்சியை பஞ்சாயத்தோடு சேர்ப்பது என்ற முறை அவ்வளவு நல்ல முறை அல்ல. இருக்கிற நிலைமைக்கேற்ப எப்படிப் பாதைகள் அமைப்பது, குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது என்பதுதான் முக்கியம். அதற்கான கருத்துருவிற்கு நிச்சயமாக இந்த அரசு ஏற்பாடு செய்யும். இன்னும் உங்களுக்குச் சொல்கிறேன், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வந்ததற்குப் பிறகு புதியதாக வார்டுகளை மாற்றியமைப்பதோ, ஊராட்சிகளை பிரித்தமைப்பதோ, அவ்வளவு சாத்தியம் இல்லை. அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு நாடு பூராவும் பரிசீலித்து, எது எதற்கு இப்படி அத்தியாவசியமான திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதைப்பற்றி அரசுக்குத் தெரிவிக்குமேயானால், அதன் அடிப்படையில் இதைப் பரிசீலிக்கலாம். பொதுத் தேர்தல் அல்லது உள்ளாட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் வருகிற நேரத்திலேதான் அதைப்பற்றிப் பரிசீலிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்ல, அதைச் செய்து தருவதற்குரிய வாய்ப்புகளே இல்லை. அந்தப் பேரூராட்சியிலிருந்து இந்த இடத்திற்கு வருவதற்கு வாய்ப்புகளே இல்லை என்கிற காரணத்தினால், பொதுத் தேர்தல் வருகிற நேரத்திலாவது, இப்போதிருந்தே இதை அடிப்படையாக எடுத்துக்கொண்டு, அந்தக் குழுவிற்கு சிபாரிசு செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பொழிச்சலூரோடு இணைப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்பதற்கு முன்னாலேயே பரிசீலிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்துரு இந்த அரசில் உருவாக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும், எப்படியும் 3 ஆண்டுக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு உரிமைக் காலம் இருக்கிறது. இதற்கிடையில் இப்படியெல்லாம் வருகிற மனுக்களையெல்லாம் சேர்த்து, பரிசீலித்து, நிச்சயமாக நடவடிக்கை தேவைப்பட்டால், எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**148—**

## வெள்ள நீரினைச் சேமிக்கும் திட்டம்

***7921—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ளக் காலங்களில் வெள்ள நீரினைச் சேமித்து அதனைப் பயன்படுத்திடும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வெள்ளக் காலங்களில் தாமிரபரணி ஆறு மற்றும் அதன் கிளை நதிகளின் வெள்ள நீரைச் சேமிக்க நீர்த்தேக்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டு வடக்குப் பச்சையாறு, அடவிநயினாறு போன்ற நீர்த்தேக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சடையநேரி விரிவாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. மேலும் கடனா விஸ்தரிப்புத் திட்டம், இலுப்பையாறு திட்டம், ஜம்புநதி திட்டம்

[1999 மார்ச் 23

மற்றும் மருதூர் அணையின்கீழ் அமையும் Wet-Regulator போன்ற இதர திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்பொழுது திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் பயன்பெறும்.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் வீணாகக் கடலில்கலக்கக் கூடிய நீரைச் சேமித்து வைக்க திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில், பல்வேறு அணைத் திட்டங்களை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் சீரிய முறையிலே ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதற்கான அடிப்படைப் பணிகள் எல்லாம் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மானாவாரி குளங்கள் அதிகமாக இருக்கின்றன. இந்தக் குளங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடைய குளங்கள். இந்தக் குளங்களுக்குள் ஓர் இணைப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் மாவட்டம் முழுவதிலும் உள்ள பல்வேறு குளங்கள் பயன்பெறும். ஒரு மழை பெய்தால் தூத்துக்குடிக்கு அருகிலுள்ள புதுக்கோட்டையிலுள்ள உப்பாறு ஓடையின் மூலம் கிட்டத்தட்ட 20 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது என்று கணக்கிட்டுச் சொல்கிறார்கள். அதேபோன்று வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரைச் சேமித்து வைப்பதற்கு 'எப்போதும் வென்றான்' திட்டம் போல, உப்பாறு ஓடையில் ஓர் அணையை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் வெள்ளக் காலங்களில் ஏற்படுகிற மிகையான நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது மூலக் கேள்வி. தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் வெள்ளக் காலங்களில் மிகுதியாக தாமிரபரணியிலே தண்ணீர் வரும். காரணம், தமிழ்நாட்டில் இருக்கிற ஒரு ஜீவ நதி அதுதான். ஒரு காலத்தில் அதன்மீது 8 அணைகள் மட்டும் கட்டப்பட்டிருந்தன. எனவே தண்ணீர் வீணாகக் கடலில் கலந்து கொண்டிருந்தது. பிறகு மணிமுத்தாறு கட்டப்பட்டிருக்கிறது.



1999 மார்ச் 23]

அதற்குப் பிறகு மணிமுத்தாறுக்குக் கீழே கடையம் பகுதியிலே ஜம்பு நதி அணையும், இராமா நதி அணையும் கட்டப்பட்டிருக்கின்றன. அதையடுத்து குண்டாறு System, சித்தாறு System, இவற்றில் எல்லாம் அணைகள் கட்டிக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு மழை மிகுதியாகப் பொழிகின்ற காலங்களில் 2971 மில்லியன் கன அடி தண்ணீர் கடலில் கலக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஸ்ரீ வைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழே ஓர் அணை கட்டினால், அந்தத் தண்ணீரை வறட்சிப் பகுதியான சாத்தான்குளம் பகுதிக்கு அனுப்பமுடியுமா என்பது குறித்து ஆய்வு செய்யச் சொன்னார்கள். அதை நடத்தியிருக்கிறோம். ஆனால் நிலத்தினுடைய அமைப்பு முறை சரிப்பட்டு வராத காரணத்தால் மருதூருக்கு மேலேயோ, மற்ற இடங்களிலேயோ அணை கட்டுவதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளும்படி முதல்வர் அவர்கள் பணித்திருக்கிறார்கள். அது குறித்து பொதுப் பணித் துறை ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது.

இரண்டாவதாக, அவர்கள் கேட்டது உப்பாறு பகுதியிலே அணை கட்டுகிற நிலை. அதுவும் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் மழைக் காலங்களில் மிகுதியான நீர் கடலில் கலக்கிறது என்பது உண்மைதான். அவற்றைத் தடுத்து நிறுத்தி விவசாயிகளுக்குப் பயன்படுத்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஸ்ரீவைகுண்டம் பாலத்தின் பக்கத்தில் அணை கட்டுவதைப்பற்றிச் சொன்னார்கள். வறண்ட பகுதியான எங்கள் சாத்தான்குளம் பகுதிக்கு அதைத் திருப்பி விடுவதற்குத் திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். உண்மையிலேயே மிகக் குறைவான அளவு மழை பெய்யக்கூடிய பகுதி சாத்தான்குளம் பகுதி. எனவே அந்த அணைக்கட்டைக் கட்டி வாறுகால் மூலம் சாத்தான்குளம் வட்டம் முழுவதற்கும் தண்ணீர் பாய்வதற்கும், கடலில் விழுவதைத் தடுத்து இங்கே பாயச் செய்வதற்கும் அமைச்சரவர்கள் திட்டத்தைத் தீட்டுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குக் கீழே ஓர் அணை

[1999 மார்ச் 23

கட்டுகிறேன் என்று சொல்லவில்லை. கட்ட வாய்ப்பு உண்டா என்றுதான் முதல்வர் அவர்கள் என்னை ஆராயச் சொன்னார்கள். ஆராய்ந்து பார்த்ததிலே, கட்டப்பட்டால் அணையில் இருக்கிற தண்ணீர் சாத்தான்குளம் பகுதிக்குப் போக முடியாது. அணை பள்ளத்திலேயும், நிலம் மேட்டிலேயும் அமைந்துவிடுகிறது. ஆகையினாலேதான் எந்தெந்த உப நதிகள தாமிரபரணியில் வந்து கலக்கின்றனவோ அந்த உப நதிகளின் தண்ணீரை எங்கே தேக்கி வைக்கலாம் என்று முடிவு எடுத்த பிறகுதான் களக்காட்டுப் பகுதியிலே உற்பத்தியாகிற பச்சையாற்றிலே ஓர் அணையும், அதேபோன்று செங்கோட்டைப் பகுதியிலே அடவிநயினாறிலே ஓர் அணையும் மற்றும் ஜம்பு நதியிலிருந்து வருகிற கடனா விரிவாக்கத்திலும் அணைகள் கட்டுவதற்கு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டேவிட் செல்வின் அவர்கள் உப்பாறுப் பகுதியில் தண்ணீரைத் தடுத்து நிறுத்தினால் வீணாகாது என்கிறார். அது யோசிக்கப்பட வேண்டியது. அதுகுறித்து அரசு முடிவு எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் பகுதியில் கோரையாறு அணைத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப் படாத நிலையில் உள்ளது. அந்த அணையைக் கட்டுவதற்கு அரசு உடனடியாக முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கோரையாறு குறித்தும் ஆய்வில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றில் ஏறத்தாழ இரண்டு மாதங்கள்வரை தண்ணீர் பெரும் வெள்ளமாகக் கடலில் சென்று கொண்டிருக்கிறது. அந்தத் தண்ணீரை, தெற்கு நோக்கி சாத்தான்குளம் பகுதிக்கும், இராதாபுரம் பகுதிக்கும், நாங்குநேரிப் பகுதிக்கும் திருப்பினால் நலமாக இருக்கும். அந்தப் பகுதி வறண்ட பூமியாக இருக்கின்றது. இந்தத் தண்ணீரைத் திருப்பிவிட்டால் நிச்சயமாக பொன் விளையும் பூமியாக மாறிவிடும். ஆகவே, தாமிரபரணி ஆற்றில் எந்த இடத்திலே இருந்து தண்ணீரைக் கொண்டு போவதற்கு வாட்டமாக இருக்கிறதோ,



1999 மார்ச் 23]

எங்கேயிருந்து கொண்டுபோக முடியுமோ அதைப் பார்த்து நிச்சயமாக அந்தத் தண்ணீரை தெற்கு நோக்கித் திருப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்தச் செயற்குறிப்பு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நான் திருப்பித் திருப்பி அதைத்தான் சொல்ல முடியும். தாமிரபரணியாற்றிலே மிகையாக தண்ணீர் வெள்ளக் காலங்களிலே கடலில் கலக்கிறது. 8 அணைக்கட்டுகள்தான்—அணைக்கட்டுகள் என்று பெயரே தவிர அவை எல்லாமே Check Dam கள்தான். கோடை நதிநீர் அணைக்கட்டு, நதி உருணை அணைக்கட்டு மற்றும் இருக்கிற அணைக்கட்டுகள் எல்லாம் அப்படிப்பட்டவைதான் ஆனால் அந்தத் தண்ணீரைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று ஒரு காலத்திலே மணிமுத்தாறு என்று ஓர் அணை மட்டும்தான் கட்டப்பட்டது, 20 ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். ஆனால், கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆனபிறகுதான் கடனா நதி, இராமா நதி, இப்போது கட்டிக் கொண்டிருக்கிற அடவிநயினார், பச்சையாறு, அதேபோன்று மேற்கே இருக்கிற கருப்பா நதி, அனுமா நதி, அரிகரா நதி ஆகிய நதிகளில் கட்டப்பட்ட அணைகளெல்லாம் அந்தந்த உப நதிகளிலே வருகிற தண்ணீரைத் தேக்கி அந்தப் பகுதிக்கு நீரைத் தரவேண்டும் என்பதற்காக. இத்தனைக்கும் மேலாக மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் சடையநேரி கால்வாய்க்கு, மருதூர் அணைக்கட்டிலிருந்து தண்ணீரைக் கொண்டு போகிற அந்தத் திட்டத்திற்கும் 12 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, தாமிரபரணியில் தண்ணீர் ஒரு சொட்டுகூட வீணாகக் கூடாது; அவற்றைப் பயன்படுத்த வேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் எனக்குப் பலமுறை அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதுகுறித்து என்னுடைய இலாகா ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல அணைகள் கட்டுவதற்கு, இந்த அரசு நல்ல திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்தத் தண்ணீர் வீணாகி விடாமல் தடுப்பதற்கு எனது தொகுதியிலுள்ள எலுமிச்சையாறு திட்டம், ஜம்பு நதித் திட்டம் போன்ற திட்டங்களையும் சேர்த்து

நிறைவேற்றுவீர்களானால் முழுமையான தண்ணீர்ப் பாதுகாப்பு கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். அதேபோன்று மூலக் கேள்வியிலேயே 'மழைக் காலங்களில் வீணாகச் செல்லுகின்ற நீர்' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அணை என்று சொல்லப்படவில்லை. பொதுவாக தண்ணீர் வீணாவதைப் பற்றித்தான் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அந்த வகையிலே, அணைகளிலே நீங்கள் தண்ணீரைத் தடுத்துவிட்டீர்கள். ஆனால் ஊர்களிலே போகின்ற தண்ணீர் எல்லாம் ஆற்றிலே விழுந்து நிச்சயமாக வீணாகத்தான் கடலிலே கலக்கும். ஆகவே, ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டுகின்ற திட்டத்தோடு பெரிய ஏரிகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, ஆறுகளிலேதான் Check Dam கட்டுகிறோம்; அணைகளைக் கட்டுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோர்வைக் குளங்கள் எல்லாம் தொகுத்துத் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கென்று தனித் திட்டம் வரவிருக்கிறது. ஏரிகளில் குறிப்பாக, பேய்க்குளம், பரம்பிக்குளம், பாண்டிக்குளம் என்று அந்தப் பகுதியிலே இருக்கிற குளங்களையெல்லாம் இணைத்து அதற்காக தனிக் கால்வாய்களையும் வெட்டுகிற திட்டத்தைப் பற்றியும் இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது. எனவே, குளங்களை ஆழப்படுத்துகிற ஒரு திட்டம், ஆற்றுக்குக் குறுக்கே சிறு சிறு அணைகளைக் கட்டுகிற ஒரு திட்டம், பெரிய பெரிய அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி கால்வாய் மூலம் அதைக் கொண்டுபோகின்ற ஒரு திட்டம் ஆகிய இந்த 3 திட்டங்களும் ஒரு சேர நடவடிக்கையில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நன்கு அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் 100 ஆண்டுகளாக நீடித்த ஒரு காரியம். அந்த 100 ஆண்டுகளாக நீடித்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இன்று முதல்வர் அவர்கள், உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற 23 கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதன் மூலமாக சுமார் 20,000 ஏக்கர்களுக்குப் பாசன வசதி ஏற்படக்கூடும். ஆகையினால் எங்கள் சார்பாகவும் தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய இதயபூர்வமான நன்றியையும்





வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முந்தைய எம்.ஜி.ஆர். அரசு காலத்திலேயும் நான் கடுமையாக வலியுறுத்தினேன்; நடைபெறவில்லை. முந்தைய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் இருந்திற காலத்திலேயும் கடுமையாக வலியுறுத்தியும் அதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். ஆகையினால் என்னுடைய தொகுதியான வாசுதேவநல்லூரில் பூலித்தேவன் சிலை திறப்பு விழாவிற்கு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் இந்தத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். நிச்சயமாக சட்டமன்றத்தில் அறிவிக்கிறேன், நல்ல முடிவாக இருக்கும் என்று அன்று அறிவித்தார்கள். அந்தத் திட்டத்தை இன்று அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் ஆளுநர் உரைக்கடுத்தும், அவர்களிடம் இதைப்பற்றி நேரடியாக மனுவாகக் கொடுத்து வலியுறுத்தியிருந்தேன். ஆகையினாலே மக்கள் பாராட்டக்கூடிய அளவில் சுமார் 30 கிலோமீட்டர் சுற்றளவுக்குக் குடிநீர் வசதியும், பாசன வசதியும், மேலும் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு விவசாய உற்பத்தியைக் கொடுப்பதற்கும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நேரடியாக வினாவிற்கு வாருங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பொதுப் பணித் துறை குளங்களிலே ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. கால்வாய்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. தொகுதிக்கு ஒரு குளம் என்பதை இரண்டு குளங்களாக அதிகப்படுத்தி அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

முற்பகல் 10.00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்ளாறு திட்டத்தைத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். உள்ளாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கலைஞர் அவர்கள், இப்போது அல்ல, 1989 ஆம் ஆண்டே எனக்கு அறிவுறுத்தினார்கள். அப்போது அமைச்சராக இருந்த திரு. தங்கவேலு அவர்கள் அதுகுறித்து கலைஞர் அவர்களிடத்திலே பல முறை கடிதங்கள் கொடுத்தார்கள். நண்பர் திரு. ஈஸ்வரன் அவர்களுக்கே தெரியும். ஆறு மைல்கள் வெயிலிலே நடந்து போனேன். அவரும் வந்திருந்தார்.

[1999 மார்ச் 23

திரு. தங்கவேலு அவர்களும் வந்து என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால்—அது சங்கரன்கோவிலுக்கு அருகே நிறைவேற்றப்படுகிற திட்டம், சங்கரன்கோவிலுக்கு குடிதண்ணீர் பிரச்சினை தீரும் என்பது சங்கரன்கோவில் தொகுதிவாழ் பெருமக்களுடைய எதிர்பார்ப்பு. அதேபோல வாசுதேவநல்லூர் தொகுதியும் பயனடையும். எனவே, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் - 1989-லே கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட திட்டம்தான் கனிந்து இப்போது அந்தத் தொகுதிக்குத் திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். சுருக்கமாக நான் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு மட்டும் இந்தப் பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அணைகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்களுக்காக இந்த மூன்று ஆண்டு காலத்திலே கலைஞர் அவர்கள் 200 கோடி ரூபாயை இந்த இரண்டே மாவட்டங்களுக்குத் (மேசையைத் தட்டும் ஒலி) தந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிகமான பணம் பெற்ற மாவட்டங்கள் இந்த இரண்டு மாவட்டங்கள்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *149*, திரு. லா. சந்தானம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**149—**

**தடுப்புச் சுவர் கட்டுதல்**

***15673—திரு. லா. சந்தானம்:**

*மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, வைகை ஆற்றில் வெள்ளம் வரும்போது குருவித்துறை, முள்ளிப்பள்ளம், மன்னாடிமங்கலம் போன்ற தாழ்வான பகுதிகளில் சேதம் விளைவிப்பதைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் உங்களுக்கு அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** Sir, எனக்கு வாய்ப்பு கொடுங்கள். திரு. சந்தானம் இல்லாததால் எனக்கு அனுமதி கொடுங்கள். One more question. நான் தினமும் இதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறேன் Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் இதைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறீர்களே? சரி, சீக்கிரம் வினாவாகக் கேளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருசநாடு பகுதியிலேயும், கம்பம் பகுதியிலேயும் மழை பெய்யும்போது திலக்கோட்டை தொகுதியில் குன்னாறுங்கோட்டையிலிருந்து சோழவந்தான் வரைக்கும் வெள்ளம் அதிகமாக ஏற்பட்டு அந்தக் கரைகள் எல்லாம் உடைந்து அதனால் பல ஊர்களே அடித்துக்கொண்டு போய்விடுகின்றன. ஆகையினாலே, இந்தத் திட்டத்தை எடுக்கும்போது குன்னாறுங்கோட்டை, சோழவந்தான் வரைக்கும் இந்தத் திட்டத்தைப் போட்டு கரைகளைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்தத் திட்டம் நிறைவேறுகிறபோது அம்மையார் சொன்ன கருத்தும் ஆய்வில் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *143*, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**143—**

**கண் மற்றும் பல் மருத்துவப் பிரிவு தொடங்குதல்**

***7616—திரு. பி.என். சுப்பிரமணி:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[1999 மார்ச் 23

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவு மற்றும் பல் மருத்துவப் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆற்காடு தொகுதி, ஆற்காடு வட்டம், ஆற்காடு நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் பல் மருத்துவப் பிரிவு உள்ளது. கண் மருத்துவப் பிரிவு தற்போது இல்லை. உலக வங்கி நிதி உதவியில் ரூ.31 இலட்சம் செலவில் தேசிய கண்ணொளி இழப்புத் திட்டத்தில் 16 படுக்கைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை அரங்குடன் கூடிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 144, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**144—**

**அவசர விபத்துப் பிரிவு தொடங்குதல்**

***16685—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியிலுள்ள அரசு பொது மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாட்ராம்பள்ளியில் அரசு பொது மருத்துவமனை செயல்படவில்லை. ஆனால், அங்கு 24 மணிநேரமும் செயல்படும் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதில் அவசர விபத்துப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.



1999 மார்ச் 23]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி, சென்னை-பெங்களூர் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. எங்கள் பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்துக்கள் ஏற்படுகின்றபோது வேலூர் அல்லது பெங்களூர் போன்ற ஊர்களில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு செல்கின்றபோது, வழியிலேயே விபத்துக்கு ஆளானவர்கள் இறந்து விடுகிறார்கள். கடந்த ஆண்டுகூட ஆம்பூர் அருகே எனக்கு ஏற்பட்ட விபத்தில் நான் C.M.C. போன்ற நல்ல வசதிகள் கொண்ட மருத்துவமனைக்குச் சென்றதால் உயிர் பிழைத்துக் கொண்டேன். என்னோடு வந்த இரண்டு மாமனிதர்கள் அப்போதே இறந்துவிட்டார்கள். இதையெல்லாம் மனதில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலே எங்களுடைய நாட்ராம்பள்ளியில் செயல்படுகின்ற 24 மணிநேர மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 24 மணி நேரமும் செயல்படும் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தர இயலாது. ஏற்கெனவே நெடுஞ்சாலையில் 100 கிலோமீட்டருக்கு ஓர் இடத்தில் இப்படிப்பட்ட அவசர விபத்துக்கான பிரிவைத் தொடங்க வேண்டுமென்று முதல்வரவர்கள் திட்டமிட்டு இப்பொழுது வாலாஜா, வேலூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் எல்லாம் அவசர விபத்துப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 150, திரு. வி. அய்யலுசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

150—

## கோவில்பட்டியிலிருந்து விரைவுப் பேருந்துகள்

***15573—திரு. வி. அய்யலுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோட்டம்-1) மூலம் கோவில்பட்டி - கோயம்புத்தூர், கோயம்புத்தூர்-கோவில்பட்டி என இரண்டு பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தடம் எண் 626 திருநெல்வேலி-கோவை இயக்கப்படுகிறது. அதில் கோவில்பட்டிக்கு 25 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே, தனியாகப் பேருந்து இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவில்பட்டிக்கும் கோயம்புத்தூருக்கும் மக்கள் அதிகமாகத் தொழில் விஷயமாகச் செல்லக்கூடிய சூழ்நிலை உள்ளதால் இந்த 25 இருக்கைகள் போதவில்லை. ஆகவேதான் கோவில்பட்டிக்கும் கோயம்புத்தூருக்கும் 2 பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அந்த 2 பேருந்துகளைத் தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயக்கித் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வழித்தடம் 626 மட்டும் இல்லாமல், நாகர்கோவில்-கோவை செல்லுகின்ற பேருந்து 664; கன்னியாகுமரி-கோவை செல்லுகின்ற பேருந்து 664A, திசையன்விளை-கோவை செல்லுகிற பேருந்து 665, பாபநாசம்-கோவை செல்கிற பேருந்து 666 ஆகிய அனைத்துப் பேருந்துகளும் கோவில்பட்டி வழியாகத்தான் கோவைக்குச் சென்று கொண்டிருக்கின்றன. ஆகவே, பயணிகள் ஓரளவுக்கு இந்தப் பேருந்துகளின் மூலமாகச் செல்ல முடியும். மேலும்,



இரவுப் பேருந்துகளின் மூலமாக 400 கிலோமீட்டர் தூரத்திற்கு மேற்பட்ட வழித்தடங்களில் மட்டுமே விரைவுப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. குறைந்த தூரங்களுக்கு மற்ற போக்குவரத்துக் கழகங்களின் மூலமாகப் பேருந்து வசதிகள் ஏற்படுத்திக்கொள்ளவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அப்படி வருகிறபொழுது அந்தப் பேருந்துகளின் மூலமாக இதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய விரைவுப் பேருந்துகளெல்லாம் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில், இரயில் போக்குவரத்து ஓரளவுக்கு நம்முடைய demand ஐச் சமாளித்துக் கொண்டிருக்கிறது. எங்களுடைய வட மாவட்டத்து மக்கள் எல்லாம் பயணம் செய்து தென் மாவட்டங்களுக்குப் போக வேண்டுமென்று சொன்னால், Nellai Express ஒன்றுதான் எங்களுக்கு ஒரே வழியாக இருக்கிறது. ஜோலார்பேட்டை, காட்பாடி மற்றும் மொரப்பூர் வழியாக, சேலம் வழியாகச் செல்லக்கூடிய T.T. Express வருகிற மாதம் 19 ஆம் தேதியிலிருந்து நிறுத்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்ததால் இன்று எங்களுடைய மாவட்டத்து மக்களெல்லாம் அந்த இரயிலைத் தொடர்ந்து அந்த வழியாகவே விட வேண்டுமென்று போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் மத்திய அரசுக்கு எழுத வேண்டும், எப்படியாவது அந்த இரயிலை divert செய்யாமல், Egmore லிருந்து நெல்லைக்கு வருகிற 19 ஆம் தேதியிலிருந்து விடப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படியில்லாமல், பழையபடி வட மாவட்டங்களையும் தென் மாவட்டங்களையும் இணைக்கக்கூடிய அந்த ஒரே இரயிலைத் தொடர்ந்து இயக்குவதற்கு மாண்புமிகு முதல்வரவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் நடவடிக்கையெடுப்பார்களா? மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்தை இப்பொழுதுதான் சொல்லியிருக்கிறார். நிச்சயமாக அரசின் மூலமாக இரயில்வே துறையிடம் அதற்குரிய பரிந்துரையைச் செய்ய முயற்சிக்கலாம்.

[1999 மார்ச் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு இயக்கும் விரைவுப் பேருந்துகளில், குறிப்பாக சென்னையிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் பேருந்துகளில் பல பேருந்துகள் இன்று நல்லமுறையில் செயல்படாத, ஓரளவுக்குப் பழுதடைந்துள்ள ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் தனியார் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படுகின்றன. அதாவது மார்த்தாண்டம் பகுதியிலிருந்து 11 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவையெல்லாம் நமக்கும் அரசாங்கத்திற்கும் பெரிய இழப்பை ஏற்படுத்தித் தருகின்றது. இந்தக் காரணத்தினால் திருவனந்தபுரம்-சென்னை தடத்தில் புதிய பேருந்துகளை அறிமுகம் செய்வது வசதியாக இருக்கும். அதோடு இரயிலினுடைய நிலையைப் பார்க்கின்றபொழுது அதில் மிகப் பெரிய நெருக்கடி உள்ளது. எனவே, திருவனந்தபுரம்-கன்னியாகுமரி-சென்னை என்று ஒரு புதிய இரயில் தடத்தைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, ஆவன செய்ய அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வோராண்டும் புதிய வழித்தடங்கள் இரயில்வேயின் மூலமாக விட வேண்டுமென்று அரசு அவ்வப்பொழுது இரயில்வே துறைக்கு எழுதியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் அரசு மத்திய அரசுக்கு வலியுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி-கோவை வழித்தடத்தில் 25 இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மேலும் 2 பேருந்துகளை இயக்கி, 25 இருக்கைகள் என்பதை 50 ஆக உயர்த்திடுவதற்கு அரசு முன்வருமா? அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு என்னுடைய பதிலிலே குறிப்பிட்டிருக்கிறேன். அரசு, விரைவுப் பேருந்துகளை 400 கிலோ மீட்டருக்கு மேல் மட்டுமே இயக்க வேண்டுமென்று முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. கோவில்பட்டியிலிருந்து கோவை வரையிலான தூரம் சுமார் 330



1999 மார்ச் 23]

கிலோமீட்டர்தான். ஆகவே, மற்றப் போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக அந்த வழித் தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு வருங்காலத்தில் முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கடந்த 1997 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதிக்கு இரண்டு பேருந்து வழித்தடங்கள் என்ற அடிப்படையிலே வழங்கியதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் இன்றளவும் பொதுமக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டுகூட அதுபோலக் கொடுக்க வேண்டுமென்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன். கடந்த ஆண்டு அளிக்கவில்லை. எனவே, இந்த ஆண்டு மீண்டும் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இரண்டு பேருந்து வழித்தடங்களை அளித்தால் உண்மையிலேயே அதற்கான பாராட்டு நம்முடைய முதல்வரவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் மேசையைத் தட்டுவதிலிருந்தே அந்தக் கோரிக்கையினுடைய நியாயத்தை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ளலாம். எனவே, அதை இந்த ஆண்டு அறிவிப்பாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைக்கு ஏற்பவும், மற்றுமுள்ள கோரிக்கைகளுக்கு ஏற்பவும் ஏறத்தாழ 1500 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கினோம். இந்தப் பேருந்துகள் எல்லாம் பெரும்பாலான மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளின் அடிப்படையிலே விடப்பட்ட பேருந்துகள். இதனால் கிராமப்புறங்களுக்கு வசதி கிடைத்ததே தவிர, வருவாய்க்கு ஏதும் வழிவகை அளிக்காத காரணத்தினால் அதிக இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் புள்ளிவிவரங்கள் மூலமாக நாம் தெரிந்துகொண்டிருக்கிற ஓர் உண்மை. ஆகவே, இதுபோன்ற கோரிக்கைகள் உங்களிடமிருந்து வருமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பெரிய மனது வைத்து, எல்லா கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து, மற்ற மாநிலங்களைப்போல நம்முடைய மாநிலத்திலும் பேருந்துக்

கட்டணத்தை உயர்த்துவதற்கு ஒத்துழைப்புத் தந்தால், இதற்கு ஏற்பாடு செய்யலாமே தவிர, அதைவிட்டுவிட்டு, பேருந்துகளை மட்டும் கேட்டுக்கொண்டிருந்தால், போக்குவரத்துக் கழகங்களே தற்போது நட்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையில், பேருந்துகளை இயக்குவது கடினமாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 19 ஆம் தேதி தென்னக இரயில்வே மூலம் நெல்லை விரைவு இரயில் விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை வழியாக இயக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், ஜோலார்பேட்டை வழியாக அதை இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். நெல்லை மாவட்ட மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் அந்த இரயில் இயக்கப்பட இருப்பதால், ஏற்கெனவே குறிப்பிட்டபடி அந்த இரயில் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும். எனவே, திரு. ஞானசேகரன் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் புதியதாக ஓர் இரயிலை சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தென்னக இரயில்வே நிர்வாகத்திற்குப் பரிந்துரை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் முடிவுக்கு வந்து, அவர்களுடைய பரிந்துரையைச் சொல்வார்களேயானால், அதை இந்த அரசு பரிசீலித்துப் பரிந்துரை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வசூலுக்கு ஒத்த நேரங்களை எல்லாம் தனியார் பேருந்து நிர்வாகம் timings-ஐ adjust செய்து, இயக்குகிற போக்கு தொடர்ந்து நிலவுவதுதான் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெருநட்டம் ஏற்படுகிற காரணங்களில் மிக முக்கிய காரணமாக அமைந்துள்ளது. ஆகவே, மாநில அரசு மிகுந்த விழிப்புடன்





இருந்து நல்ல வசூல் ஆகின்ற நேரங்களை எல்லாம் தனியார் பேருந்துகளுக்கு ஒதுக்குகின்ற போக்கைத் தடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் இருந்ததையெல்லாம் சுட்டிக்காட்டித்தான், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பெருமளவுக்கு அவை எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதுபோல, எங்கேனும், எந்த மாவட்டத்திலாவது சிற்றுந்துகள் இதுபோன்று மாற்றியமைக்கப் பட்டிருக்குமானால், அந்த வழித்தடங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடம் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**151—**

**சிற்றுந்து இயக்க விதிகளைத் தளர்த்தல்**

***22529—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிற்றுந்து (Mini Bus) இயக்க அரசு விதித்துள்ள நிபந்தனைகளைத் தளர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிற்றுந்து இயக்க அரசு விதித்துள்ள நிபந்தனைகளைத் தளர்த்தும் திட்டம் அரசிடம் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து திட்டத்தை கிராமப் பகுதிகளிலே விஸ்தரிப்பதாகச் சட்டமன்றத்திலே மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்தவுடனேயே, மக்கள் எல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றார்கள் என்று பத்திரிகைகள்

எல்லாம் பாராட்டின. காலை 8 மணியிலிருந்து 9.30 மணி வரையிலும், மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரையிலும், மாணவ-மாணவியர்கள், அலுவலகத்திற்குச் செல்லக்கூடிய அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாள நண்பர்கள் எல்லாம், அரசுப் பேருந்துகளில் நாங்கள் செல்கின்றபோது எங்களிடம் காலையிலே 7½ மணியிலிருந்து 9 மணி வரை பேருந்துகளை விட வேண்டுமென்று எல்லாப் பகுதி மக்களும் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலை உள்ளது. கிராமப் பகுதி மக்கள், உண்மையிலேயே மகிழ்ச்சி அடையக்கூடிய அளவிற்கு நாம் செய்ய வேண்டுமென்று சொன்னால், 20 கிலோமீட்டர் தூரம் என்பதை 25 கிலோமீட்டராக உயர்த்தி-அவ்வழித்தடத்தில் 4 கிலோ மீட்டர் தூரம் செல்லலாம் என்பதை 10 கிலோமீட்டர் என்று அறிவித்து-அரசு முழுவதுமாக மக்களுடைய எண்ணங்களைப் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில், சிற்றுந்துகளை இயக்குவதற்கான விதிகளைத் தளர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்துகளை இயக்குவதனுடைய நோக்கமே பேருந்து வசதிகள் பெறாத கிராமங்களை இணைக்க வேண்டும் என்பதாகும். இதுவரை பேருந்து இயங்கிக் கொண்டிருக்கிற வழித்தடங்களில் சிற்றுந்துகளை இயக்குவதற்கு வாய்ப்புகள் கிடையாது. ஏனென்று சொன்னால், முதலிலேயே இதுபோன்ற வழித்தடங்கள் எல்லாம் அரசுடைமையாக்கப்பட்டன. அந்த வழித்தடங்களிலே தனியார் பேருந்துகளை இயக்க முடியாது. ஆகவேதான் ஒரு சட்டத் திருத்தத்தின் மூலமாகவே அரசு, இதுவரை இயக்கிக் கொண்டிருக்கிற வழித்தடங்களில் 4 கிலோமீட்டருக்கு மிகாமல், 'செல்லலாம்' என்று சொல்லி இந்தச் சட்டத்தில்— ஓரளவிற்கு அந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்ற அடிப்படையில்—அந்தத் திருத்தத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. இதுவரை 375 பேருந்துகள் விடப்பட்டன. இந்த 4 கிலோமீட்டர் தூரத்தை அனுமதித்ததற்கு நீதிமன்றத்திற்குச் சென்று அங்கே தடையாணை பெறப்பட்டு வழக்கு நிலுவையில் இருக்கிறது. ஆகவே, அந்த வழக்கு முடிவுக்கு வந்தபிறகுதான் இதுகுறித்த முடிவுகளை அரசு மேற்கொள்ள முடியும்





என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. சிங்காரவேலு.

**திரு. வி.பி. சிங்காரவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ளவர்கள் அத்தனைபேரும் ஏழை, தாழ்த்தப்பட்ட, தோட்டத் தொழிலாளர்கள். அவர்கள்தான் அங்கே வசித்துக்கொண்டு வருகிறார்கள் -- வால்பாறை தாலுகா முழுவதிலும் இருந்து வரக்கூடிய அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வால்பாறையில் மட்டும்தான் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. தமிழகத்திலேயே, எங்குமே இல்லாத அளவில், ஏறத்தாழ மூவாயிரம் பேருக்கு, இலவச பேருந்துச் சீட்டுகள் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் தானைத் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு, அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது பயனடைந்து வருகின்றார்கள். நிதிநிலை அறிக்கையில்கூட நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 80 கோடி ரூபாய் அளவிற்கு இலவச பேருந்துச் சீட்டிற்காக மானியமாக வழங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு மிகப் பெரிய பிரச்சினையை நான் நம்முடைய மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களிடமும், நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இலவச பேருந்துச் சீட்டுக்களைப் பெற்று வருகின்ற பிள்ளைகளை எங்களுடைய வால்பாறை பகுதியில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகத்தில் இருக்கக்கூடிய ஊழியர்கள் ஏற்ற அனுமதிப்பதில்லை. காரணம், அவர்களுக்கு இதனால் collection bata குறைகிறது என்ற கருத்து இருக்கிறது. இந்த வேளையில் நான் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரைக் கேட்டுகொள்வதெல்லாம் நாம் 80 கோடி ரூபாயை மானியமாகக் கொடுத்தாலும்கூட—அந்த மானியத்தில் அவர்களுக்கு collection bata கிடைப்பதில்லை. ஆகவே, தாங்கள் அருள்கூர்ந்து அவர்களுக்கு அந்த மானியத்திலேகூட, இலவச பேருந்துச் சீட்டு வைத்துக்கொண்டு இருப்பவர்களை ஏற்றிச் செல்லக்கூடியவர்களுக்குக்கூட, நாங்கள் coilection bata-வை வழங்குவோம் என்ற முறையை நீங்கள் ஏற்படுத்தினால் எங்களுடைய மாணவர்கள் எல்லாம் அங்கே சிரமப்படாமல் பள்ளிகளுக்குச் சென்று, நம்முடைய தலைவர் அவர்களுடைய உன்னத நோக்கத்தை அவர்கள் அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (மணியடிக்கப் பெற்றது)

[1999 மார்ச் 23

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, collection bata என்பது அதிலே பணியாற்றுகிற ஓட்டுநருக்கும் நடத்துனருக்குமாகக் கொடுக்கப்படுகிற ஊக்கத் தொகைதான். ஆகவே, எந்த அளவிற்கு வசூல் செய்து நிதியைக் கொடுக்கிறார்களோ அந்த அடிப்படையில்தான் அது கொடுக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதற்கும் இதுவரை மூன்றே மூன்று சிற்றுந்துகளுக்குத்தான் அனுமதி வழங்கப்பட்டு இருப்பதாக அறிகிறேன். ஏறக்குறைய 60-க்கும் மேற்பட்ட மனுக்கள் நிலுவையில் உள்ளன. ஏறக்குறைய 1-1/2, 2 ஆண்டுகளாகவே சிற்றுந்துகளுக்கு அனுமதியை தருவதில்லை. இதிலே இன்னொரு இடைஞ்சல் இருக்கிறது. பெரிய பேருந்து வைத்திருப்பவர்கள் எல்லாம் சிற்றுந்துகளுக்கு எதிராகத்தான் இருக்கிறார்கள். எனவே, இவற்றையெல்லாம் அரசு கவனத்திலே கொண்டு சிற்றுந்துகளை புதுக்கோட்டை மாவட்டத்திலே விடுவதற்கு—மாவட்டம் முழுவதுமே 60 மனுக்களுக்கு மேலே நிலுவையில உள்ளன—மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டு சிற்றுந்துகள் ஓடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே இதற்கான விண்ணப்பங்கள் 49 பெறப்பட்டன. அவற்றிலே ஒன்பதிற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதில், இரண்டுதான் ஓடிக்கொண்டிருக்கின்றன. இப்போது நீதிமன்றத்திலே அதற்கான தடை பெறப்பட்டு வழக்கு நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் மற்றவற்றிற்கு வழங்க இயலாது. ஆகவே, நீதிமன்றத்தினுடைய ஆணை பெற்றபிறகு, மற்றவற்றிற்கும் வழங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிற்றுந்துகள் விட்டபிறகு பல வழித்தடங்களில் பொதுமக்களுக்குப் பேருந்து கிடைக்கவில்லை என்கிற பிரச்சினை தீர்ந்திருக்கிறது எனவே, இது ஒரு நல்ல திட்டமாக இருக்கிறது. சென்ற ஆண்டு பஞ்சாப்



1999 மார்ச் 23]

மாநிலத்தில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு ஒரே ஆண்டில் 7000 பேருந்துகளை அந்த மாநில அரசு வழங்குவதற்கான அனுமதியை அளித்து இருக்கிறது. எனவே, நாமும் அதைப்போல ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நீதிமன்றப் பிரச்சினை வராமல் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து, குறைந்தபட்சம் 7000 பேருந்து வழித்தடங்கள் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தால் அரசாங்கத்தினுடைய பொருளாதாரப் பிரச்சினை தீரும், பொதுமக்களுக்கும் பேருந்துகள் இல்லை என்ற பிரச்சினை தீரும். இதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . ஏற்கெனவே தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நான் முன்பு அளித்த விடையிலே குறிப்பிட்டிருக்கிறேன். இங்கே இருக்கின்ற வழித் தடங்கள் எல்லாம் அரசுக்குச் சொந்தமாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தனியார், சிற்றுந்துகளை, மற்ற பேருந்துகளை இயக்க வேண்டுமென்று சொன்னால், இந்தக் கொள்கையிலே சிறிது மாற்றம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் கொள்கை மாற்றம் செய்தால்தான் இதுபற்றிய முடிவுகளை எடுக்க முடியும். எனவே, இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் ஆலோசித்துதான் இந்தக் கொள்கை மாற்றம் பற்றி முடிவு எடுக்க முடியும். ஆகவே, இப்போது இருக்கிற வசதிகளின் அடிப்படையில் அரசுத் துறைக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படாமல், அங்கு இருக்கின்ற ஊழியர்களுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இதுபோன்ற சிறிய பேருந்துகளின் மூலமாக கிராமங்களுக்கு நல்லது செய்கின்ற திட்டங்களை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிற குரோம்பேட்டை பொது மருத்துவமனையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் L.S.S. என்ற மஞ்சள் Board போட்ட வண்டிகள் எல்லாம் நிற்பதில்லை; ஒரு வண்டிகூட நிற்பதில்லை. அங்கு வண்டிகள் நிற்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L.S.S. என்று சொன்னாலே Limited Stop Service தான்

[1999 மார்ச் 23

மாண்புமிகு உறுப்பினர் கூறும் அந்த நிறுத்தம் முக்கியமான இடம் என்று சொல்லியிருந்தால், அந்த இடத்திலே பேருந்துகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ரங்கநாதன்.

**திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளை மட்டும்தான் கொண்டுள்ளது. தனியார் பேருந்துகள் அங்கு இல்லை. இருப்பினும் பெரும் இழப்புக்கும், பெரும் நஷ்டத்திற்கும் ஆளாகி அது இயங்கிக்கொண்டிருக்கிறது. அந்தப் போக்குவரத்துக்கழகத்தை சீராக்கி-தற்போது உதிரி பாகங்களே இல்லாமல் பேருந்துகள் எல்லாம் ஆங்காங்கே நின்று கொண்டிருக்கின்றன - அவற்றை நல்ல நிலைமைக்கு மாற்றி, அங்கு அதிகக் கட்டணம் இருந்தாலும் சரி, மக்களுக்கு, மாணவர்களுக்கு, தொழிலாளர்களுக்கு அத்தனை பேர்களுக்கும் நன்மை பயக்கின்ற அளவுக்குப் பேருந்துகளை விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலைக்கேற்ப, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே 6 சிற்றுந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் 6 சிற்றுந்துகளுக்கு அனுமதி பெற்று இருக்கிறார்கள். ஆனால் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தடை வாங்கியிருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்குவதற்கு அரசு விரைவில் முயற்சி செய்யுமா? மேலும் என்னுடைய தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட பேருந்து ஒன்று தினந்தோறும் 7,000 ரூபாய் அளவிற்கு collection கட்டுகிறது. இதுபோல நல்ல collection - வருமானம் தரக்கூடிய சட்டமன்றத் தொகுதிக்கு மேலும் ஒரு பேருந்து விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே சிற்றுந்துக்கான வழக்கில் தடை பெற்ற போதிலும், இந்த வழக்குகள் முடிவு பெற்று, தீர்ப்பு சொல்ல வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. தீர்ப்பை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல வருவாய் வரக்கூடிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அப்படி விடுகிறபோது, அதற்குப் புதிய பேருந்துகள் வேண்டுமென்றால் அதற்கு உரிய மூலதனச் செலவும் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வழித்தடங்களாக இருந்தால் அதிலே தனியார்கள் பேருந்துகளை இயக்குகிறார்கள். சாலைகள் சரியில்லாத சில தடங்களிலே பேருந்துகளை இயக்க அவர்கள் முன்வருவதில்லை. அரசுப் பேருந்துகள்தான் அதிலே நஷ்டத்தைப் பார்க்காமல் பொது மக்களுடைய வசதிக்காகச் செலுத்தப்படுகின்றன. எனவே, இந்தச் சிற்றுந்துகளை அதிகமாக வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில் என்னுடைய பெரம்பலூர் மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இந்தச் சிற்றுந்துக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்கிற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளிக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தில் 159 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 60 பேர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதிலே, 15 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[1999 மார்ச் 23

**152—**

### நெடுஞ்சாலை விரிவுபடுத்துதல்

***7228—திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனியிலிருந்து கொடைக்கானல் செல்லும் நெடுஞ்சாலை விரிவுபடுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பழனியிலிருந்து கொடைக்கானல் செல்லும் நெடுஞ்சாலையை விரிவுபடுத்துவது குறித்த பரிசீலனை, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டபோது இல்லாமல் இருந்தது. இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனியிலிருந்து கொடைக்கானல் செல்கின்ற சாலை முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பழனியிலிருந்து கொடைக்கானல் செல்கின்ற சாலையில் சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்கின்ற காரணத்தினாலும்—அதேபோல பழனியை அடுத்த ஆயக்குடி பகுதியிலேயிருக்கின்ற கொடைக்கானல் மலையில்—பெருமாள்மலை வடகுறிஞ்சியில் விவசாயிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலும் அந்த மலையிலே விளைகின்ற காப்பி, எலுமிச்சை, பலாப்பழம், மாதுளை, பேரி, நெல்லிக்கனி போன்றவை எல்லாம் பழனிக்குத்தான் கொண்டுவரப்பட வேண்டும். அந்த அடிப்படையில் வாகனப் போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சாலை விரிவுபடுத்தப்படுமா என்று நான் முதலில் கேள்வி கேட்டிருந்தேன். ஆய்வில் உள்ளது என்று இன்றைக்கு சொன்னதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட அமைச்சருக்கும், அந்தத் தொகுதி மக்களுடைய சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, பழனியின் நீண்டகால கோரிக்கையாகவுள்ள புறவழிச் சாலைத் திட்டம்...



1999 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு சீக்கிரம் வாருங்கள்.

**திரு. த. பூவேந்தன்:** ஏழு கிலோ மீட்டர் நீளமுள்ள புறவழிச்சாலையாக இருக்கிறது. அதில் 6 reach எடுக்கப்பட்டு ஒரு reach இன்னும் நிலுவையில் இருக்கிறது. அதையும் இந்த ஆண்டு புறவழிச்சாலைத் திட்டத்தில் எடுத்துக்கொள்வார்களா? கொடைக்கானல் சாலை விரிவுபடுத்தப்படுவது இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல பழனி-கொடைக்கானல் மலைச் சாலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1971-72 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டதுதான். அதற்கு முன்பு அந்தச் சாலையில்லை. இங்கே நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோதெல்லாம் தமிழ்நாட்டுக்கு ஒரு பொற்காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சாலை Central Road Fund Scheme என்ற திட்டத்திலே முதன் முதலாகப் போடப்பட்டது. தமிழ்நாட்டுக்கே Central Road Fund Scheme வந்தது 1971-க்குப் பிறகுதான். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ஒரு புதையலைத் தோண்டி எடுப்பதைப்போல எடுத்து, அந்தத் திட்டத்தை, மத்தியிலே இருக்கின்ற அந்தப் பணத்தை மாநில அரசுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இந்தச் சாலையைப் பொறுத்தளவுக்கு இரண்டு பெரிய மாவட்டச் சாலைகளாக இருக்கின்றன. ஒன்று பழனி அடிவாரம் முதல் தேக்கன்தோட்டம் வரை; அது 13.2 கிலோமீட்டர். இரண்டாவது கொடைக்கானல்-பழனி சாலை; அது 39.6 கிலோமீட்டர். இந்த இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தி, உறுதிப்படுத்தி, விரிவுப்டுத்துவதற்கு ஏறத்தாழ 600 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இப்போது இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தை அரசு உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் இது குறித்து கலந்துபேசி இந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற

வேண்டும் என்று நெடுஞ்சாலைத் துறை விரும்புகிறது. அதற்கு மாநில அரசினுடைய நிதியாதாரம் போதிய அளவு இல்லாத காரணத்தினால், இந்தத் திட்டத்தை வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலம் செயல்படுத்தலாமா என்று யோசித்து, கட்டுதல், இயக்குதல், ஒப்படைத்தல் என்று சொல்லக்கூடிய BOT திட்டத்தில் இதைச் செய்யலாமா என்பதற்காக நிதித் துறைச் செயலாளர், நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் மற்றும் நகர வளர்ச்சித் துறைச் செயலாளர் ஆகிய மூன்று பேரைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் கடந்த 7-1-1999 அன்று ஆய்வு செய்திருக்கிறார்கள். மேலும் ஆய்வு செய்து இந்தத் திட்டத்தை BOT திட்டத்திலே செயல்படுத்தினால் வெற்றிகரமாக அமையும் என்று நான் நம்புகிறேன். அதற்கான வகையிலே இந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது. அறிக்கை கிடைத்தவுடன் இது பற்றி முடிவு எடுக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழனி புறவழிச் சாலையைப் பொறுத்தவரைக்கும் அதுவும் நடவடிக்கையில் இருக்கிறது. அந்தச் சாலை இப்போது தேசிய நெடுஞ்சாலையாக ஆகியிருக்கிறது. ஆகவே, மத்திய அரசினுடைய நிதி ஆதாரத்தோடு பழனி புறவழிச் சாலையை அமைக்கிற திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் 153, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**153—**

**அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலுக்குக் கூடுதல் வசதிகள்**

**• 16007—திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) பல்லடம் தொகுதி, அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலுக்கு திருப்பணியும், தங்கும் விடுதியும், பிரகாரமும் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள முக்கியமான கோவில்களில் அருள்மிகு வாழைத்தோட்ட அய்யன் கோவிலும் ஒன்று. அந்தக் கோவிலில் திருவிழாக் காலங்களில் பிரகாரம் சுற்றி வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்கள் எல்லாம் மிகவும் வேண்டி விரும்புகிறார்கள். ஆகவே, அங்கு விரைவில் பிரகாரம் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, வாழைத்தோட்ட அய்யன் கோவிலால் நடத்தப்பட்டு வரும் பள்ளியில் மாணவர்கள் படிப்பதற்கான வகுப்பறைகள் பற்றாக்குறையால், அவர்கள் மர நிழலில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்காக 16 இலட்சம் ரூபாய்க்கு கருத்துரு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை நிறைவேற்றிக் கொடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவிலுக்குரிய வருமானம், ஓர் ஆண்டுக்கு 41 இலட்சத்து 17 ஆயிரத்து 882 ரூபாய். எனவே, இதிலே தக்க வருவாய் இருக்கிற காரணத்தினால்தான் ஓர் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்கி நடத்துவதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டு, இன்று 621 மாணவர்களும் 430 மாணவிகளும் பயில்கின்ற பெரிய பள்ளியாக இயங்குகிறது. அதற்கான அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு இருக்கின்றன. மேலும், மொத்தத்தில் தமிழ்நாடு அரசுக்கு உட்பட்ட, அறநிலையத் துறைக்குட்பட்ட அனைத்து நிறுவனங்களிலும், கல்விக் கூடங்கள் அனைத்திலும் முழு வகையிலான வசதி செய்யப்படும் என்பதற்காக திட்டமிட்டு, எல்லாக் கோவில்களுக்கும் எல்லாப் பள்ளிகளுக்கும் அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தவகையில், இந்தப் பள்ளி உரிய நடைமுறையைப் பெறும்.

[1999 மார்ச் 23

இரண்டாவது இந்தக் கோவிலில் ஏற்கெனவே 1994-லேயும் குடமுழுக்குச் செய்யப்பட்டு இருக்கிறது. அடுத்து 2006-ல்தான் அதற்கான திருப்பணிகள் எடுத்துக்கொள்ள முடியும்; எனினும் நீங்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்தப் பிரதான வீதி மட்டுமல்லாமல், வேறுசில பணிகளுக்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும், குறிப்பாக அந்தக் கோவிலில் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் கூடத்திற்காக 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல மேல்நிலைப் பள்ளியின் பிரதான கட்டடத்திற்கு, சிறப்பு மராமத்துப் பணிகளுக்காக, 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, தாங்கள் கேட்ட பிரதான வீதிக்கும் உரிய தொகை ஒதுக்கப்படும்; ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**154—**

### மாவட்ட நீதிமன்றக் கட்டடம்

***15755—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் மாவட்ட நீதிமன்றம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கரூரில் மாவட்ட நீதிமன்றத்திற்குப் புதியதாக கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தனி மாவட்டமாகப் பிரிந்து 4 வருடங்கள் ஆகிவிட்ட சூழ்நிலையில் மாவட்டத் தலைநகரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்பது நம்முடைய அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. எனவே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க இனியாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு 30-7-1998-ல் அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அந்த நீதிமன்றத்தைத் தொடங்குவதற்கு உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இப்போது இருக்கின்ற இடத்திலேயே அந்த நீதிமன்றம் செயல்படவேண்டுமென்ற சூழ்நிலை இன்றையதினம் இருக்கிறது. மேலும், அங்கே போதுமான இடம் இல்லை என்ற தகவலும் அரசிடம் இருக்கிறது. புதிய இடம் கிடைத்த பிறகுதான், நீதிமன்றக் கட்டடத்தைக் கட்ட முடியும். என்றாலும், மாவட்ட நீதிமன்றம் தொடங்குவது குறித்து ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 155, திரு. கோ. தளபதி, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**155—**

### பேரையூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்

***11501—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் வீட்டுவசதித் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் நகரம் என்பது ஒரு வட்டத் தலைமையிடமாக இருப்பதாலும், அங்கு பல புதிய அலுவலகங்கள் ஏற்பட்டு இருப்பதாலும், புதிதாகக் குடிவரக்கூடியவர்களுக்கு வீட்டுவசதி இல்லாத நிலைமை இருப்பதாலும்,

[1999 மார்ச் 23

சுமார் 30 கி.மீ. சுற்றளவிற்குக் கிராமங்களாக இருப்பதாலும், பேரையூரிலே குறைந்த அளவு எண்ணிக்கையிலேயாவது வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மற்றும் கோட்டத் தலைமையிடங்களில் மட்டும்தான் வாடகை வீடுகள் கட்டப்படும் என்பது கொள்கை. அதுவும் அரசு நிலங்கள் கிடைக்கப்பெற்றால்தான், அது பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 156, திரு ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**156—**

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***21259—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை தெற்கு பதிவு மாவட்டம், செக்காணூரணி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு தற்போது அரசுக் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதுமில்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சார்பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. இதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் வேண்டுமென்றபோதுகூட, 5 Cent இடத்தை இதற்காக ஒதுக்கி நீண்ட நாட்களாகியும்கூட, இன்னும் சொந்தக் கட்டடம் கட்டப்படாமல் இருந்து வருகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மிக விரைவில் அந்த அலுவலகத்திற்கு



1999 மார்ச் 23]

சொந்தக் கட்டடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தெற்கு பதிவு மாவட்டத்திலே கடந்த ஆண்டுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரையூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ. 13.60 இலட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகையால் ஒரே பதிவு மாவட்டத்திலே தொடர்ந்து கட்ட இயலாத நிலை இருக்கிற காரணத்தினாலே வருகின்ற ஆண்டிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 157, திரு. பி.என். வல்லரசு மற்றும் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**157—**

### பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு நினைவிடம்

***15909—திரு. பி.என். வல்லரசு:**
**திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை அரசு நினைவிடமாக ஆக்கிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை திருநகரில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்த வீட்டை அரசு நினைவிடமாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

[1999 மார்ச் 23

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த ஊர் பசும்பொன் என்றிருந்தாலும் அவர் வாழ்நாட்களிலே அதிக நாள் சிறைச்சாலையிலும், மீதமுள்ள நாட்களிலே மதுரை, திருநகர் வீட்டிலும் வாழ்ந்திருக்கிறார்கள். பல்வேறு சிறப்புக்களை நம்முடைய கலைஞர் அவர்கள் அரசின் சார்பிலே செய்து, அவர் பிறந்த சொந்த ஊரான பசும்பொன்னிலேகூட நினைவு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்து இறந்ததுகூட மதுரை, திருநகர் வீட்டிலேதான். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர் வாழ்ந்த வீட்டினை ஒரு நினைவு இல்லமாக மாற்றித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக பசும்பொன் கிராமத்திலேயுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சமாதி ரூ.7,28,778.00 செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதைப்போலத்தான், அந்த இடத்தை நினைவு இல்லமாக மாற்றுவதற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.3,87,198.00 அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய திருவுருவச் சிலைக்கு சென்னையில் ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் அரசின் சார்பாக மாலையிட்டு, மரியாதை செலுத்தப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் மதுரையில் அவர் வாழ்ந்த இல்லம் ஒரு வாடகை வீடு என்பதோடு, அந்த வாடகை வீட்டில் தற்போது இந்திரா காந்தி மெட்ரிகுலேஷன் பள்ளியும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்குரியவர்களுக்கு 1991 இல் அந்த வீட்டை விற்றுவிட்டார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் இந்த இடத்தை நினைவு இல்லமாக அமைப்பதற்கான வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 158, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**158—**

**தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்**

***7977—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 23]

*தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒருமுகப்படுத்தி அரசே ஒரு வாரியம் அமைக்க ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்களின் அனுமதியோடு தருகிறேன்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒருமுகப்படுத்துவதற்கு, மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் இதர அற நிலையங்களுக்கான சட்டம், 1960-ன்கீழ் 15 பேர் கொண்ட குழுமம் அமைத்திட அரசின் ஆணை ஏற்கெனவே இருக்கிறது. குழுமத்தின் பணிக் காலம் ஏற்கெனவே முடிவடைந்துவிட்டபடியால், மீண்டும் 15 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, நியமிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அம்பத்தூரிலும் மற்ற இடங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு முறையான நிதி வசதி இல்லாத காரணத்தால் அவர்களுடைய செயல்பாடுகளிலே பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்கள் தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. ஆகவே, அரசு பணம் செலவு செய்து, தனியாக நிதி ஒதுக்கி ஒரு வாரியம் அமைக்குமானால் தொண்டார்வம் உள்ள நல்ல சமூக சேவகர்கள் அவர்கள் தொண்டுகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். ஆகவே, அவ்வாறு தமிழக அரசின் சார்பிலே செய்ய முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டவண்ணம் ஏற்கெனவே இந்தக் குழுமத்தினுடைய பார்வையில் 800-க்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் வர இருக்கின்றன. எனவே, அந்தக் குழுமத்தினுடைய செயல்பாடுகளில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏற்புடையதாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு அரசு வழங்குகின்ற மானியத்தை வழங்குவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே சமூகநல வாரியம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த வாரியத்தின் மூலமாகவும் மாண்புமிகு உறுப்பினர், தான் பரிந்துரை செய்கின்ற

[1999 மார்ச் 23

அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 159, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

—159—

## விருத்தாசலத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

***8558—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. நிதி நிலைமைக்கேற்ப எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரில் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அதேபோன்று, அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியிலும் அரசின மாணவர் விடுதி இயங்கி வருகிறது. இரண்டுக்கும் கட்டடங்கள் இல்லை. விருத்தாசலம் நகரத்திலே இந்த மாணவர்களுக்காக வாடகைக்குக் கட்டடங்கள் கொடுப்பவர்கள் அடிக்கடி காலி செய்யச் சொல்லி விடுகிறார்கள். நகரத்திலே இடம் கிடைப்பதும், கட்டடங்கள் கிடைப்பதும் சிரமமாக இருக்கிறது. அதனால் மாணவர்கள் மத்தியிலே அடிக்கடி போராட்டமும், எதிர்ப்புணர்வும் வந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தக் குறைபாட்டைத் தவிர்க்க, தங்களுடைய கவனத்திற்கு இரண்டு வருடங்களாக இதைக் கொண்டுவந்து, கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஆகவே, அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டில் இரண்டு மாணவர் விடுதிகளுக்கும். அரசு கலைக் கல்லூரி மாணவர் விடுதிக்கும், மேல்நிலைப் பள்ளி மாணவர் விடுதிக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு, அவசியம் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் மாணவர் விடுதி கட்டுவதற்கு இடம் இருக்கிறது. அதுவும் வரும் ஆண்டிலாவது இரண்டு விடுதிகளுக்கும் கட்டடம் அவசியம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அடம் பிடிக்கிறார் விருத்தாசலத்தினுடைய குழந்தை. குழந்தை தமிழரசன் அவர்களே, நிதிநிலைமை இடம் கொடுத்தால், வருகின்ற ஆண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், விருத்தாசலம் பற்றி என்றால் அனுமதிக்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** ஆதிதிராவிடர் பிரச்சினை பற்றி தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரங்கள் மூலம் சமூக நல்லிணக்கம் கண்டுவரும் இந்த நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு என்றும், ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு என்றும் தனித்தனியாக விடுதிகள் கட்டாமல், அனைவரும் ஒரே விடுதியில் தங்கி, பழகி, பயில அரசு வகை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதிகளை வேரறுத்து, சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காக சமத்துவபுரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இருபதாம் நூற்றாண்டிலே எல்லோரும் பாராட்டும் வண்ணம் அங்கங்கே அமைத்துத் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், ஆதிதிராவிட மாணவர்களும் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்தால் சமத்துவம் ஏற்படும் என்ற ஒரு நல்ல கருத்தை உறுப்பினர் வெளியிட்டிருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் எடுத்துக் கூறி, அவருடைய

[1999 மார்ச் 23

ஆலோசனையைப் பெற்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 160, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**160—**

**திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக்குதல்**

***15900—திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகரைச் சுற்றுலா மையமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இந் நகரில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணிக்கு அன்றாடம் ஆன்மீக வழிபாட்டுக்காக ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் திருத்தணி நகரின் மையப் பகுதியிலே நல்ல தண்ணீர்குளம் என்ற என்றுமே வற்றாத தடாகம் அமைந்திருக்கிறது. அங்கே படகுக் குழாம்கள் அமைக்கலாம். அதேபோன்று கன்னிகோயில் என்ற மற்றொரு இடத்திலே சூரிய ஒளிகூட நிலத்திலே விழாத அளவிற்கு ஒரு பசுமையான சோலை அமைந்திருக்கிறது. அதையும் பயன்படுத்திக் கொண்டு— நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை-திருத்தணி-திருப்பதி மாநில நெடுஞ்சாலையை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிக் கொடுத்து பெருமை சேர்த்திருக்கிறார்கள்—இந்த நிலைமையிலே



1999 மார்ச் 23]

"செல்லார்பொழில் சூழ்ந்த திருத்தணிகையிலே" சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து சுற்றுலாத்தலம் அமைத்திட அரசு மீண்டும் முயலுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விழைகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த ஓர் இடத்தையும் சுற்றுலாத் தலம் என்று அறிவிப்பது கிடையாது. சுற்றுலாப் பயணிகளுடைய வருகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்தப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது சுற்றுலாத் துறையினுடைய கடமையாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, திருத்தணியைப் பொறுத்தவரையில் அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மேலும் பல அடிப்படைப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மாவட்ட நிர்வாகத்தோடு கலந்து பேசி கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆரூண் ரஷீத், திருத்தணியைப் பற்றிக் கேட்கப் போவதாக இருந்தால் கேளுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் செங்குன்றம் ஏரி இருக்கிறது, புழல் ஏரி இருக்கிறது. அதைச் சுற்றி நல்ல பூங்காக்கள் அமைத்து, கொடைக்கானல், உதகையில் இருப்பது போன்று பூங்காக்கள் அமைத்து, கொடைக்கானலில் எப்படிப் பயணிகளை ஈர்க்கிறார்களோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மத நல்லிணக்கத்தின் அடிப்படையில் திருத்தணி முருகனைப் பற்றி ஏதோ கேள்வி கேட்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் செங்குன்றம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். சரி, சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** எனவே, மக்களைக் கவரும் வகையில் சுற்றுலாத் துறை மூலமாக அங்கே படகுப் போக்குவரத்து அமைக்கவும், மாணவர்களைக் கவருகின்ற வகையில் அங்கே சிறுவர் பூங்காவை அமைக்கவும் ஆவன செய்வார்களா என்றும், செங்குன்றம் ஏரிப் பகுதியிலும் இவற்றை அமைக்க ஆவன செய்வார்களா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1999 மார்ச் 23

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றம் ஏரியில் எந்த அளவுக்கு வசதிகள் இருக்கின்றன என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை

### முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கை

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப் பற்றிய Point of Privilege. நேற்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவங்கள் குறித்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான, இட்டுக்கட்டிய, வடிகட்டிய ஒரு கற்பனைக் கதையைச் சொல்லி அது எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிதாக வந்திருக்கிறது. சபாநாயகர் அவர்களே ஒருதலைபட்சமாக நடந்துகொண்டதாகவும், மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தாக்கப்படவே இல்லை, அதற்கும் தாமரைக்கனிக்கும் சம்பந்தமே இல்லை என்றும், பின்னாலே வந்த எம்.எல்.ஏ-க்கள் குதித்து, அவர் மேலே ஏறி, அவரே விழுந்து அதன் காரணமாக அடிபட்டார் என்றும் தெரிவித்துள்ளார். நல்ல வேளையாக பக்கத்தில் உள்ள அமைச்சர்கள் குத்தியதால் காயம் வந்தது என்று சொல்லாமல் பெருந்தன்மையாக எம்.எல்.ஏ.-க்கள் வந்து அவர் மேல் ஏறியதாலே, அவர் விழுந்து காயம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார். இந்த அறிக்கையை நீங்கள் பார்த்தால் இது Privilege-ஆக எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்பது தெரியும். சட்டமன்றத்திலே இருக்கிறபோது எல்லா உறுப்பினர்களும் பார்த்தார்கள்; பத்திரிகையாளர்கள் பார்த்தார்கள்; அரசு அதிகாரிகள் பார்த்தார்கள்; பார்வையாளர்கள், மேல் மாடத்திலிருந்து பார்த்தார்கள். இப்படி எல்லோர் கண் முன்பும் நடந்த ஒரு சம்பவத்தை, எதுவுமே நடக்கவில்லை என்று சொல்லி, அடிக்கவில்லை என்று சொல்லி, அதுபோல் அவர் அடிபட்டதையும்



1999 மார்ச் 23] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மறைத்து, அதற்கும் தாமரைக்கனிக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லி, உங்களையும் அவமானப்படுத்தி, ஏதோ முன்னால் இருக்கிற அமைச்சர்கள், துரைமுருகன் அவர்கள், பொன்முடி அவர்கள் எல்லாம் கழுத்தைப் பிடித்து நெரித்தார்கள், தாமரைக்கனியின் கழுத்தைப் பிடித்து துரைமுருகன் நெரித்தார் என்று சொல்லி, இப்படியெல்லாம் முற்றிலும், எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல், தொடர்பும் இல்லாமல், முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது என்பார்கள்—அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுவார்கள், இலைச் சோற்றில் மறைப்பது என்பார், இது அதில்கூட வராது—கைச் சோற்றில் மறைப்பது போன்று ஓர் அப்பட்டமான பொய்யை, உண்மைக்குப் புறம்பான, மாறான தகவலை வெளியே கொடுத்திருக்கிறார். இது இந்தச் சட்டமன்றத்திலே நடந்த சம்பவத்தை அப்படியே மாற்றி, திரித்து, ஒரு கற்பனையை மக்களிடத்திலே, நம்புகின்ற வரையில் நம்பட்டும் என்று—கோயபல்ஸ் தத்துவம் என்று சொல்லுவார்கள், அதுபோல ஒரு பொய்யைச் சொன்னால், யாராவது 10 பேர் சந்தேகப்பட்டால், சந்தேகப்படுகின்ற வரையில் லாபம் என்பது 'கோயபல்ஸ்' தத்துவம் என்பார்கள். அதுமாதிரி இன்றைய நவீன கோயபல்ஸ்—ஆக இதுபோன்ற ஒரு கற்பனைச் செய்தியை முன்னாள் முதலமைச்சர் இன்றைக்கு வெளியே அறிக்கை மூலமாக வெளியிட்டிருக்கிறார். இது சட்டமன்றத்தை அவமதிப்பதாகும்; சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அவமதிப்பதாகும். ஒருதலைபட்சமாக செயல்பட்டிருக்கிறீர்கள் என்று சொல்லி, உங்களையும் விமர்சித்திருக்கிறார். இதை நீங்கள் Privilege Committee-க்கு அனுப்பி அவரிடமிருந்து விளக்கம் கேட்க வேண்டும். மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும் நேற்று பார்த்ததைச் சொல்ல வேண்டும். ஏனென்றால் பத்திரிகைகளில் வரும்போது இந்தச் சம்பவங்கள் திரித்து வருகின்றன. ஒரு நிகழ்ச்சி நடந்த பிறகு, அதற்கு வேறு அர்த்தம் சொல்லுவது என்பது, இந்த அம்மையாருக்கு வழக்கமாகிவிட்டது.

நேற்றே நான் பேசுகின்றபோது சொன்னேன்; இது இப்படித்தான் நடக்கும் என்று. அந்த அம்மா என்ன செய்வார்கள் என்று சொன்னேன், கொஞ்ச நாள் கூட இருந்ததால் எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாதிரி ஒரு கதை வரப்போகிறது, ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, இதுமாதிரி அடிபட்டார்கள், உட்காயம் வந்திருக்கிறது என்று சொல்லி, ஒரு கதையை set-up செய்து சாயங்காலம் ஓர் அறிக்கை வரும் என்று சொன்னேன். அதேமாதிரி ஓர் அறிக்கை வந்திருக்கிறது. மருத்துவமனைக்கு 5 மணி நேரம் கழித்துச்

சென்றிருக்கிறார்கள். தாமரைக்கனிக்கு காயம் இருக்குமேயானால் இங்கே இருந்து சென்ற உடனே ஆஸ்பத்திரியில் சேர்ந்திருக்கலாம். Private ஆஸ்பத்திரியிலோ அல்லது Government ஆஸ்பத்திரியிலோ சேர்த்திருக்கலாம். எங்கே சேர்த்திருக்கிறார்கள் என்றால் Poes Garden-இல் சேர்த்திருக்கிறார்கள். சேர்த்து 5 மணி நேரம் இருந்து, 6 மணிக்கு Police எல்லாம் அங்கே நின்று பிடிக்கப் போனதற்குப் பின்னால்; ஒருவேளை அங்கேயிருந்து கைப்பற்றி விட்டால், அவர்களைக் கைது செய்தால், மறைத்து வைத்த குற்றம் தன்மேல் வந்துவிடும் என்று பயந்தாரோ என்னவோ தெரியவில்லை; அதற்குப் பிறகு Ambulance-ஐ அப்போலோவிலேயிருந்து வரச்சொல்லி, Ambulance-லே ஏற்றி, ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய்—இங்கே 12 1/2 மணிக்கு நிகழ்ச்சி நடந்தது. ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய் — உயிருக்கு ஆபத்து என்று கொண்டுபோய், கட்டுப்போட்டு, அதுவும் தலையிலே கட்டுப்போட்டு, அவர்களை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, பிரித்துப் பார்த்தால், ஒன்றும் இல்லை என்று அவர்கள் கட்டையெல்லாம் பிரித்துவிட்டு உட்கார்ந்திருக்கிறார்கள். இப்படி ஒரு பெரிய நாடகமே நிகழ்ந்திருக்கிறது. மக்கள் மத்தியில் சந்தேகம் வர வேண்டுமென்று, உள்நோக்கத்தோடு செல்வி ஜெயலலிதா செய்திருக்கிறார் எனவே, எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் இங்கே இருக்கிறார்கள். நேற்று என்ன நடந்தது என்பதை இரண்டிரண்டு வரியிலே அவர்கள் சொல்ல வேண்டும். இந்தமாதிரி நடந்ததா, இல்லையா என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். அது நாட்டு மக்களுக்கு விளக்கம் தருகின்ற விதத்திலே அமையும் என்ற காரணத்தினாலே, அந்த வாய்ப்பையும் தந்து, மேலும் இந்தப் பொய் அறிக்கையை, இந்த முரண்பாடான அறிக்கையை, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை உரிமைக் குழுவிற்கு நீங்கள் அனுப்ப வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

## 3. தன்னிலை விளக்கம்

**பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து தாமரைக்கனியின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம்**

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொன்னதைப்போல,



தாமரைக்கனி அவர்கள், வெளியிலே சென்று உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார். அதிலே என்னுடைய பெயரையும் இழுத்திருக்கிறார். தாய் எட்டு அடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்பதைப்போல, தலைமை அவ்வளவு பெரிய பொய் சொன்னால், அதையும் விஞ்சுகிற பொய்யை அவர் சொல்லி இருக்கிறார். நேற்றைக்கு இங்கு நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தாக்கப்பட்டு, வடிகின்ற இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு, காயம்பட்ட அவரை அழைத்துக்கொண்டு போகின்ற அந்தப் பணியை நான் செய்து கொண்டிருந்தேன். இங்கிருக்கிற அதிகாரிகளும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற, மாண்புமிகு தலைவர்களும், மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கொஞ்சங்கூட சம்பந்தா சம்பந்தமில்லாமல், இங்கிருந்து அவருடைய கழுத்தை நெரித்து, குலைத்து, 'தொலைந்து போ' என்று சொன்னேன் என்றால், என் கை என்ன பதினாறு அடி நீளமா, பதினேழு அடி நீளமா இருக்கிறது. இப்படிப்பட்ட பொய்யையே அரசியல் மூலதனமாகக் கொண்டு, ஒரு தலைவி, அதற்கேற்ப ஓர் உறுப்பினர், உண்மைக்கு மாறான கருத்தை வெளியிலே தெரிவித்திருக்கிறார். எனவே, நேற்று நடந்த சம்பவத்தில் வீணாக, உண்மைக்கு மாறாக அவர் என்னுடைய பெயரைக் கெடுத்திருக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாக நாட்டிற்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குற்றச்சாட்டு முழுக்க முழுக்கத் தவறானது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற தலைவர்கள் உணர்வார்கள். பத்திரிகையாளர்களும், தாங்களும் அறிவீர்கள். இதில் கொஞ்சம்கூட உண்மை எதுவும் இல்லை, பொய்யானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதுகுறித்து தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் திரு. தாமரைக்கனி கைது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களைக் கைது செய்கிற உத்தரவைப் பிறப்பிக்கப் போவதாகச் சொன்னேன். அதன்படி, என்னுடைய அறைக்குச் சென்று சென்னை மாநகர காவல் துறை ஆணையர் அவர்களுக்கு ஓர் உத்தரவைப் பிறப்பித்தேன் திரு. தாமரைக்கனி அவர்களைக் கைது

செய்யவேண்டுமென்று. அந்த அடிப்படையிலே நேற்று மாலை 6¼ மணிக்கு திரு. தாமரைக்கனி அவர்கள் அப்போலோ மருத்துவமனையிலேயிருந்து கைது செய்யப்பட்டு, சென்னை பொது மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கே ஏராளமான மருத்துவர்களை வைத்து அவர் உடல் முழுவதும் பரிசோதனை செய்து, அதற்குப் பிறகு என்னுடைய அடுத்த உத்தரவின் அடிப்படையில் சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## (ஆ) பேரவையில் 22.3.1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, நேற்று நடந்த அசம்பாவிதங்களை உறுப்பினர்கள் மட்டுமல்ல, இங்கே வந்திருந்த பார்வையாளர்கள், அரசு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் எல்லோரும் பார்த்திருப்பார்கள். நியாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற காரணத்தால், நடவடிக்கைகளை இரண்டாகப் பிரித்துத்தான் செய்திருக்கிறோம். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்குத் தர இருக்கின்ற நேரத்தில் வெளிநடப்பு செயய முயற்சித்த நேரத்தில், அவர்களாகவே வெளிநடப்பு செய்யலாம் என்று சொன்னேன். அதையும் மீறி அவர்கள் இங்கேயே இருந்து, அதற்குப் பிறகு என்னுடைய உத்தரவின்பேரில் இங்கேயிருக்கிற காவலர்கள். அவர்களை வெளியேற்றினார்கள். ஆனால், அதற்கு அடுத்த நாளே சொன்னேன்; இது முதல் முறையானது; இரண்டாவது முறையென்றால், கூட்டத் தொடர் முழுவதற்கும் வெளியேற்ற வேண்டுமென்று விதி இருக்கிறது என்று. அதைப்போலவே, நேற்று திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. கருப்பசாமி அவர்களும் இந்த அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலே நடந்து கொண்டார்கள். ஒட்டுமொத்தமாக நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, ஒருமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேறி, அவர்கள் இருவருமே இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் இந்த அவையைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

*முற்பகல் 10-55*

அதோடு இன்னொரு கருத்தையும் செல்கிறேன். விடுதியிலே அவர்கள் இருக்கக்கூடாது என்ற உத்தரவையும் போட்டேன். அதற்கு



ஒரு முக்கியமான காரணம் உண்டு. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்களுக்கு ஒரு வாரகால தண்டனை கொடுக்கும்போது, என்னை இதோடு 7, 8 முறை தொடர்பு கொண்டு அங்கே யாரோ வந்து அச்சுறுத்துவதாக, தொலைபேசியின் மூலமாக அச்சுறுத்துவதாக, நேரிலே வந்து அச்சுறுத்துவதாக எல்லாம் சொன்னார்கள். உடனடியாக காவல் துறை ஆணையரிடம் சொல்லி அங்கே காவலுக்கு ஆள் போட வேண்டும் என்று சொன்னேன். அப்படிப்பட்ட எந்த நிகழ்வும் நடக்கக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் அவர்கள் இருவருமே அங்கே இருக்கக்கூடாது என்று சொன்னேன். ஆனால் அதிலேகூட ஒரு மாலைப் பத்திரிகையில் அவர்கள் இருவர் அறையும் பூட்டப்பட்டது என்று ஒரு தவறான தகவலைச் சொன்னார்கள். உறுப்பினர் கருப்பசாமியின் அறை அவராலேயே பூட்டப்பட்டிருந்தது. இன்னொரு பூட்டு என்னுடைய உத்தரவின்பேரில் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அறையில் அவர்கள் துணைவியார் இருந்தார்கள். அவர்களே இந்தச் சம்பவங்கள் குறித்து தனக்கு, தன்னுடைய கணவர் மூலமாகத் தகவல் தெரிந்தது என்றும் இன்று காலையிலே அவர்களாகவே ஊர் செல்வதாகவும் சொன்னார்கள். இந்தத் தகவலை எனக்குச் சொன்னவுடன் நான் முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துவிட்டு, முதலமைச்சர் அறிவுரையின்பேரில் அங்கே அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், நேற்று இரவு முழுவதும் அந்த அம்மையாருக்குப் பாதுகாப்பாக காவல் இருக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்தேன் அவர்கள் அந்த அறையிலேதான் இருக்கிறார்கள். ஒருவேளை இன்று காலை அந்த அறையை காலி செய்து இருக்கலாம். ஆகவே, தாமரைக்கனி அவர்களுக்கும், கருப்பசாமி அவர்களுக்கும் இந்த அவை நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இது ஒரு நடவடிக்கை.

இங்கே எல்லாக் கட்சி உறுப்பினர்களும், எல்லாக் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க நேற்று தாமரைக்கனி அவர்கள் செய்தது ஒரு criminal குற்றம், மாண்புமிகு திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களுக்கு படுகாயம் ஏற்படுத்தினார். ஆகவே, அவர் மீது மட்டும் தனியாக நடவடிக்கை எடுப்பதற்காகத்தான், காவல் துறைக்கு, அவரைக் கைது செய்யச் சொல்லி உத்தரவிட்டேன். தொடர்ந்து அடுத்த நடவடிக்கை என்ன என்பதை இந்த அவை முடிவு செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக நேற்றையதினம் அவர் கைது செய்யப்பட்டார், ஒரு வாரம் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டிருக்கிறேன்.

### (இ) பேரவையில் 22.3.1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 22.3.1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக அடுத்த நடவடிக்கை என்ன எடுப்பது என்பதைக் குறித்து முடிவு எடுக்க என்னுடைய அறைக்கு இன்னும் அரை மணி நேரத்திலே, 11-30 மணி வாக்கிலே எல்லாக் கட்சித் தலைவர்களும் வர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர்களோடும் கலந்துதான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னதைப்போல, நம்முடைய அமைச்சர் அவர்களுக்குப் படுகாயம். ஏழு தையல் போட்டிருக்கிறார்கள். இதற்குப் பிறகும் தாமரைக்கனி அவர்கள் அடிக்கவில்லை என்று சொன்னால் அது நூற்றுக்கு நூறு உண்மைக்குப் புறம்பான தகவல். அவர் எவ்வளவு பெரிய இடத்திலிருந்தாலும் அது கண்டிக்க வேண்டிய ஒன்று. ஆகவே, நம்மைப் பொறுத்தவரையில் இதில் சட்டப்படி, நியாயப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அனைவரையும் கலந்து— அவசரப்படக்கூடாது என்று நேற்றுகூடச் சொன்னேன். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு திரு. திருநாவுக்கரசு அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் இதே தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே கட்சித் தலைவர்கள் கூட்டத்திலே—அடுத்த நடவடிக்கை என்ன என்பதை முடிவு செய்வதற்குத்தான் 11-30 மணியளவிலே எனது அறைக்கு எல்லாத் தலைவர்களும் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க விரும்பினால் அளிக்கலாம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் கடந்த 1996 ஆம் ஆண்டிலேயிருந்து காரசாரமான விவாதங்கள் சிலவற்றைச் சந்தித்த அனுபவமுடையதாக இருந்தாலும்கூட, நேற்று நடைபெற்ற சம்பவத்தைப்



போன்ற சம்பவத்தை இந்த 3 ஆண்டுக் காலத்திலே இந்த மன்றம் சந்தித்ததில்லை. நேற்றையதினம் நடைபெற்ற சம்பவம் குறித்து இங்கே தாங்கள் விளக்கிக் கூறியிருக்கிறீர்கள். அதைப் பற்றி வெளியிலே முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் விடுத்துள்ள அறிக்கை குறித்தும், அதிலே உள்ள உரிமைப் பிரச்சினை குறித்தும் நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஒரு தன்னிலை விளக்கத்தை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பத்திரிகைகளிலே, அவரவர்களுடைய கருத்திற்கேற்ப சில செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், கட்சிகளின் தலைவர்களுக்கும் என்ன நடந்தது என்பது மிக நன்றாகவே, தெளிவாகவே தெரியும். உடல் நலிவுற்று, மூன்று, நான்கு நாட்களாக ஓய்வில் இருந்த நான், பதைபதைக்கும் இந்தச் சம்பவச் செய்தி கேட்டு ஓடோடிவந்து, இங்குள்ள தலைவர்களைச் சந்தித்து, அவர்கள் எல்லாம் கூறிய செய்திகளைத் தொடர்ந்துதான் முழு உண்மையையும் புரிந்துகொள்ள என்னால் இயன்றது. அதற்குப் பிறகு நடந்தவற்றை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-00

22-3-1999 அன்று சட்டமன்றத்தில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள்மீது நடைபெற்ற தாக்குதலைத் தொடர்ந்து, திரு. தாமரைக்கனி, சுமார் ஒருமணி அளவில், அரசினர் தோட்டத்திலே எண் 1, கோஷன் பிளாக்கிலே உள்ள தனது இல்லத்திற்கு வந்து, அங்கேயிருந்த தனது பாதுகாவல் அதிகாரி — அவருக்கென்று ஒரு பாதுகாவல் அதிகாரி இருக்கிறார்; தலைமைக் காவலர் அவர் — 1093 சமுத்திரக்கனியிடம், Assembly-ல் தகராறாகிவிட்டது; நான் party office-க்குப் போகிறேன்; நீ அம்மையைப் பார்த்துக்கொள்' என்று தன்னுடைய துணைவியாரைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, தன்னுடைய அம்பாஸிடர் கார் பதிவு எண் TN 67 Z 7020 வண்டியிலே சென்றுவிட்டார். பின்னர், அவர் அவ்வை சண்முகம் சாலையிலே உள்ள அ.இ.அ.தி.மு.க. தலைமை அலுவலகத்திற்கு வந்து, தன்னுடைய காரை அங்கே விட்டுவிட்டு, போயஸ் தோட்டத்திலே உள்ள செல்வி ஜெயலலிதா வீட்டிற்குச் சென்றுவிட்டார். அப்போலோ மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவர்கள் Ambulance ஊர்தியுடன்

போயஸ் தோட்டத்திற்கு பிற்பகல் 4 மணிக்குச் சென்றார்கள். பின்னர், செல்வி ஜெயலலிதா வீட்டில் திரு. தாமரைக்கனிக்கு, தலை மற்றும் கைகளில் Bandage போடப்பட்டது. பின்னர் மாலை 5 மணியளவில், மேலே கூறிய மருத்துவர்கள் மற்றும் திரு. தாமரைக்கனியும் புறப்பட்டு, அப்போலோ மருத்துவமனைக்குச் செல்ல முற்படும்போது, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வெளியிலே, இராதாகிருஷ்ணன் சாலையிலே, ஆங்காங்கே பாதுகாப்புப் பணியிலே இருப்பதை அறிந்து, போயஸ் தோட்டத்திலே உள்ள செல்வி ஜெயலலிதா வீட்டு Compound-க்கு உள்ளேயே Ambulance வண்டியிலே இருந்து இறங்கி, அதிலே இருந்து மாறி, அம்பாசிடர் கார் பதிவு எண் TN 01 J 2809 மூலம் வெளியே வர, அதனைத் தொடர்ந்து மற்ற கார்கள் வெளியே புறப்பட்டுச் சென்றன. அவர்கள் அண்ணா சாலை, எல்.ஆர். சுவாமி வளாகம் அருகிலே உள்ள அப்போலோ சிறப்பு மருத்துவப் பிரிவு மருத்துவமனையின் சிகிச்சைப் பிரிவுக்குச் சென்று அங்கே அவரை உட்கார வைத்தனர். அப்போலோ சிறப்பு மருத்துவமனையில், மருத்துவர்கள் இருந்தார்கள். ஆனால், எந்த மருத்துவரும் எந்தவிதமான சிகிச்சையையும் திரு. தாமரைக்கனிக்குச் செய்யவில்லை.

மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களைச் சட்டமன்றத்தில் திரு. தாமரைக்கனி தாக்கியது தொடர்பாக, சட்டமன்றத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பிறப்பித்த பிடி ஆணையை நிறைவேற்றிடும் முகத்தான், திரு. தாமரைக்கனியைக் கைது செய்ய வேண்டுமென்று போலீசார் கூறியதற்கு அப்போலோ மருத்துவமனை சிறப்பு மருத்துவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. எந்தவிதமான மருத்துவச் சிகிச்சையும் செய்யாமல், வெறுமனே திரு. தாமரைக்கனியை, மருத்துவமனையிலேயே வைத்து, அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்து, சட்டமன்றப் பேரவைத் தலைவர் பிறப்பித்த பிடி ஆணையை serve செய்ய விடாமல், போலீசைத் தடுப்பது முறையல்ல என்று காவல் துறை அதிகாரிகள், மருத்துவர்களுக்கு விளக்கிக் கூறினார்கள். வரம்பு மீறி, திரு. தாமரைக்கனி அவர்களுக்கு மருத்துவர்கள் பாதுகாப்புக் கொடுப்பதைப் பார்த்தும், அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவைப் பார்த்தும், அங்கே இருந்த முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்கள் செங்கோட்டையன், முத்துசாமி, கரூர் சின்னசாமி, மதுசூதனன், செல்வகணபதி மற்றும் அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் பாலகங்கா, ஆதிராஜாராம் மற்றும் அ.தி.மு.க.-வைச் சேர்ந்த 100 பேர், திரு. தாமரைக்கனியைச் சூழ்ந்து கொண்டு,



மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் அதையொட்டிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு, காவல் துறையினர், தங்கள் கடமையைச் செய்ய விடாமல் தடுத்து, கோஷம் போட்டார்கள்.

முற்பகல் 11-05

திரு. தாமரைக்கனி அவர்களுக்கு எந்தவிதமான ரத்தக் காயமோ அல்லது தீவிர சிகிச்சை செய்யவேண்டியதற்குரிய எந்தவிதமான நோயோ அல்லது காரணமோ இல்லாமல், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பிறப்பித்த பிடியாணையிலிருந்து தப்பிக்க வேண்டி, சில மருத்துவர்கள் உதவியோடு தஞ்சம் புகுந்திருப்பது தெளிவானதால் அவரை மாலை 6-15 மணிக்கு, பிடியாணையை நிறைவேற்றும் முகத்தான் கைது செய்து, பிறகு அவரை சென்னை மத்திய சிறைச்சாலைக்குக் கொண்டு செல்வதற்கு முன்பாக, அவருக்குத் தலையிலும் கைகளிலும் Bandage-கள் போடப்பட்டிருந்ததால் உண்மையிலே அவருக்கு ஏதாவது காயம் அல்லது அடி பட்டிருக்கின்றதா என்பதைக் கண்டறிய அரசு மருத்துவமனைக்கு அவரை மாலை ஆறே முக்கால் மணிக்கு அழைத்துச் சென்று, அங்கே அரசு பொது மருத்துவமனை டீன் (Dean) டாக்டர் பிரேம்குமார் தலைமையில் பின்வரும் மருத்துவர்கள் அடங்கிய குழு அவரை முழுமையாக இரண்டு மணி நேரம் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளையும் - தலை, மார்பு, கைகள், அடிவயிறு ஆகிய இடங்களில், X-Ray, Ultrasound Scanning, E.C.G., போன்ற மருத்துவப் பரிசோதனைகளைச் செய்தார்கள். சர்ஜரி பேராசிரியர் டாக்டர் ராமச்சந்திரன், அவசரகால சிகிச்சைப் பிரிவு மருத்துவர் டாக்டர் தாமோதரன், அவசர சிகிச்சைப் பிரிவு மருத்துவர் டாக்டர் உதயசேனாபதி, டாக்டர் ராஜதுரை, R.M.O. ஆகிய மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் இரண்டு மணி நேரம் தாமரைக்கனியைப் பரிசோதனை செய்தார்கள். அவருடைய தலையிலும், கைகளிலும் போடப்பட்டிருந்த Bandage-களைப் பிரித்துப் பார்த்ததில், எந்தவிதமான காயங்களோ அல்லது கன்றிப்போன காயங்களோகூட இல்லை என்பது தெரிய வந்தது. மேலும், மருத்துவக் குழுவினர் அவரை மருத்துவமனையில் வைத்து, மேல் சிகிச்சை செய்ய வேண்டிய எந்த நோயும் இல்லை என்றும் ஒருமித்த கருத்தைத் தெரிவித்த காரணத்தால், தாமரைக்கனி, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களின் பிடியாணையின் பேரில் இரவு 8-50 மணிக்கு, சென்னை மத்திய சிறைச்சாலையில் கொண்டுபோய் அனுமதிக்கப்பட்டார் என்ற இந்தச் செய்தியை இந்த அவைக்குக் கூறுகின்றேன்.

அதோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்கள் கையிலே ஒரு பெரிய Bandage-ஐப் போட்டுக்கொண்டு படுத்திருப்பதைப் போன்ற ஒரு படம் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதுவும் மக்களை ஏமாற்றுவதற்காக எடுக்கப்பட்ட படம் என்பதையும், அந்த மருத்துவமனையில் தொடர்பு கொண்டு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசியபோது, அவரை வெளியே போகச் சொன்னால் போக முடியாது என்று மறுத்து இங்கேயே இருக்கிறார்; அவர் போக மறுக்கிறார்; அவருக்கு எதுவும் இல்லை என்று அங்குள்ள மருத்துவர்கள் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் சொல்லியிருக்கின்றார்கள். அதுமாத்திரமல்லாமல், அவர்கள் அவரை வெளியே அனுப்ப போலீசாருடைய துணையையும் நாடியிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த அளவிலே இடையில் ஏற்பட்ட நிகழ்வுகளைத் தங்கள் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். ஆகவே இதைத் தெரிவித்துள்ளேன்.

## 6. சிறப்புக் கவன ஈர்ப்பு

### தீவிரவாதிகளுக்கும் சிறைக் காவலர்களுக்கும் இடையே சிறைச்சாலைகளில் ஏற்பட்ட மோதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் இருக்கும் தீவிரவாதிகளுக்கும் காவலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. எஸ். திருநாவுக்கரசு, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. ஐ. கணேசன், திரு. சி. வேலாயுதன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே, அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன். (குறுக்கீடு) யார் பேசுவது என்று நீங்கள் ஏதாவது முடிவு பண்ணுகிறீர்களா? (குறுக்கீடு) திரு. ஆருண், நீங்கள் அறிவிப்பே கொடுக்கவில்லை. நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சரி, இங்கே என்னைப் பார்த்துப் பேசுங்கள். முதலில் திரு. சி. ஞானசேகரன் பேசுவார்.

*முற்பகல் 11-10*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் சிறைச்சாலையில் மூன்று நாட்களுக்கு முன்னால், ஏற்கெனவே



அங்கே இருக்கக்கூடிய தீவிரவாதிகள், அங்கே இருக்கக்கூடிய கண்காணிப்பாளர் அவர்களையும் மற்றும் ஜெயிலர் போன்றவர்களையும் தாக்கியதால் அவர்கள் எல்லாம் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். பிறகு சில தீவிரவாதிகள் ஒரு மஞ்சள் நிற வேனில் வந்து கண்காணிப்பாளர் மற்றும் ஜெயிலர் போன்றவர்களுடைய வீடுகளையெல்லாம் வீடியோ படம் எடுத்துள்ளதால், அவர்களுடைய குழந்தைகள் எல்லாம்கூட பள்ளிகளுக்குப் போவதற்குப் பயந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. இது வேலூர் சிறையில் மட்டுமல்ல, பல சிறைகளில் நடக்கின்றது. நாம் யாரெல்லாம் சமூக விரோதிகள், தீவிரவாதிகள் என்று அடையாளம் காட்டி அவர்களையெல்லாம் சிறையில் அடைத்தோமோ அவர்கள் திருந்துவதற்கு, அங்கு இருக்கக்கூடிய சிறைச்சாலைகள் ஒரு வாய்ப்பை நல்கும் என்று எண்ணிய எண்ணம் எல்லாம் இப்போது தோற்றுப் போய், அங்கேயும் அவர்கள் தங்களுடைய வேலைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இவர்கள் ஆயுதங்களை வைத்துக்கொண்டு சிறை அதிகாரிகளைத் தாக்குகின்ற நிலை, தமிழகத்திலே வந்திருப்பது நாட்டிற்கு நல்லதல்ல. இப்படிப்பட்ட ஒரு நிலையினால் சிறை என்பது நம்முடைய அரசினுடைய கையில் இல்லாத அளவிற்கும் கட்டுப்பாட்டில் இல்லாத அளவிற்கும் போய்க்கொண்டிருக்கிறது என்கின்ற ஓர் அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே, இந்த மாமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கூற்றை முழுமையாக மறுத்து அங்கு ஆயுதமேயில்லை, சிறைக் கைதிகள் யாரும் ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்கவில்லை, எல்லாமே சரியான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். பிறகு, படிப்படியாகப் பார்த்தபோது எல்லா சிறைச்சாலைகளிலும் இப்படிப்பட்ட ஒரு நிலை வந்திருப்பது உண்மையிலேயே அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது. நாடாளுமன்றத்திலேகூட இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, நாடாளுமன்றக் குழு சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு ஏன் இதுமாதிரி ஏற்பட்டது என்று ஓர் அறிக்கையாகத் தந்து நிலைமைகளைச் சரி செய்யக்கூடிய நிலை வந்து கொண்டிருக்கின்ற காரணத்தாலே நம்முடைய தமிழகத்திலும் அரசு ஒரு குழுவைப் போட்டு எல்லாச் சிறைச்சாலைகளையும் பார்த்து, அங்கே இருக்கக்கூடிய நிலையை அறிந்து இந்த அரசுக்கு ஓர் அறிக்கையாகக் கொடுக்கலாம்; நடவடிக்கை எடுக்கலாம். அரசேகூட கடுமையான நடவடிக்கை எடுத்து சிறையிலே

[திரு. சி. ஞானசேகரன்] [1999 மார்ச் 23

பணியாற்றக்கூடியவர்களுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தாக வேண்டும். சிறையிலே பணியாற்றக்கூடியவர்கள் அஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் இப்போது பள்ளிக்குக்கூட போக முடியவில்லை. வேலூரிலேயும் பயந்து கொண்டுதான் இருக்கிறார்கள் எனவே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்திருப்பதை அரசு கவனித்து — மாண்புமிகு முதல்வர் அவர்களும், தமிழக அரசும் நடவடிக்கை எடுத்து—ஒரு குழுவைப் போட்டு உண்மை நிலையைக் கண்டறியவும், தீவிரவாதிகளுடைய செயல்களைக் கண்டறிந்து, ஒரு சுமுக நிலையை, அமைதியை தமிழகத்திலே கொண்டு வருவதற்கு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமீபகாலத்தில் தமிழ்நாட்டில் மத்திய சிறைகளில் சில அசம்பாவித சம்பவங்கள் தொடர்ந்து வருவது வேதனை அளிக்கின்ற ஒன்றாக இருக்கிறது. ஆனால், சிறைச்சாலைக்கு உள்ளே இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏன் நிகழுகின்றன என்பது பற்றி வெறும் செய்திகளை வைத்துக்கொண்டு மட்டும் மதிப்பீடு செய்வது அவ்வளவு பொருத்தமானதாக இருக்காது என்று நான் கருதுகிறேன். தமிழ்நாட்டுச் சிறைகளிலே இப்படிப்பட்ட நெருக்கடிகள் தோன்றுவதற்கான காரணகாரியங்கள் பற்றி முழுமையாக இப்போது எடுத்துச் சொல்வதற்கு விரும்பவில்லை. ஆனால், தமிழ்நாட்டில் அடைக்கப்பட்டிருக்கிற குறிப்பிட்ட சிறைவாசிகளுக்கிடையில் நடந்திருக்கிற இந்தப் பிரச்சினை வெறும் சட்டப் பிரச்சினை என்று மட்டும் பார்ப்பது பிரச்சினைக்குத் தீர்வு அளிக்க உதவாது என்று நான் கருதுகிறேன். இதில் சமூகப் பிரச்சினையும் உள்ளடங்கிக் கிடக்கிறது. அவர்களுடைய நடவடிக்கைகளில் எந்த வகையிலும் நியாயம் இல்லை, அந்த நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கது, தண்டிக்கத்தக்கது என்பதில் எள்ளளவும், எள் முனை அளவும் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் அவர்கள் சிறைச்சாலைகளுக்குள்ளே செய்கிற இந்த நடவடிக்கைகளை மயிரிழை அளவும் ஆதரிக்கவோ, ஊக்குவிக்கவோ முடியாது என்றாலும் வெறும் உணர்ச்சி நிலையில் இருந்து மட்டுமே இந்தப் பிரச்சினையை அணுகித் தீர்வு காணலாம் என்று நாம் கருதினால் அது வேறு வகையில் எதிர்விளைவையே தோற்றுவிக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இத்தகைய தீவிரவாதத்தை வெறும் முஸ்லீம்கள் தீவிரவாதம் என்று மட்டும் ஒரு குறிப்பிட்ட எல்லை போட்டு பரிசீலித்து விடக் கூடாது.



1999 மார்ச் 23] [திரு. கே. சுப்பராயன்]

இந்தத் தீவிரவாதத்தைப் பற்றி முன்னரும் சொல்லியிருக்கிறேன், இப்போதும் சொல்கிறேன், தீவிரவாதத்தைத் தோற்றுவித்தது இந்துத் தீவிரவாதம்தான். தமிழ்நாட்டில் இஸ்லாமியத் தரப்பினை ஆத்திர மூட்டுகின்ற—

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீவிரவாதத்தைக் குறிப்பிடும்போது முஸ்லீம் தீவிரவாதிகள், முஸ்லீம் தீவிரவாதிகள் என்று குறிப்பிடுகிறார்கள். தீவிரவாதிகள் என்ற அளவிலே குறிப்பிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு விஷயத்தை முழுமையாகக் கேட்டுவிட்டுப் பதில் அளிப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். இங்கே என்ன குறிப்பிடுகிறேன் என்றால்—முஸ்லீம் தீவிரவாதிகள் என்று சுருக்கிக் குறிப்பிட்டுப் பேசப்படுவது அவ்வளவு சரியானது அல்ல—அந்தத் தீவிரவாதம் தோன்றுவதற்கு, தமிழ்நாட்டில் காரணமாக அமைந்தது இந்துத் தீவிரவாத அமைப்புகளின் ஆத்திரமூட்டுகிற நடவடிக்கைகள்தான். இன்றைக்கு அவை விஸ்வரூபம் எடுத்திருக்கின்றன. தமிழ்நாட்டின் சிறைச்சாலைகளுக்குள் நடைபெற்ற இந்தப் பிரச்சினையை வெறும் சிறைச்சாலைகளுக்குள் நடைபெற்ற பிரச்சினையாக மட்டும் நான் பார்க்கவில்லை. (குறுக்கீடு)

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலாயுதன், உட்காருங்கள். திரு. அப்துல் நாசரே, திரு. சுப்பராயன் பேசியதைப் புரிந்து பேசவில்லை. திரு. வேலாயுதன் புரிந்து கொண்டாரா என்று கேட்கலாம்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஆரம்பம் முதலே பார்த்தோம் என்று சொன்னால், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகும்கூட, இதுபோன்ற பிரச்சினைகளை முதலில் யார் தொடங்கியது என்பதை அரசாங்கம் கண்டறிய வேண்டும். அதனால்தான் கலைஞரிடம் பேசும்போதே நான் சொன்னேன், தமிழகத்தில் பயங்கரவாதம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த சிறப்புக் கவன ஈர்ப்பில் நீங்களும் பேசப்போகிறீர்கள், அப்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் பயங்கரவாதம் பாரதிய ஜனசங் தோன்றியதிலிருந்து

இருக்கிறது. அன்றைக்குத் தொடங்கிய அந்தப் பிரச்சினை இன்றைய வரையிலே தொடர்ந்து நீடித்துக் கொண்டு இருக்கிறது. ஏன் இங்கே இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், தமிழ்நாட்டில் பலரும் சொல்கிறார்கள், அண்மையில் திருச்சியிலே நடந்த மாநாட்டிலே கூட சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டதாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் தீர்மானம் போட்டிருக்கிறவர்கள்தான் சட்டம்-ஒழுங்கு நிலைகுலையக் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் சிறைச்சாலைகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் கலகம் செய்கிறார்கள் என்கிற செய்திகள் வெளிவருகின்றன என்றால் இந்த மாநில அரசு அவர்களைக் கைது செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது? அந்த இளைஞர்கள் தீவிரவாதச் செயலுக்கு இரையாக வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது யார்? இந்துத் தீவிரவாத அமைப்புகள்தான். அந்த minority மக்கள் இந்தியாவில் சுதந்திரமாக வாழ முடியாது என்கிற ஒருவிதமான அச்சத்தை ஏற்படுத்தியதால் வாழ்க்கையில் அச்சப்பட்டவர்கள் தவறான வழிமுறைக்குப் போய்விட்டார்கள். அந்த வழிமுறை தவறு என்றாலுமகூட, தவறான வழிமுறையைத் தேர்ந்தெடுக்க அவர்களைத் தூண்டியது இந்துத் தீவிரவாதம் என்பதை நான் வலுவான முறையில் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

எனவே, தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிற அந்த முஸ்லிம் இளைஞர்கள், வெறும் குற்ற நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் என்று மட்டும் சுருக்கி நின்று தீர்வு காணக்கூடாது. இது ஒரு சமூகப் பிரச்சினை. சமூக ரீதியாகத் தீர்வு காண வேண்டும். நான் இன்னும் தெளிவாகக் குறிப்பிட விரும்புவது, அவர்களின் பிரச்சினைகள்தான் என்ன என்பதைத் தெளிவாகக் கேட்டு, ஆராய்ந்து, அந்தப் பிரச்சினைகளுக்கு, அரசியல் ரீதியாகத் தீர்வு அளிக்க முடியுமா என்பதையும் முயற்சிக்க வேண்டும். அதேநேரத்தில், சிறைச்சாலைகளுக்குள் இத்தகைய தீவிரவாதம் தோன்றாத அளவிற்கு, தீவிர நடவடிக்கை எடுக்க மத்திய அரசை மாநில அரசு அணுகி இருக்கிறதா? காவல் துறையிலும் சரி, சிறைச்சாலைகளிலேயும் சரி, அதிகபட்சமான முறையில் விழிப்போடும், நவீன கண்காணிப்பு முறைகளோடும், செயல்படுவதற்குரிய நடவடிக்கைகளையும் அரசு எடுத்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளிலே தீவிரவாதிகளுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் கடுமையான போராட்டம், யுத்தமே நடந்திருக்கிறது என்ற நிலையைப் பத்திரிகையிலே பார்க்கும்போது, நாட்டு மக்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது. சென்னை, மத்திய சிறைச்சாலையிலே தீவிரவாதிகள், ஓர் அதிகாரியை அடித்து, உதைத்திருக்கிறார்கள். அதேபோல், வேலூர் சிறைச்சாலையிலே 12-3-1999 அன்று நடந்த தாக்குதலில் Jail Superintendent உட்பட 7 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். Jail-லே அடைக்கப்பட்ட தீவிரவாதிகள் சிறையை உடைத்து எரிந்துவிட்டு, தப்பிக்க முயற்சிகள் நடந்திருப்பதாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல. அந்தத் தீவிரவாதிகளிடத்திலிருந்து காவல் துறையினர் கைப்பற்றியது பளபளப்பான 15 பட்டாக் கத்திகள், 20 கூர்மையான தகடுகள், மற்றும் 50 க்கும் மேற்பட்ட ரகசியக் கடிதங்கள், அத்துடன் கத்தை கத்தையாக நோட்டுகள் ஆகும்.

முற்பகல் 11-20

அதேபோல், தமிழ்நாட்டினுடைய சிறைச்சாலைகள்—முதலமைச்சர் கோபித்துக்கொள்ளக் கூடாது, அவருக்கு உடல்நலம் சரியில்லை. தமிழ்நாட்டுச் சிறைச்சாலைகள் — சொகுசுப் பேருந்துகளாக மாறிவிட்டதோ என்று நினைக்கும் அளவிற்கு சுற்றுலாப் பயணிகளின் விடுதிகள் போல் தீவிரவாதிகள் வந்து செல்வதாக — நான் சொல்லவில்லை — பொது மக்கள் சொல்கிறார்கள். ஆகையால் குற்றவாளிகளுக்கு இந்த நாட்டிலே தண்டனை போதுமானதாக இல்லையோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு உள்ளதால் இந்தியத் தண்டனைச் சட்டத்தை இஸ்லாம் நாட்டிலே இருப்பதைப் போல — தீவிரவாதங்களுக்காக—மாற்றினால்கூடப் பொருத்தமாக இருக்குமோ என்ற எண்ணம் பொது மக்கள் மத்தியில் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மதுபாட்டில்கள், ஆயுதங்கள், Cellular Phones, பணம், இன்னும் சிறைச்சாலைக்குள் கொண்டு போகமுடியாத பொருட்கள் அத்தனையையும் சிறைச்சாலையிலிருந்து காவல் துறை கைப்பற்றி இருக்கிறது. அதற்கு யார் காரணம்? அந்தக் கருப்பு ஆடுகள் யார்? அந்தக் கருப்புக் கழுகுகள் யார்? அந்தப் பொருட்களையெல்லாம்

உள்ளே கொண்டு சென்றவர்கள் யார்? அதற்கு உதவிபுரிந்த அதிகாரிகள் யார் என்பதை முதலமைச்சர் அவர்கள் கண்டறிந்து உண்மையான— நல்லவர்கள் யாரும் பாதிக்கப்படாமல் — குற்றவாளிகளை அரசு கண்டுபிடித்து அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். காரணம், இப்போது குற்றவாளிகளுடைய கூடாரமாக நம் நாட்டினுடைய சிறைச்சாலைகள் மாறிக் கொண்டிருக்கின்றன என்பதனைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளுக்குள்ளே நடைபெறுகிற சம்பவங்கள்மீது அல்லது நடைபெறுவதாகச் சொல்லப்படுகிற சம்பவங்கள் குறித்து பத்திரிகைகளில் பலவாறு செய்திகள் வெளிவருகின்றன. தீவிரவாதத்திலே, வன்முறையிலே ஈடுபடுகிறவர்கள் யாராக இருந்தாலும், அது இந்துக்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்கள்மீது பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுத்து, பொது அமைதியை நிலைநாட்டுவதும், பொது மக்களுக்குப் பாதுகாப்பு தருவதும், ஓர் அரசினுடைய தலையாய கடமையாகும். அந்தக் கடமையில் அரசு ஈடுபடுகிறபோது சிலர் சிறைக்குள் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. நான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, இப்போது தமிழ்நாட்டில் உள்ள சிறைகளிலே—குற்றவாளிகள் தவிர்த்து, பல்வேறு குற்றங்களிலே சம்பந்தப்பட்ட குற்றவாளிகளாக இருப்பவர்கள், சிறைத் தண்டனை அனுபவிப்பவர்கள் தவிர்த்து — இதுபோன்ற தீவிரவாதம் என்கிற அடிப்படையிலே கைது செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்? குற்றங்களிலே நேரடியாகச் சம்பந்தப்பட்டு, வழக்குகளிலே சம்பந்தப்பட்டு உள்ளே இருப்பவர்கள் எத்தனை பேர்? தடை செய்யப்பட்டிருக்கிற தீவிரவாத அமைப்புகளிலே பங்கேற்றிருக்கிறார்கள் என்கிற அடிப்படையிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எவ்வளவு பேர்? சந்தேகத்தின் அடிப்படையிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் எவ்வளவு பேர் என்று இப்படி நீங்கள் பிரித்துப் பார்த்து அவர்களுக்கான முழு விவரங்களையும் நீங்கள் வாங்கிப்பெற்று, அவர்களுடைய பின்னணி, கடந்தகால வரலாறு இவற்றையெல்லாம் நீங்கள் ஆராய்ந்து பார்த்து சந்தேகத்தின் அடிப்படையிலே வேறு எந்தவிதமான குற்றங்களிலேயும் ஈடுபடாமல் இருப்பவர்கள், அல்லது அவர்களாலே பின்னால் பிரச்சினை இருக்காது என்று நீங்கள்



கருதினால், அது தீவிரவாதத்தின் அடிப்படையிலே இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, குற்றங்களிலே சம்பந்தப்படாதவர்கள், தடைசெய்யப்பட்ட தீவிரவாத அமைப்புகளிலே சம்பந்தப்படாதவர்கள் — முறையற்ற முறையில் யாராவது உள்ளே இருப்பார்களேயானால், அவர்களையெல்லாம் வெளிவிட அரசு நடவடிக்கை எடுக்கலாம். இது ஒன்று.

இரண்டாவது, இப்படிப்பட்ட பிரச்சினையின் அடிப்படையிலே தகுந்த ஆதாரங்களோடு உள்ளே இருப்பவர்கள், முறையாக நடந்துகொள்கிறார்களா? கண்காணிப்புப் பணியிலே சிறைத் துறை அதிகாரிகளாகப் பணியாற்றுகிறவர்களை எல்லாம் அச்சுறுத்துகிற சூழ்நிலை நடைபெறுகிறதா? இவைபோன்றவற்றையெல்லாம் ஆய்வு செய்வதற்காக, மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப் போல நானும் கேட்டுக்கொள்வது — சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை — இன்னும் சொல்லப்போனால் பத்திரிகையாளர்களைக்கூடச் சேர்த்து அனுப்பலாம். அவர்களும் போய்ப் பார்க்கட்டும். ஏனென்றால், சில பத்திரிகைகளிலே பெரிய பெரிய ஆயுதங்கள் எல்லாம் உள்ளே இருக்கின்றன என்று செய்தி வருகிறது. ஒன்றுமே இல்லை என்று சில பத்திரிகைகளிலே செய்தி வருகிறது. இந்தமாதிரி மாறுபட்ட செய்திகள் வருகின்றன. உள்ளே இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, அல்லது சிறைத் துறை அதிகாரிகளுக்குப் பயந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று இப்படியெல்லாம் வருகின்ற செய்திகளிலே என்னதான் உண்மை என்பதைக் கண்டறிய அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவை அமைத்து — வேண்டுமானால் முக்கிய பத்திரிகையாளர்களையெல்லாம் சேர்த்து பத்திரிகையாளர்கள் குழு அமைத்து அல்லது இவர்கள் எல்லாம் சேர்ந்து இடம் பெறச் செய்து, அந்தக் குழு சென்று நேரடியாகவே அங்கே இருக்கிறவர்களையெல்லாம் பார்க்கலாம். — ஏனென்றால், 5, 6 சிறைகள்தான் இருக்கின்றன — பார்த்து அதனுடைய அறிக்கையைப் பெற்று, அரசு அந்த அறிக்கையை வெளியிட வேண்டும். அதனடிப்படையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளில், வேலூரில் மட்டுமல்ல, இதுபோன்று பல சிறைச்

சாலைகளில் நடந்துகொண்டிருக்கின்றது. எனவே, அதை கவனமாகப் பார்த்து எப்படி சிறைச்சாலைக்குள்ளே ஆயுதம் வந்தது என்பதை அறிய வேண்டும். அதேபோன்று குற்றவாளிகள் தண்டனை அனுபவிப்பதற்கும், திருந்துவதற்கும், வெளியிலே உள்ளவர்களும் பயந்து இதுபோன்ற தவறுகள் செய்யாமல் இருப்பதற்காகவும்தான் சிறைத் தண்டனை வழங்கப்படுகின்றது. ஆனால் சிறைச்சாலைக்குள்ளும் ஆயுதம் கொண்டு போக முடியும், வெளியில் எந்த அளவுக்கு நடக்கிறோமோ அந்த அளவுக்கு அநாகரீகமாக சிறைக்குள்ளேயும் நடந்துகொள்ள முடியும் என்ற சூழ்நிலை வரும் என்று சொன்னால் சிறையினுடைய ஒரு மகத்தான நோக்கத்தையே அது கெடுத்துவிடுகின்றது எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் இந்துத் தீவிரவாதம் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். உண்மையிலேயே கொலையாளி, சட்டத்திற்குப் புறம்பாக நடக்கக்கூடியவர் அனைத்து சமயங்களிலும் இருந்திருந்தாலும்கூட, மத ரீதியாக இதுபோன்ற தவறுகள் எப்படி வருகின்றன என்ற முறையில் ஒவ்வொரு சம்பவத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்து என்ற சொல் என்னைப் பொறுத்தமட்டில் வழிபாட்டு ரீதியாக வந்த ஒரு சொல் அல்ல. வழிபாட்டு ரீதியாக, சைவம், புத்தம், வைணவம் என்றுதான் உள்ளது. மற்ற சமயங்கள் சொல்வதைப் போன்று இன்ன கடவுளைக் கும்பிடக்கூடியவர் இந்து என்று ஒரு கடவுளை இதுவரையில் யாரும் சொன்னது கிடையாது. எனவே இந்து என்பது வழிபாட்டு ரீதியான ஒரு சொல் அல்ல. அப்படிப் பார்த்தாலும்கூட இதுபோன்ற குறைகளைச் சிந்தித்துப் பார்த்தோம் என்று சொன்னால், அனைத்து சமயங்களிலும்கூட இதுபோன்ற சமூகத் துரோகிகள் உண்டு. ஒரு ஆளை வெட்டிக் கொன்றுவிட்டு, எந்த சமயத்தினுடைய கொலையாளியாக இருந்தாலும் ஒரு கொலையை, ஒரு தவறைச் செய்துவிட்டு நான் என்னுடைய சமயத்திற்காகச் செய்தேன் என்று கோஷம் போட்டு வருவது இதுவரையிலும் கிடையாது. எனவே சமய அடிப்படையில் சமயத்தைச் சொல்லித் தவறு செய்கின்றேன் என்று...

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**திரு. சி. வேலாயுதன்:** நான் பேசி முடித்ததற்குப் பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலாயுதன் பேசி முடித்தபிறகு நீங்கள் பேசுங்கள்.



**திரு. சி. வேலாயுதன்:** எனவே நான் என்னுடைய சமயத்திற்காகச் செய்கின்றேன் என்று சொல்லி — மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்கள் – இதுவரை எந்தச் சமயத்தை எடுத்துக்கொண்டாலும்கூட என்னுடைய சமயத்திற்காக நான் செய்கின்றேன், மதத்திற்காகச் செய்கின்றேன். இது என்னுடைய புனிதம் என்று சொல்லி இதுபோன்ற தவறைச் செய்யக்கூடி நிலை வேறு எங்கும் கண்டதில்லை. எனவே, தமிழக அரசு சமய ரீதியாக நடக்கக் கூடாது. மற்றபடி தவறுகள் ஆயிரம் நடக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த அரசு அனைத்துத் துறைகளிலும் முயற்சிக்கின்றது. ஆனாலும்கூட, சமயத்தைச் சொல்லி, சமயத்திற்காக நான் செய்கின்றேன் என்று சொல்கின்றார்கள் என்று சொன்னால் சமயத்தினுடைய தூண்டுதல் பின்னால் இருக்கின்றதா? சமயத் தலைவர் பின்னால் இருக்கின்றாரா? இதை ஒரு நியாயமாகக் கருதக்கூடிய வகையில் பயங்கரவாதத்தை ஊக்கப்படுத்துகிறார்களா என்பதையெல்லாம் கண்டறியவேண்டும். எனவே சமயத்தின் அடிப்படையில் உள்ள பிரச்சினையைப் போக்குவதற்கு இதுதான் அடிப்படையாக அமையும்...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சமயத்தின் பின்னணி எதிலும் இருக்கக் கூடாது. அதாவது மதத்தின் பின்னணி இருக்கக் கூடாது என்பது மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்களுடைய வாதம். பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது எந்தப் பின்னணியிலே இடிக்கப்பட்டது? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபர் மசூதி இடித்த பிரச்சினையிலேகூட அந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டித்தார்கள். உண்மையிலே, பி.ஜே.பி. உட்பட கண்டித்தது (சிரிப்பு) உண்மையிலேயே என்னுடைய வாதம் என்ன என்று சொன்னால் அது ஒரு மசூதி அல்ல. எந்தவொரு இஸ்லாமிய சகோதரரும் அங்கே சென்று நான் தொழுகை நடத்தினேன் என்று சொன்னது கிடையாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுக்கவில்லை. நீங்கள் உட்காருங்கள், திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** இன்னொன்று, அது பாபர் காலத்தில் பாபர் இந்த நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டபொழுது இராமர் ஆலயத்தை இடித்துவிட்டு, அங்கு ஒரு கட்டடத்தைக் கட்டினார். நான் இந்த

நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டேன் என்பதற்காக நினைவுச் சின்னமாகக் கட்டினார். அது ஒரு தொழுகை மசூதி அல்ல, என்று பல சமயப் பெரியவர்கள்கூடப் பேசியிருக்கிறார்கள். அதை மசூதி என்று சொன்னால் அதனுடைய இரண்டு பக்கத்திலேயும் மினார் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி கொடுத்தால்தான் எழுந்து பேசலாம், உட்காருங்கள். திரு. வேலாயுதன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** ஒருசிலர்தான் தொழுகை நடத்திய இடம் என்று சொல்கின்றார்கள். உண்மையிலேயே அது ஒரு பாழடைந்த, பாபர் கட்டிய ஒரு கட்டடம். கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அங்கு இராமர் விக்கிரகம் வைக்கப்பட்டிருந்தது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாபர் எழுப்பிய அந்த மண்டபம் பாழடைந்து கிடக்கிறது. அங்கே புதர்களும் மண்டிக் கிடக்கின்றன, பாம்புகளும் தேள்களும் ஊர்கின்றன. அதனால் மக்களுக்கு அபாயம் என்ற கருத்திலா அந்த இடம் இடிக்கப்பட்டது. இல்லை. இது முஸ்லிம்களுடைய புனித இடமாகக் கருதப்படுகிறது. இசுலாமியர்களுடைய பேரரசராக விளங்கிய பாபரால் கட்டப்பட்டது என்பதற்காக, அந்தக் காரணத்திற்காக இடிக்கப்பட்டதேயல்லாமல் அது பாழடைந்த கட்டடம் என்பதற்காக இடிக்கப்படவில்லை. பாழடைந்த கட்டடம் என்பதற்காக இடிக்கப்பட்டால், இப்போதுள்ள பாரதிய ஜனதாவின் ஆட்சி அதைப் புதிய கட்டடமாக கட்டித் தரலாமே? ஏன் இன்னும் அதற்கான முயற்சி தொடங்கப்படவில்லை?

முற்பகல் 11-30

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இப்போது அனுமதி கொடுத்திருப்பது ஒரு சிறிய பிரச்சினையைப் பற்றி. சிறையிலே தீவிரவாதிகளுக்கும் காவலர்களுக்கும் இடையே நடந்ததைப் பற்றிப் பேசுவதற்கு. ஆனால், நீங்கள் இங்கே தத்துவப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். நீங்களும் திரு. சுப்பராயனும் தனி மேடை அமைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** திரு. சுப்பராயன் பேசவில்லை என்றால் நான் பேச வேண்டிய அவசியமே வந்திருக்காது. அவர் பேசியதினாலே நானும் சொன்னேன். எனவே, அது ஒரு பாழடைந்த கட்டடம்.



அனைத்து அரசியல் தலைவர்களும் அதை ஒரு மசூதியாகச் சித்தரித்துவிட்டார்கள். எனவே, இந்தப் பிரச்சினை மதக் கலவரம் வருவதற்கு ஒரு காரணம். பாழடைந்த கட்டடத்தை—மசூதியை— உடைத்துவிட்டார்கள் என்ற ஒரு பொய்யான வாதத்தையும் அனைத்து அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொக்கரிக்கின்ற காரணத்தாலே இந்தப் பிரச்சினை வந்தது..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** பேசி முடித்துவிடுகிறேன்.

(திரு. அ.வ. அப்துல் நாசர், திரு. ஜி. நிஜாமுதீன் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர். திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் உட்கார்ந்தவாறு கையை உயர்த்தி, பேசுவதற்கு அனுமதி கோரினார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, புதிய பாடம், வேறு யாரிடமாவது கற்றுக்கொண்டிருக்கிறீர்களா ஒன்றாக எழுந்து நின்று பேசுவதற்கு? நான் இருக்கிறேன், முதலமைச்சர் இருக்கிறார். உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு உட்காருங்கள். திரு. வேலாயுதன், பேசி முடியுங்கள். பொய்யான தகவலையெல்லாம் தந்தால் அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடுவேன்.

**திரு. சி. வேலாயுதன்:** சிறையினுடைய புனிதம், கட்டுப்பாடு தமிழக அரசினுடைய கௌரவம் ஆகியவற்றைக் காப்பாற்றுகிற வகையில், நல்ல சூழ்நிலையை மீண்டும் சிறைச்சாலைக்குள் கொண்டு வரவேண்டும். அதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அனைத்தையும் அரசு எடுத்து சிறையினுடைய கட்டுப்பாட்டையும் குற்றவாளிகள் மேலும் தவறு செய்யாத அளவிற்குக் கடுமையான அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அரசு கவனத்தில் கொண்டு எந்த அளவிற்கு சிறைச்சாலையினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற முடியுமோ அந்த அளவிற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே நான் அனுமதித்திருப்பது சிறைச்சாலையில் நடந்த தீவிரவாதிகள், காவலர்கள் இடையே உள்ள பிரச்சினையைப் பற்றி. நீங்கள் யாரும் இதை இந்து,

முஸ்லிம் பிரச்சினையாக இங்கே பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது. அதிலே வந்த பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரே தெளிவாகக் கேட்டுவிட்டார்கள். அதற்கான சரியான பதிலைக் கொடுத்திருக்கிறாரா இல்லையா என்பதை அவருடைய மனசாட்சி சொல்லும். கேட்பவர்கள் தெரிந்துகொள்ளலாம். இதை வேறு மாதிரி திசை திருப்புவதற்கு நான் அனுமதி கொடுக்க மாட்டேன். அடுத்து, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ........

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வார்த்தையை மட்டும் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஒன்றும் வேண்டாம், உட்காருங்கள்.

**திரு. லி. அய்யலுசாமி:** அவைக்குத் தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கெல்லாம் சேர்த்து, அது தவறு என்று சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கேட்டுவிட்டார்கள்.

(திரு. ச. அழகிரி எழுந்து நின்றார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் ஒவ்வொருவரும் எழுந்து நிற்கிறீர்கள்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. பாபர் மசூதி பாபரால் கட்டப்பட்டதல்ல. பாபரின் படைத் தளபதியால் பாபரின் பெயரில் கட்டப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இப்படியே போனால் கொத்தனார் கட்டினார் என்றுகூடச் சொல்லலாம். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி.





***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களாக கோவை, வேலூர் உட்பட சில சிறைச்சாலைகளில் சிறைக் காவலர்களுக்கும் சிறைவாசிகளுக்கும், குறிப்பாக கோவை குண்டுவெடிப்பிலே கைதானவர்களுக்கும் மோதல்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்த வண்ணம் உள்ளன. கோவை மத்திய சிறையில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பத்திரிகையில் செய்தி வந்து, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அந்தச் செய்தி மாண்புமிகு அமைச்சரால் மறுக்கப்பட்டது. ஆயுதங்கள் கைப்பற்றப்படவில்லை; அலுமினியத் தட்டுக்கள்தான் மடித்து வைக்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டது. எனினும், சமீபத்திலே கோவையிலே, வேலூரிலே சிறைக் காவலர்களுக்கும் சிறைவாசிகளுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டு சிறையிலே இருக்கக்கூடிய சில சிறைவாசிகள், பாட்சா உட்பட சிலர் 3, 4 நாட்களுக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள் என்ற செய்திகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. சிறைவாசிகளில் இஸ்லாமியர், கிருத்துவர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்ப்பது நியாயமில்லை. ஒருவேளை சிறைச்சாலைக்குள்ளே ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பினும், சிறைவாசிகளைக் குற்றம் சுமத்துவது நியாயமில்லை. அதற்காக சிறைக் காவலர்களைத்தான், அங்கே பாதுகாப்பு கொடுக்கக் கூடியவர்களைத்தான் குற்றம் சுமத்த முடியுமே தவிர சிறைவாசிகளைச் சொல்ல முடியாது. ஒட்டுமொத்தமாக கோவை சிறையிலும், வேலூர் சிறையிலும் மற்றும் பல்வேறு சிறைகளிலேயும் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது இந்த மாமன்றத்திற்கு விளக்கப்பட வேண்டும். இன்னும் சொல்லப்போனால், ஒட்டுமொத்தமாகச் சிறைகளிலே நடந்து கொண்டிருப்பதை அறிவதற்காகவும், உண்மையை வெளிக்கொண்டு வருவதற்காகவும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றை உடனடியாக நியமிப்பதுதான் சரியானது என்ற கருத்தைப் புதிய தமிழகத்தின் சார்பாக வலியுறுத்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை, வேலூர் சிறைகளிலே சிறைக்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 மார்ச் 23

காவலர்களுக்கும், சிறைவாசிகளுக்கும் இடையே நடைபெற்றதாகக் கூறப்படுகின்ற மோதல்கள் உண்மையானதுதானா என்பதைக் கண்டறிய, சட்டப்பேரவை உறுப்பினர்கள் அடங்கிய குழு சென்று ஆய்ந்து அறிவதுதான் சரியாக இருக்கும் என்பதை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பொதுவாகவே இத்தகைய நிலைமைகளை, அதாவது சிறை விதிமுறைகளுக்கு மாறாகச் சிறைகளிலே அதிகாரிகள் நடந்து கொள்கின்ற ஒரு முறையினைப் பல நேரங்களிலே அரசியல் கட்சிகளாகச் சென்றிருக்கின்ற நாங்கள்கூடப் பார்த்திருக்கிறோம். நான் பாட்டாளி மக்கள் கட்சியிலேயிருந்தபொழுதுகூட சிறையிலே தலைவர்களோடு இருந்த நேரத்திலே சில நேரங்களிலே சில சலுகைகளை அதிகாரிகள் காட்டி விடுகிறார்கள். அதுவொரு மனிதாபிமான அடிப்படையிலே செய்யப்படுகின்ற செயல்தானே தவிர, விதிமுறைகளுககு உட்பட்டதல்ல என்பதை அவர்களும் அறிவார்கள். சிறைக்குச் சென்றிருக்கிற அனைவரும் அறிவார்கள். அப்படிச் சில நேரங்களிலே மனிதாபிமான அடிப்படையிலே சில சலுகைகள் விதிமுறைகளை பாதிககாத வகையிலே காட்டப்பட்டிருந்தால் அது மன்னிக்கபபடக்கூடியது ஆனால் அதேநேரத்தில் பத்திரிகைகளிலே வநதிருக்கிற செய்திகளைப்போல பயங்கரமான ஆயுதங்களெல்லாம் இருந்ததாகச் சொல்வது உண்மையிலேயே அது நடைமுறைக்குச் சாத்தியமில்லாத ஒன்று. அப்படி ஆயுதங்கள் வைத்திருந்ததாகச் சொல்லிக்கொள்கின்ற செய்திகளெல்லாம் உண்மையா என்பதைக் கண்டறிவதற்காக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதை ஆய்வதற்குக் குழுவை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வன்முறைகளுக்கான காரண காரியங்களை அறிய வேண்டும். அப்பாவிகளும் பல நேரங்களிலே விசாரணை என்ற பெயரிலே பாதிக்கபபடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் அதிலே அவாகளுக்குத் தீவிரவாத எண்ணம் மேலும் மேலும் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, அப்பாவிகள் பாதிக்கப்படாத அளவுக்கு உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.



1999 மார்ச் 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மத்திய சிறையிலும், பிற மத்திய சிறைகளிலும் சிறைக் கைதிகளுக்கும் சில அலுவலர்களுக்கும் இடையே நடந்த சிறு மோதல்கள் காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. கே. சுப்பராயன், திரு. ஐ. கணேசன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, பேராசிரியர் ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோர் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து, சிறைத் துறைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோரிடத்தில் விவரம் கேட்டதில், கீழ்க்கண்ட தகவல்களை எனக்குத் தந்தார்கள்: அந்தத் தகவல்களை இந்த மாமன்றத்திற்குக் கொடுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள 8 மத்திய சிறைச்சாலைகளில், மொத்தம் 303 முஸ்லிம் தீவிரவாதிகள் சிறைக் கைதிகளாக உள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சில விவரங்களைக் கேட்டார்கள். மொத்த விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லாவிட்டாலும், தீவிரவாதிகளில் என்னென்ன சாரார் இருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இருக்கின்றது. அல்-உம்மா இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 262 பேர், இருக்கிறார்கள். ஜிகாத் கமிட்டி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 6 பேர் இருக்கிறார்கள். தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் 8 பேர் இருக்கிறார்கள். இன்னும் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்தவர்கள் 27 பேர் இருக்கிறார்கள். ஆக மொத்தம் 303 தீவிரவாதிகள் இன்றைக்குச் சிறைகளில் இருக்கின்றார்கள். இவர்கள் சட்டப்படியும் நியாயப்படியும் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள். சிறைக் கைதிகளை, குறிப்பாக தீவிரவாதிகளை அவ்வப்போது சிறை விதிகளின்படி சிறைக் காவலர்கள் சோதனையிடுகிறார்கள். அவர்கள் அடைக்கப்பட்டிருக்கின்ற அறைகளைப் பார்வையிடுகிறார்கள். இது சிறை அதிகாரிகளுக்குரிய தலையாய கடமையாகும். என்றாலும், சில சந்தர்ப்பங்களில் தங்களை சோதனையிடுவதை அல்-உம்மா தீவிரவாதிகள் விரும்பவில்லை. அதிகாரிகளை எதிர்த்து அசிங்கமாகத் திட்டுகிறார்கள்; கொலை மிரட்டல்கள் செய்கிறார்கள்;

தாக்கியிருக்கிறார்கள். இதன்காரணமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயமும், வழக்குப் பதிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன.

19-2-1999 அன்று கோவை மத்தியச் சிறையில் சோதனையிட்டபோது, அல்-உம்மா முஸ்லிம் தீவிரவாத கைதிகள் சிறை அதிகாரிகளை மிரட்டியதற்காகவும், அதிகாரிகள் தங்கள் பணியைச் செய்யவிடாதபடி தடுத்ததற்காகவும், அரசுப் பொருட்களைச் சேதப்படுத்தி நாசப்படுத்தியதற்காகவும், அவர்கள்மீது கோவை பந்தயச் சாலை காவல் நிலையத்தில், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 143, 189 மற்றும் 503 (2)-ன்கீழும், பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தியதற்காக, தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் இழப்புச் சட்டத்தின் பிரிவு 3(1) பிரிவின்கீழும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறைவாசிகள், 3 சி.சி. டி.வி. காமிராக்களையும், 22 பல்பு பிட்டிங்குகளையும், 5 டியூப் லைட் பிட்டிங்குகளையும் தாக்கி, சேதப்படுத்தியிருக்கிறார்கள். இதன்மூலமாக அரசுக்கு ரூ.1,23,000/- இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக 20 தீவிரவாதிகள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

3-3-1999 அன்று 8 தீவிரவாதக் கைதிகளை கோவை சிறையிலிருந்து பிற மத்தியச் சிறைகளுக்கு மாற்ற முற்பட்டபோது, அந்தத் தீவிரவாதிகள் சிறை அதிகாரிகளைத் தாக்கினார்கள். இதன்காரணமாக ஒரு சிறை அலுவலர், இரண்டு உதவி சிறை அலுவலர்கள், மூன்று காவலர்கள் காயமடைந்துள்ளனர் எனினும் அதிகாரிகள் நிலைமையைக் கட்டுப்படுத்தி, அவர்களை மற்ற சிறைகளுக்கு மாற்றிவிட்டனர். 7 தீவிரவாதிகள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அன்று மாலை மீண்டும் சோதனையிட்டபோது, அமானுல்லா என்ற தீவிரவாதி, செந்தில்குமார் என்ற இரண்டாம் நிலைக் காவலரை அலுமினியத் தகட்டைக் கொண்டு அவரது முகத்திலே காயப்படுத்தி, கொல்ல முற்பட்டார் அந்தத் தீவிரவாதிமீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

9-3-1999 அன்று சென்னை மத்திய சிறையில் சோதனை நடந்தபோது, ஆத்திரமடைந்த தீவிரவாதிகள் சிறை அதிகாரிகளுக்கு எதிராகக் கோஷமிட்டார்கள்; சோதனையிடப்படுவதைத் தடுத்தார்கள்; கொலை மிரட்டல் செய்தார்கள். தமிழ்நாடு முழுவதும் குண்டுவைத்து வெடிப்போம் என்று சொன்னார்கள்; சிறை அதிகாரிகளைக் கொல்வோம் என்றார்கள்; அவர்களுடைய வீடுகளையும் சிறைச்சாலைகளையும் தகர்ப்போம் என்று ஆவேசத்தோடு முழங்கினார்கள். 13-3-1999 அன்று சென்னை மத்திய சிறைச்சாலையில் மீண்டும் சோதனையிட்டபோது, இமாம் அலி, சுபேர் மற்றும் அப்பாஸ் என்ற தீவிரவாதிகள், உதவி சிறை அலுவலர் மற்றும் இரண்டு காவலர்களைத் தாக்கினார்கள். ஒரு காவலர் சிகிச்சைக்காகப் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதுதொடர்பாக, சென்னை, சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குற்றங்களுக்காக, சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 572/99-ன்கீழ், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 353 மற்றும் 503(2)-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.





11-3-1999 அன்று திருச்சி மத்திய சிறையில் சோதனையிட்டபோது, ஐந்து முஸ்லிம் தீவிரவாதிகள் சிறை அதிகாரிகளை மிரட்டினார்கள்; தாக்க முற்பட்டார்கள்; அடித்தார்கள். இதற்காக திருச்சி, கே.கே. நகர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

12-4-1999 அன்று மாலை வேலூர் மத்திய சிறைச்சாலையில் சோதனையிட்டபோது, முஸ்லிம் அல்-உம்மா தீவிரவாதிகளைச் சோதனையிடக் கூடாது என்று அவர்கள் தடுத்தார்கள்; தாக்கினார்கள். இதனால் சிறைக் கண்காணிப்பாளர், இணைக் கண்காணிப்பாளர், சிறை அலுவலர் ஆகியோருக்குச் சிறிது காயம் ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்படுத்த, குறைந்தபட்ச பலாத்காரத்தைப் பயன்படுத்தி, நிலைமையை ஒழுங்குக்குக் கொண்டு வந்தார்கள்.

இதுதொடர்பாக, வேலூர் பாகாயம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய சிறையில் பொதுவாக சோதனையிட்டபோது, சாதாரண ஆணிகள் P.V.C. pipe, சிறிய மரக் கட்டைகள், சிறிய இரும்புத் துண்டுகள், துருப்பிடித்த தகரங்கள், நசுக்கப்பட்ட கூரிய அலுமினியத் தட்டுகள், Shaving Blades மற்றும் Screw Drivers, ரூ.3,860 ரொக்கப் பணம் ஆகியவை கிடைக்கப்பெற்றன. எந்த மத்திய சிறையிலும் ஆபத்தான ஆயுதங்களோ, வெடி மருந்துகளோ, போதைப் பொருட்களோ இல்லை என்பதைத் திட்டவட்டமாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா மத்திய சிறைகளிலும் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. எந்த

அசம்பாவிதமான சம்பவங்களும், இந்தச் சோதனைகளுக்குப் பிறகு நடக்கவில்லை. தொடர்ந்து சட்டப்படி சோதனைகள் நடந்துகொண்டேயிருக்கும். தீவிரவாதிகளின் மிரட்டல்களுக்கோ, அச்சுறுத்தல்களுக்கோ அரசாங்கம் ஒருபோதும் பணியாது.

*முற்பகல் 11-45*

சிறைக் கைதிகளை நடத்துவதில் அரசு பேதம் காட்டாமல் எந்தச் சலுகையும் அளிக்காமல், எந்தக் கொடுமையும் இழைக்காமல், சட்டப்படி அவர்களை நடத்துகிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறையில் Cellular Phones, பயங்கர ஆயுதங்கள் போன்றவையெல்லாம் கைப்பற்றப்பட்டதாகவும், சிறைச்சாலை நல்ல சுற்றுலாத்தலமாக மாறிவிட்டது என்றும் நண்பர் கணேசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இவையெல்லாம் அடிப்படையற்ற, உண்மைக்குப் புறம்பான தகவல்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறையில் Cellular Phones, பயங்கர ஆயுதங்கள் எதுவும் சோதனையின்போது கிடைக்கவில்லை என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு, முஸ்லிம் தீவிரவாதிகளுக்குச் சாதகமாக நடந்து கொள்கிறது என்று ஒரு சாராரும, அவர்களைக் கொடுமைப்படுத்துகிறது என்று ஒரு சாராரும் அரசு மீது குற்றம் சாட்டுவது ஆதாரமற்றது; ஏற்றுக்கொள்ள முடியாதது; ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. தீவிரவாதிகளுக்கு நாங்கள் சலுகை காட்ட விரும்பவும் இல்லை; அவர்களைக் கொடுமைப்படுத்த விரும்பவும் இல்லை. மனித உரிமையை மதித்து, சிறையில் சட்டப்படி அவர்களை நாங்கள் நடத்தி வருகிறோம். சிறையில் எந்தவிதமான பதட்ட நிலையும் இல்லை. அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, விழிப்புணர்வோடு கட்டிக் காப்பாற்றப்படுகிறது. இதற்காக ஒரு தனிக் குழுவை அமைத்து சிறையைப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை என்பதை இந்தநேரத்திலே நான் அடக்கத்தோடு தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தனிப்பட்ட கருத்தை இங்கே நான் குறிப்பிடவில்லை. பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் நான் குறிப்பெடுத்து இந்த அவையிலே தெரிவித்தேனேயொழிய, நான் நேரிலே சென்று பார்த்தேன், கொடுத்தேன் என்று அவையிலே சொல்லவில்லை.



D V2.11, ... 200.662



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் குறிப்பிட்டதாகச் சொன்னேன். பத்திரிகையில் வந்த செய்திதான் தவறு, ஆதாரமற்றது; உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் ஆய்வு செய்து, பரிசீலித்து, அதன் அடிப்படையில் ஆதாரத்தோடு உங்களுக்குச் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு சிக்கலான, நெருக்கடி நிறைந்த ஒரு பிரச்சினை என்பதால், நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். பிரச்சினைக்கே காரணம் நீங்கள்தான். இது ஒரு குறுகிய பிரச்சினை. சிறையில் காவலர்களுக்கும், அங்கே இருக்கிற கைதிகளுக்கும் இடையே உள்ள விஷயம். நீங்கள் பெரிய தத்துவம், வேதாந்தம் இவற்றையெல்லாம் சொல்லி, இங்கே பிரச்சினையைத் திசை திருப்பி விட்டீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தத்துவம், வேதாந்தம் இங்கே வேண்டாம் என்பதால்தான் ஓரே ஒரு விஷயத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தீவிரவாதிகள் தொடர்ந்து எதிர் நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகள்தான் என்ன என்பதை அறிந்து, அதற்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ளலாம் அல்லவா? எனவே, அவர்கள் தீவிரவாதத்தை மேற்கொள்வதற்குரிய, சமூகரீதியான காரணங்கள் என்னவென்று கேட்டறிந்து, ஆராய்ந்து, அவற்றிற்கு அரசியல் ரீதியாகத் தீர்வு காண முடியுமானால் அந்த முயற்சியை மாநில அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும், அதை அரசு செய்யுமா என்றும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் குண்டு வைத்து, அப்பாவி மக்களை எல்லாம் கொலை செய்து, பாதகச் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டு, இரயிலில் குண்டு வைத்து அதைத் தகர்க்கின்ற வேலைகளில் ஈடுபடுகின்ற இவர்களுக்கு எல்லாம் அரசியல் ரீதியான தீர்வு சொல்வோமேயானால், இதற்கு எந்தவிதமான முடிவுமே வராது. அவர்கள் செய்வது சட்டப்படிக் குற்றம். சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த



221091.

[திரு. ஆர். சொக்கர்] [1999 மார்ச் 23

அளவுக்குத்தான் நிறுத்திக் கொள்ள வேண்டுமேயொழிய, கூட்டமாகச் சேர்ந்து கொலை செய்தால் அதற்கு அரசியல் ரீதியான தீர்வு; தனியாகக் கொலை செய்தால் தண்டனை என்ற போக்கு கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படக்கூடாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, A damaging point. மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் சொல்லிய கருத்தில் நான் தலையிடவில்லை. நான் சொன்ன கருத்திற்கு வேறு ஒரு நோக்கம் கற்பிக்கின்ற முறையில் பிரச்சினையைத் திசை தவற விடுவது நல்லதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதித்த பிரச்சினையை நீங்கள் எல்லோரும் திசை திருப்பிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் அனுமதித்த பிரச்சினை குறுகிய வட்டத்திற்குள் உள்ள பிரச்சினை. சிறைத் துறையிலே அரசாங்கத்தின் கண்காணிப்பு போதவில்லை, பல தவறுகள் அங்கே நடக்கின்றன என்பதே குற்றச்சாட்டு. அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அந்தப் பிரச்சினையிலே நீங்கள் மதங்களைப் பற்றிப் பேசி, பிரச்சினை பெரிதாகிவிட்டது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட கிழக்கு எல்லைப்புற மாநிலங்களில், உலகத்தின் பல்வேறு பிரச்சினைகளில், தீவிரவாதிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசி தீர்வு காண்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பல விஷயங்களில் தீர்வு காணப்பட்டிருக்கின்றன. எனவே, குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்க வேண்டும் என்பதோ, பாதுகாக்க வேண்டும் என்பதோ என்னுடைய நோக்கமல்ல. அவர்களால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற துயரங்களைத் தீர்க்க அரசியல் தீர்வு உதவும் என்பதால் வலியுறுத்துகிறேன். அதை மாநில அரசு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-50*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த அரசியல் தீர்வு என்ன என்பதை இப்போது அவர் விளக்க நேரம் இல்லாவிட்டாலும், அதை அவருடைய கட்சியின் சார்பாக எனக்கு விளக்கி எழுதி அனுப்புவாரேயானால் அதைப்பற்றி யோசிக்கிறேன். அந்தத் தீர்வைக்கூட ஒரு மாநில அரசு என்ற அளவிலே இந்த அரசு எடுக்க முடியாது. அதற்குத் தீர்வு அயோத்தியிலேயிருந்து ஆரம்பமாக



1999 மார்ச் 23] [கலைஞர் மு. கருணாநிதி]

வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திசை திருப்பிப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கவில்லை. இதை நீங்கள் திசை திருப்பிப் பேசுகிறீர்கள், நான் அனுமதிக்க முடியாது.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இந்த மார்க்கத்திற்கே போகக்கூடாது என்று சொல்கிறேன். யாராக இருந்தாலும் சரி. நான் கூடாது என்று சொல்கிறேன், நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? முதலிலே நீங்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்தவர் இல்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **எல்லாம் தீவிரவாதம்தான், உட்காருங்கள். (குறுக்கீடு) இந்துக்களுக்கும் அப்படித்தான். உங்கள் மதத்திற்கு மாத்திரமல்ல. திரு. அப்துல் நாசர் சொன்னது அவைக்குறிப்பிலே ஏறாது. இந்தப் பிரச்சினை முடிந்தது.

## 7. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்-தொடர்கிறது. நேற்றையதினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் தொடர்ந்து 2, 3 நிமிடங்களிலே தனது உரையை முடிக்க வேண்டும்.

***திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று 2, 3 நிமிடங்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தீர்கள். அதுபோன்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

இன்றும் 2, 3 நிமிடங்கள் என்று சொல்கிறீர்கள். ஒருசில நிமிடங்கள் அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒரு தொழில் புரட்சியை ஏற்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே இந்த நாட்டிலே வாழக்கூடிய ஏழையெளிய, நடுத்தர மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு, அவர்களுடைய அன்றாடத் தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறார்கள்.

அதிலே சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகள், உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் என்று சொல்வார்கள். அதையொட்டி மக்களுடைய அடிப்படைத் தேவைகள் என்று பார்க்கிறபோது, குடிநீர், சாலை வசதிகள், தெருவிளக்கு, சுகாதாரம் போன்றவை அடிப்படைத் தேவைகளாகும். அவற்றை நிறைவேற்றுவதற்கு 1998-99 ஆம் ஆண்டு ஏறத்தாழ ரூ.762 கோடியை ஒதுக்கிய இந்த அரசு, 1999-2000-த்தில் அதை ரூ.845 கோடியாக உயர்த்தி, அதையொட்டி பல்வேறு திட்டங்களின் அடிப்படையிலே நிதிகளை ஒதுக்கி, நிதி வருவாயிலே 19 விழுக்காடு இந்த அடிப்படைத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதால், இதுவொரு வரவேற்கக்கூடிய நிதிநிலை அறிக்கையாகும்.

ஆரம்பத்திலே நான் சொல்லியபோது, 1993-94 ஆம் ஆண்டுக்குப் பிறகு வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுடைய சதவிகிதம் குறைந்தது பற்றி நான் குறிப்பிட்டேன். இந்த அளவுக்கு, ஏறத்தாழ 8 சதவிகிதம் அளவிற்குக் குறைத்திருப்பதற்கு திட்டமிட்ட செயலும், அதைச் செயலாற்றுகின்ற திறனும்தான் காரணமாகும். அந்த அடிப்படையிலேதான் ஆட்சி, நிர்வாகம் தன்னுடைய பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே ஏறத்தாழ நிதி வருவாயிலே 19 விழுக்காடு அடிப்படைத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே கிராமப் பகுதிகளுக்கு, பேரூராட்சிப் பகுதிகளுக்கு, நகராட்சிப் பகுதிகளுக்கு, மாநகராட்சிப் பகுதிகளுக்கு, பல நூறு கோடி ரூபாயை ஒதுக்கி குடிநீர்ப்



பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். இங்கே அண்ணன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். நான் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிற்கு கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களைப் பார்க்கும்போது குடிநீர்ப் பிரச்சினைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற தொகையானது எந்த அளவிற்கு கிராமப்புறங்களிலே நன்மை பயத்திருக்கிறது என்பதை நான் கண்கூடாகப் பார்த்தேன்.

முற்பகல் 11-55

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஒரு பெரிய கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது; அதாவது ஓர் ஊராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்த ஊராட்சியிலே இருப்பது 11 கிராமங்கள்தான். அந்த 11 கிராமங்களிலும் மேல்நிலைத் தொட்டிகள் எழுந்து நிற்பதைப் பார்க்கின்ற போது, கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களின் குடிநீர்ப பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு எந்த அளவுக்கு முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கு அதுவே ஓர் உதாரணம். இன்னும்கூட சொல்லப்போனால், எங்கள் மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஒட்டன்சத்திரம் தொகுதி, வேடசந்தூர் தொகுதி, திண்டுக்கல் தொகுதி போன்ற தொகுதிகளுக்கு குடிநீர் நிரந்தரமாகக் கிடைப்பதற்காக காவிரி நதியிலிருந்து நீரைக் கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்து, அதற்கான உத்தரவைப் பிறப்பித்து அதுவும் ஆய்வு செய்யப்பட்டு, இப்போது செயல்படக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை நினைக்கின்றபோது பெருமையாக இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே, 'செக்குக்கு மாடு கொடுத்தாலும் கொடுக்கலாம், திண்டுக்கல்லுக்குப் பெண் கொடுக்கக்கூடாது' என்ற பழமொழியைச் சொல்வார்கள். அந்தப் பழமொழியை மாற்றக்கூடிய அளவுக்கு தமிழகத்தில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான ஒரு திட்டத்தைத் தயாரித்து எங்களுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 28, 30 ஆண்டுகளாக மக்கள் போராடிக் கொண்டிருந்த இராமக்கால்

ஓடை அணைத் திட்டத்தை இப்போது நிறைவேற்றி இருக்கிறார்கள். இதைப்போல திண்டுக்கல் தொகுதிக்கு மட்டுமல்லாது தமிழகத்திலே உள்ள எல்லா இடங்களிலும் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் நினைவாற்றலின் காரணமாக ஒவ்வொரு அணையையும் அவர் வரிசைப்படுத்திச் சொல்கின்றபோது அதைக் கேட்கப் பெருமையாக இருக்கிறது. கழக ஆட்சிக் காலத்தில், இந்த அணைகள் எல்லாம் கட்டப்பட்டன என்று சொல்லத்தக்க அளவுக்கு சிறப்பான முறையில் இருந்தது. அடித்தளத்தில் இருக்கக்கூடிய ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், விவசாய மக்கள், இன்னும் சொல்லப்போனால், தொழிலாளர்கள் எல்லோரும் பயனடையக்கூடிய வகையில் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை அனைவராலும் பாராட்டத்தக்க நிதிநிலை அறிக்கை என்பதைத் தெரிவித்து நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றியினைச் சொல்லி, ஏறத்தாழ ஆண்டு வருமானம் 15,867 கோடி ரூபாயாகவும், செலவு 18,500 கோடி ரூபாயாகவும், கிட்டத்தட்ட 790 கோடி ரூபாய் பற்றாக்குறை அதிகரிக்கும் என்று இருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கைமீது சில விவரங்களை நான் கூறக் கடமைபபட்டிருக்கிறேன். குறிப்பாக, நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், சித்த மருந்துகளுக்கு வரி விலக்கு அளித்திருப்பதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல இந்திய முறை மருத்துவத்திற்கும் வரி விலக்கு அளித்திருக்கலாம். வரி விலக்கு அளிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நல்ல சந்தர்ப்பத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தரிசு நிலங்களை வேளாண்மை நிலங்களாக மாற்ற எடுத்திருக்கிற முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கணினி மூலம் கிட்டத்தட்ட 48,000 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க எடுத்திருக்கிற முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதற்காக, மாவட்ட அளவில் பல்வேறு விளையாட்டுக் களங்களை அமைக்க அரசு முன்வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விடுதலைப் போராட்டத்



தியாகிகள், மொழிப்போர் தியாகிகள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிப்பதற்காக எடுத்திருக்கிற முயற்சிகளை நான் இங்கே பாராட்டாமல் இருக்க முடியாது.

நம்முடைய மாநிலத்தில் ஒரு புதிய திட்டத்தினை இங்கே அறிவித்திருக்கிறார்கள். தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் அதிகமாக விளைகின்றபோது அவற்றைச் சேமிப்பதற்கு குளிர்பதன சேமிப்பு நிலையங்கள், கிடங்குகள் கட்ட வேண்டுமென்ற ஒரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது கிடைக்கிற மின்சாரம் நம் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாத காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கிற நேரத்தில், இந்தச் சூழ்நிலையில் புதிதாகக் குளிர்பதன நிலையங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்படுகின்றபோது, அவற்றுக்கான மின்சாரம் எப்படிக் கிடைக்கும், எப்படிக் கொடுக்க முடியும் என்பது போன்ற விவரங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடவில்லை.

அதுபோல இந்த ஆண்டு 196 மெகாவாட் மின்சாரம்தான் தயாரிக்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2000-க்கும் அதிகமான மெகாவாட் மின்சாரம் தேவைப்படும்போது—நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது— பற்றாக்குறையாக இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த நாட்டில் தொழில் வளங்கள் பின்தங்கி இருக்கிற சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, அதிகமாக மின்சாரம் உற்பத்தி செய்ய அரசு முயல வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

இதிலே ஒரு வேதனையான செய்தி என்னவென்று சொன்னால், கிட்டத்தட்ட 790 கோடி ரூபாய் பற்றாக்குறையில் இருக்கின்ற சூழ்நிலையில் பான் மசாலா, சாராயம், சிகரெட் போன்றவைமீது வரி விதித்து, வாழ்கின்ற ஒரு சூழ்நிலைக்குத் தமிழகம் தள்ளப்பட்டிருப்பதை எண்ணி நான் வருந்துகிறேன். ஏனென்றால், இந்த போதைப் பொருள்கள் அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமென்கிற சூழ்நிலை மாறி அவற்றை நம்பி அரசாங்கம் வாழ்கின்ற சூழ்நிலை வேதனை அளிக்கின்ற சூழ்நிலையாகும்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்பும் மிக முக்கியமான ஒரு செய்தி என்னவென்று சொன்னால், மகாராஷ்டிராவில் வாழ்கின்ற, மும்பை

மாநகரத்திலே வாழ்கின்ற தமிழர்கள் தமிழகத்திலேயிருந்து ஜாதிச் சான்றிதழ்களைப் பெறறுக்கொண்டுபோய் அங்கே கொடுத்தால், அந்த ஜாதிச் சான்றிதழ்கள் ஏற்கப்படுவதில்லையென்கிற குற்றச்சாட்டு இருக்கிறது. ஒட்டுமொத்தமாக தமிழர்கள் இப்படிப்பட்ட ஜாதிச் சான்றிதழ்கள் கொடுத்தும் வேலைகளுக்குச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாய்த் தமிழகப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு முற்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்திலே, மரியாதைக்குரிய பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலே, மரியாதைக்குரிய மறைந்த அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலே, தமிழகத்திலே கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள், அயல்நாட்டு மதுக் கடைகள் இல்லை. அதற்குப் பின்னாலே கடந்த 30 ஆண்டுகளாக தமிழகத்தினுடைய இளைஞர் சமுதாயத்தைச் சீரழிக்கினற விதத்தில், இளைஞர் சமுதாயத்திற்குத் தலைகுனிவு ஏற்படுகின்ற விதத்தில், நாட்டிலே வன்முறைகள் பெருகுகின்ற விதத்திலே, மதுக் கடைகளும், சாராயக் கடைகளும் உருவெடுத்து, இளைய சமுதாயத்தை அழித்துவிடும் கொடுமையான சூழ்நிலையை மாற்றிட இந்தக் கழக அரசு மீண்டும் முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளைஞாகளுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு எந்தவிதமான முன்னுரிமைகளும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் Ration Card-கள் பற்றிய பிரச்சினை வருகிறபோது, இன்னும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு Ration Card-கள் வழங்கப்பட வேண்டிய சூழ்நிலையிருப்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, 1996 முதல் 1999 வரைக்கும் அப்பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறதே தவிர, ஊதிய உயர்வு வழங்கப்படாமல், அப்பதவி உயர்வுக்கு பணிமாற்றம் என்கிற ஒரு பெயரைக் கொடுத்து அவர்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களுக்குத் தர வேண்டிய சம்பள பாக்கியை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கின்ற தொழிலாளர்களுக்கு தூண்டில் வளைவு கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையை 1984 முதலே இந்தச் சட்டமன்றத்திலே நான் எழுப்பி வருகிறேன். அரசுத் தரப்பிலே பல்வேறுவிதமான ஆராய்ச்சிகள், study-கள் நடத்துகிறோம் என்று சொல்லி, கிட்டத்தட்ட ஆண்டுகள் 15 ஆகிவிட்டதே தவிர, எந்தவிதமான பயனும் இல்லை. எனவே குளச்சல் பகுதி, வாணியக்குடி பகுதியிலே ஒரு தூண்டில் வளைவு அமைத்துத் தரவேண்டும். அதுபோல கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே இனையம்புத்தன் துறை, இராமன் துறை பகுதிகளிலே ஒரு தூண்டில் வளைவு அமைக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது கழக அரசு இதற்கு முன்பு கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தது. அதன் அடிப்படையில் இன்றைக்குத் தமிழகத்தில் வாழ்கின்ற பல்லாயிரக்கணக்கான மீனவ நண்பர்கள் மீன் பிடிக்கச் செல்கிறபோது அநியாயமாக இலங்கை அரசினால் சுட்டுப் படுகொலை செய்யப்படுகிற ஒரு கொடுமை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனவே, மீண்டும் அந்தக் கச்சத் தீவை மீட்பதற்கான முயற்சிகளில் தமிழக அரசு முனைப்புடன் செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் உங்கள் முன்னாலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் professional courses நடத்தக்கூடிய எந்தவிதமான கல்லூரிகளும் அங்கு இல்லை. கடந்த நிதியாண்டிலே Co-operative sector மூலம் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். ஆனால் இந்த ஆண்டு அதுகூட இல்லாமல், மருத்துவக் கல்லூரியோ,

பொறியியல் கல்லூரியோ, விவசாயக் கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ, எந்தவிதமான professional course கல்லூரியும் இல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்தை மாற்றாந்தாய் மனப்போக்கோடு நடத்துவதாக நான் குறைபட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இரப்பர் தொழிற்சாலை. 40 கோடி ரூபாய்க்கு தொழிற்சாலைப் பூங்கா அமைப்பதாகச் சொன்னீர்கள். எந்தவிதமான பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

அதுபோல தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் தற்போது போராட்டங்கள் மிக அதிகமாக நடக்கின்றன. மருத்துவர்கள் போராட்டம், பொறியாளர்கள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம். வணிகர்கள் போராட்டம் என்று இப்படி எல்லாத் தரப்பு மக்களும் தமிழகத்திலே போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற முகத்தான்—பொதுவாக இந்தப் போராட்டங்களை நடத்துகிறபோது, போராட்டத்திற்கான காரணத்தைக் கேட்கிறபோது எங்களுடைய கோரிக்கைகளை முதலமைச்சரோ, சம்பந்தப்பட்ட அமைச்சர் பெருமக்களோ நேரடியாகத் தெரிந்துகொண்டு அவற்றை நிறைவு செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறார்கள். மாதத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தினமோ, இரண்டு தினங்களோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப் போராடுகிறவர்கள் அத்தனை பேரையும் சந்திக்க இயலாமல் இருந்தாலும், ஒரு Screening Committee போட்டு முக்கியமாக போராட்டத்தினுடைய தன்மையைத் தெரிந்துகொண்டு—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் பொறியாளர்கள் போராடுகிறார்கள், மருத்துவர்கள் போராடுகிறார்கள்—அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதைத் தெரிந்து, அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்காக அவர்களிடம் பேச்சுவார்த்தையை நேரடியாக முதலமைச்சர் அவர்கள் நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 12-05*

அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தொகுதிக்கு 2 புதிய பேருந்து வழித்தடங்கள் அளிக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். அதை முடிந்த அளவு இந்த ஆண்டும் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்



கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). நான் இப்போதுதானே பேச ஆரம்பித்து இருக்கிறேன்; 5 நிமிடங்கள்தான் ஆகியிருக்கின்றன. கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

தமிழகம் முழுவதும் பள்ளிகளில் பணியாற்றுகின்ற பகுதி நேர நூலகர்களை முழு நேர நூலகர்களாக மாற்றி, பணியமர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல நிதிநிலை அறிக்கையில் தஞ்சை கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் பெற்றவர்கள் 81,553 பேர் இருக்கிறார்கள். இதில் 21,898 பேர் பெரிய விவசாயிகள்; 60,000 பேர் சிறு விவசாயிகள் என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இவர்கள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய வேண்டுகோள், நீங்கள் ஜப்தி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, வாங்கிய பணத்திற்கு வட்டியைத் தள்ளுபடி செய்வீர்கள் என்று சொன்னால், உடனடியாக அவர்கள் பணத்தைக் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். தஞ்சை மாவட்டத்திற்கு என்று மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் கடன் பெற்று இருக்கிற விவசாயிகளுக்கு வட்டியை ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்வீர்கள் என்று சொன்னால், குறிப்பிட்ட காலத்திற்கு இடையிலே அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் தாங்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்திவிடுவார்கள். எனவே, அரசு அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோள் இருக்கிறது. அதற்கு ஒரு குழு போடப்பட்டு இருக்கிறது. நாட்கள் அதிகமாகிவிட்டபோதிலும், குழு தன்னுடைய பரிந்துரைகளைச் செய்யாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அதில் தனிக் கவனம் செலுத்தி, அதிக அதிகாரம் வழங்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், அங்கே பணியாற்றுகிற President—ஆக இருந்தாலும், உறுப்பினர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு சம்பளம் வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பஞ்சாயத்துக்களை வருமான அடிப்படையிலே பிரிப்பீர்களேயானால், பஞ்சாயத்துக்கள் அதிகமாக இருப்பது குறைந்து, மக்களுக்குப் பயனுள்ளதாக, வருமானம் உடைய பஞ்சாயத்துக்களாக மாறும்; அந்தப் பகுதிகளில் வளர்ச்சிகள் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கும் என்பதையும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதிக்குட்பட்ட எஸ்.டி. மங்காடு என்கிற பாலம், சென்னித்தோட்டம் ஆகிய பாலங்களின் வேலைகள் தமிழ்நாடு அரசின் கட்டுமானக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒரு வருடம் ஆகிவிட்டது இப்போது யாரும் அந்தப் பகுதியில் நடந்து செல்ல முடியாத ஒரு துயரமான சூழ்நிலை இருக்கிறது. எனவே, பால வேலைகளை அந்தப் பகுதியில் உடனே ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு, அங்கு கிட்டத்தட்ட 100 அடி கடந்து வருவதற்கு, இப்போது மக்கள் 12 கி.மீ. சுற்றி வந்து கொண்டிருக்கிற ஒரு கொடுமையான சூழ்நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, எஸ்.டி. மங்காடு பாலத்தையும், சென்னித்தோட்டம் பாலத்தையும் உடனடியாக முடித்துத்தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது). முடித்து விடுகிறேன்; ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். எஸ்.டி. மங்காடு பால வேலை முடியும் வரைக்கும் நடைபாதை அமைத்துத்தர வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் உங்கள் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்

அதேபோல ஆறுதேசம் பகுதியில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தை முழு நேர மருத்துவமனையாக ஆக்க வேண்டும் என்பது வெகுநாளைய கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது அதையும் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 1995 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட உதவியாளர்கள் 98 பேருக்கு பயிற்சி வழங்கி அவர்களைக் காவலர்களாக நியமிக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் உங்கள் முன்னால் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக நேற்றையதினம் தமிழக சட்டமன்றத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை மாத்திரம் (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு,



25-3-1989 அன்று இதே அவையிலே புரட்சித் தலைவி என்று சொல்லிக்கொண்டிருக்கிற, அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் Budget-ஐ வாசித்தபோது அவர்களைத் தாக்கினார். அது 25-3-1989 அன்று. 10 ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க அவர்களுடைய தொண்டர் நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இங்கே தாக்கி தமிழக சட்டமன்றத்திற்கே களங்கம் ஏற்படுகின்ற விதத்திலே ஓர் அவமானச் சின்னமாக ஒரு நிகழ்ச்சியை நடத்தி இருக்கின்றார். இப்படிப்பட்ட அவமானச் சின்னங்கள் இந்த நாட்டிலே இனி ஈடேறமுடியாமல் இந்த நாட்டு மக்கள் விழிப்புடன் இருப்பதற்காக நீங்கள் எடுத்திருக்கின்ற முயற்சிகள் அத்தனையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் ** ஜெயலலிதாவினுடைய பித்தலாட்டங்கள் இன்று மக்களுக்குத் தெரிகின்ற முகத்தானும், கீழ்த்தரமாக நடந்து கொண்டிருக்கிற அரசியல் நடவடிக்கைகளை நாட்டிற்கு எடுத்துக்காட்டுகின்ற முகத்தானும், அவர்கள் இந்த அவையின் கூட்டத் தொடர் வரைக்கும் வரக்கூடாது என்ற ஒரு நியாயமான தீர்ப்புரை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

*பிற்பகல் 12-10*

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 1999-2000 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது எனது கருத்துக்களை இம்மாமன்றத்தில் கூற விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வரின் 12-வது நிதிநிலை அறிக்கை, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் குறிஞ்சி மலரைப் போன்றது; 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்பெறும் குடந்தை மகாமகத் திருவிழாவைப் போன்றது. இன்றையதினம் படித்தவர்கள், பாமரர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், மாணவர்கள், சான்றோர்கள் முதலான பலராலும் பாராட்டப்படுகிறது. இந்தியத் திருநாட்டின் பொருளாதாரம் மத்திய அரசின் கேலிக்குரிய நடவடிக்கைகளால் தடுமாறிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

குறைவான வரி விதிப்பு, அதிக வரி வருவாய் என்ற பன்னாட்டுப் பொருளாதாரச் சந்தையின் சித்தாந்தத்தை தனது நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தி, வளமான வளர் Budget என்று பொருளாதார வல்லுநர்களால் இன்றையதினம் பாராட்டப்படுகிறது.

இந்நிதிநிலை அறிக்கையில் புதுமையில்லை, புரட்சியில்லை, வெறும் அலங்கார வார்த்தைகள் என்று குழம்பித் திரியும் சிலருக்கு, சிலவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வியின் பரிணாமம் என்பது புதியன புகுத்தி, அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குவதேயாகும் என்ற அறிவியல் அறிஞர் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் கருத்துக்கு உயிர் கொடுப்பதுபோல் நமது முதல்வர் அவர்களும் இந்நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் 1200 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 21 ஆம் நூற்றாண்டின் அதிசயப் படைப்பாகக் கருதப்படும் கணினியை இவ்வாண்டு முதலே விருப்பப் பாடமாகக் கற்றுத்தர அறிவித்திருப்பது புதுமையில்லையா என்று நான் கேட்க விரும்புகிறேன். இதன் மூலம் ஏறத்தாழ 48 ஆயிரம் மாணவர்கள் பயனடைய இருக்கிறார்கள். இதனால் 1½ இலட்சம் பேருக்குமேல் வேலைவாய்ப்பு கிட்ட வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. வருங்கால இளைய சமுதாயம் நமது தமிழக முதல்வரை தமது இதயத்தில் நினைந்து, நெஞ்சார வாழ்த்துகின்ற நிலைதான் இன்றைய நிதர்சன நிலை.

கடந்த இரண்டு ஆண்டுகாலத்தில் மட்டும் ஏறத்தாழ 30 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பு கடந்த 20 ஆண்டுகாலத்தில்கூட, இவ்வளவு ஆசிரியர் பணியிடங்கள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்படவில்லை. எனது தொகுதியில் மட்டும் அனைத்து கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அனைத்து ஊராட்சிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள், அனைத்துப் பள்ளிகளுக்கும் concrete கட்டடங்கள், அனைத்து கிராமங்களிலும் நியாயவிலைக் கடைகள், இப்படி அனைத்து ஊராட்சிகளிலும் போதுமான அளவுக்கு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று இப்போது முடிவடையும் நிலையில் இருக்கின்றன.

ஓய்வறியா உழைப்பாளி என மாண்புமிகு முதல்வர் அவர்களால் பாராட்டப்பட்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஓர் இலட்சிய வெறியோடு, மாண்புமிகு தமிழக முதல்வரின் உயிர்க்



கொள்கையாகிய அனைவருக்கும் இருக்க இடம், குடிக்கத் தண்ணீர், படிக்கப் பள்ளி, பார்க்க வெளிச்சம், நடக்கப் பாதை என இப்படிப்பட்ட பணிகளுக்காக என் பணி ஓயாது எனச் சூளுரைத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவரது உழைப்பினால் இன்றையதினம் ஒரு தன்னிறைவு பெற்ற தொகுதியாக எனது தொகுதி மிளிர்கிறது என்பதை இந்தநேரத்தில் நன்றியுணர்வோடு நான் நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்தகால ஊழல் பெருச்சாளிகளின் முறைகேடான நிர்வாகத்தினால் நலிவுற்ற சர்க்கரை ஆலைகளெல்லாம் மூடப்பட்ட நிலையில், 4-வது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு பல்லாயிரம் தொழிலாளர்களின் நலன் கருதி, ஊதிய உயர்வோடு, மீண்டும் இச்சர்க்கரை ஆலைகள் இயங்க, டன் ஒன்றுக்கு சராசரியாக ரூபாய் 800-க்கு மேல் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறார்கள். எதிர்காலத்தில் டன் ஒன்றுக்கு ரூபாய் 1000 வழங்குவோம் என உறுதி அளித்திருக்கிறார்கள். இதையெல்லாம் மறந்து சில கருத்துக் கூறுபவர்கள் இந்த Budget-ல் ஏதுமில்லை என்று கூறுவது உள்ளபடியே எங்களுக்கெல்லாம் வியப்பாக இருக்கிறது.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை கிடைப்பதற்கு சட்டபூர்வமான அணுகுமுறை என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் உபரியாகக் கிடைக்கும் காலங்களில் சேமித்து, நியாய விலையில் விற்க, குளிர்பதன சேமிப்புக் கிடங்குகள் ரூபாய் 40.52 கோடியில் கட்ட அறிவித்துள்ள திட்டம் மிகப் பெரிய தொலைநோக்குத் திட்டமாகும்.

சிறு, குறு விவசாயிகள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது எனக் கூறியிருப்பது விவசாயிகளின் காதுகளில் தேன் வந்து பாய்கின்ற ஒரு நல்ல செய்தியாகும். நீர்வளத்தை நிலைப்படுத்த உலக வங்கி உதவியுடன் சென்ற ஆண்டு ரூ. 344 கோடி செலவு செய்தது போக, இவ்வாண்டிலும் ரூ. 219 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதை மிகப் பெரிய காரியமாக நாங்கள் கருதுகிறோம்.

பிற்பகல் 12-15

சேர, சோழ, பாண்டிய மூவேந்தர்களுள், சோழர் கால ஆட்சிக்குப் பிறகு, ஆற்றுப்படுகைகள், வாய்க்கால்கள், வடிகால்கள்கள், குளங்கள் தூர்

வாரும் பணிகள் நடைபெறும் என அறிவித்து இருப்பது நமது தமிழக முதல்வரின் சிறப்பு அம்சமாகும். ரூபாய் 665 கோடி மதிப்பீட்டில் 53 நீர்ப்பாசனத் திட்டங்களை அறிவித்திருப்பதும் யாருக்காகச் சொல்லப்பட்டவை? விவசாயிகளுக்காக அல்லவா! விவசாயிகளின் பொற்காலம் நமது முதல்வரின் ஆட்சிக் காலம்தான் என்றால் அது உண்மையாகும்.

கரும்பு விவசாயிகளைப் பொறுத்தமட்டில், 1996-97-ல் கரும்பு விவசாயிகள் பயிரிட்ட கரும்பை வெட்ட முடியாத ஒரு நிலை, வெட்டப்பட்ட கரும்புக்குப் பணம் கொடுக்க முடியாத ஒரு நிலை, இப்படிப்பட்ட நிலையிலிருந்து அன்றையதினம் கரும்பு விவசாயிகளைக் காப்பாற்றியவர் நம்முடைய ஒப்பற்றத் தலைவர், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமல்ல. 1996-97 ஆம் ஆண்டில் காவிரி நீர்ப்பாசன நிலைமையிலே மிகப் பெரிய சங்கடம் நேரிட்ட காலத்தில் தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும், காவிரி டெல்டா பகுதிகளுக்கு ஏறத்தாழ 5 ஆயிரம் பம்பு செட்டுகளை வழங்கியும், முன்னுரிமை அடிப்படையில் அதற்கான நிதி உதவியை வழங்கியவர் நமது ஒப்பற்றத் தலைவர் கலைஞர் என்பதை இந்தநேரத்தில் நான் நன்றி உணர்வோடு நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பெற்றோர்களும் மாணவர்களும் இப்போது புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள். வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்ற இச்சான்றிதழ்களுக்காக அலைந்த காலம் இப்போது மாறியிருக்கிறது. கருணை உள்ளம் கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தின் மூலமாக இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல இன்றையதினம் 'கண்மூடிப் பழக்கம் எல்லாம் மண்மூடிப் போக,' 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சமுதாயப் புரவலராய் விளங்கிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பெயரில் மேலும் 50 சமத்துவபுரங்கள் கண்டிட ரூ. 17.5 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது மிகப்பெரிய புரட்சியாகும்.

500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள 340 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்துதரவிருப்பது—கிராம மக்கள் அனைவரும் முன்னேற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.



அதேபோல மக்கள் நலப் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கின்ற ஊதிய உயர்வு அனைவராலும் வரவேற்கப்படுகிறது. அவர்களை எல்லாம்கூட அரசு ஊழியர்களாக எதிர்காலத்தில் மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஏழை எளிய மக்களுக்கு இன்றையதினம்

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா"

என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப உயிரோட்டம் கொடுப்பதைப்போல நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் பேர்களுக்கு Contact Lens (மணியடிக்கப்பெற்றது) பொருத்துகின்ற திட்டத்தை வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

அதேபோல

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்'

என்ற வரிகளுக்கு ஏற்ப மத்திய அரசு Ration அரிசி விலையை உயர்த்தியதற்குப் பிறகும்கூட, நமது கழக அரசு ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் இழப்பு இருப்பினும், இழப்பை மக்கள் மீது சுமத்தாமல் பாமர மக்களின் பாதுகாவலரான நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்கள் அரிசி விலையை ஏற்றாமல் Ration திட்டத்தை தற்போது அமல்படுத்தி வருவதை மனதாரப் பாராட்டுகிறோம்.

சென்ற ஆண்டு, திட்டத்தை குறைக்காமலேயே பற்றாக்குறையை வெகுவாகக் குறைத்திருப்பதன் மூலம் நிதி நிர்வாகம் சிறப்பாகவும், ஆழ்ந்த சிந்தனையுடனும் நடைபெறுவதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவுபடுத்துகிறது.

அதைப்போல பொதுவாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என்று அனைவரும் பாராட்டுகின்ற வகையில் இந்த வரவு-செலவுத் திட்டம் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் இன்னொரு அறிவிப்பாகச் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், வருவாய்த் துறையின் மூலமாக கிராமக் கணக்குகள் பதிவு செய்யப்படும், Land records கணினி மூலம் பதிவு செய்யப்படும் என்று சொல்லியிருப்பதாகும். ஏற்கெனவே முந்தைய ஆட்சிக்காலத்தில் U.D.R. Survey என்கின்ற ஒரு Survey மூலம் ஏராளமான குளறுபடிகளை பல கிராமங்களில் செய்திருக்கிறார்கள். அந்த U.D.R. Survey முறையானதாக இல்லை. எனவே முறைப்படுத்திய பிறகு அந்தக் கிராமக் கணக்குகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொண்டு, நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

பிற்பகல் 12-20

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இங்கே தாக்கல் செய்யப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையினை முழுமையாக நான் வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையிலே இருக்கக்கூடிய தங்கம், வெள்ளி மற்றும் நகை வியாபாரிகள் சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அளித்த வேண்டுகோளுக்கு ஏற்ப, அவர்களுக்கு இரண்டு சதவிகிதத்திலேயிருந்து, 0.5 சதவிகிதம் என்ற வகையிலே, ½ சதவிகிதம் என்ற வகையிலே வரியைக் குறைத்திருப்பதற்காக, அவர்கள் சார்பாக நான் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல நீண்ட நாட்களாக உள்ள அவர்களுடைய கோரிக்கை—கிட்டத்தட்ட முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட நகைத் தொழிலாளர்கள் கோவையிலே பணியாற்றுகிறார்கள்—அவர்களுக்கென ஒரு பயிற்சிப் பள்ளி வேண்டுமென்று சொல்லி, நம்முடைய அரசிடத்திலே அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மும்பை நகரத்திலே அப்படியொரு பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அதன் மூலமாக அவர்கள் திறமையுள்ளவர்களாக மாறி, மிகவும் கவர்ச்சிகரமான நகைகளைச் செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டால், அவர்களுடைய வருமானம் உயரும் என்ற வகையிலே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அருள்கூர்ந்து அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கை தயார் செய்வது என்பது—ஒரு காலத்தில் Monetary mobilisation என்று குறிப்பிடுவார்கள்—வரவு-செலவு, இவற்றின் அடிப்படையில் மட்டும் அமைந்திருக்கும் என்ற நிலை மாறி, முழுமையாக Revenue Receipts என்ற வகையில், அரசுக்கு வருமானம் என்கின்ற அடிப்படையில், நிதிநிலை அறிக்கைகள் பல நாடுகளிலே இப்போது தயார் செய்யப்படுகின்றன. அந்த வகையிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைச் செய்திருந்தாலும்கூட, நிதியாதாரங்கள் என்பது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், மிகவும் சிரமப்பட்டுப் பெற வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல, மத்திய



அரசு நிதிக் குழுவினுடைய சிபாரிசின் அடிப்படையில் நாடாளுமன்றத்திலே 1997-ல் அறிக்கை தந்து, 29 சதவிகிதம் பணம் தரப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தாலும்கூட, இதுவரைக்கும் அந்த 29 சதவிகிதம் வழங்கப்படாதது, ஒரு மத்திய சர்க்காரினுடைய நாணயத்தைப்பற்றி உள்ளபடியே நாம் சிந்திக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. எனவே, இதை உடனடியாக மத்திய அரசு வழங்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே எதிர்பார்க்கின்றேன்.

அதேபோல வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய சர்க்காரால் 3,000 கோடி ரூபாய்க்கு மேல் Additional surcharge போடப்பட்டிருக்கிறது. அதிலேயும் உரிய பங்கு தரப்பட வேண்டுமென்று இந்தநேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில்—நிதியாதாரம் ஒருபக்கம் இருந்தாலும்கூட, எப்படி Finance Management என்று சொல்கிறார்களோ அதைப்போல—நிதிநிலையை. அரசினுடைய நிதியாதாரத்தை எந்த அளவிற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம். அதுமட்டுமல்லாமல், சமுதாய நோக்கையும் அவர்கள் இதிலே பார்த்திருக்கிறார்கள். சமுதாய நோக்கைப் பார்த்த காரணத்தினாலேதான் பல்வேறு திட்டங்கள் இங்கே போடப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்கள் அத்தனைக்கும்—அதை நான் வலியுறுத்தி, வரிசைப்படுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள்—மற்ற மாநிலங்களிலேயும், நம்முடைய மாநிலத்திலேயும் எந்த அளவிற்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு நாம் பணம் செலவு செய்கிறோம் என்று பார்த்தால் நிலைமை தெரியும். உதாரணத்திற்கு, தமிழ்நாட்டில் 18,048 கோடி ரூபாய் வருமானம் என்று சொன்னால், 10,025 கோடி ரூபாயை நாம் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவு செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் அதேநேரத்தில் மேற்கு வங்காளத்தைப் பார்த்தால், 7,267 கோடி ரூபாயை வளர்ச்சித் திட்டங்களுக்கு அவர்கள் செலவு செய்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி ஆண்ட இராஜஸ்தான் மாநிலத்தில் 6,962 கோடி ரூபாய் வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று செலவு செய்யப்படுகிறது. காங்கிரஸ் ஆளக்கூடிய ஒரிசா மாநிலத்தைப் பார்த்தால், 3,783 கோடி ரூபாய்தான் வளர்ச்சித் திட்டங்களுக்காக செலவு செய்யப்படுகிறது.

பிற்பகல் 12-25

அதேபோல மத்தியப் பிரதேசம் என்று பார்த்தால் 7,827 கோடி ரூபாய்தான் வளர்ச்சித் திட்டங்களுக்கென்று செலவு செய்யப்படுகிறது.

நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், ஏற்கெனவே நம்முடைய அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பல்வேறு வகையான செலவு, அதாவது Non-Development என்று குறிப்பிடுவார்களே, வளர்ச்சிக்கு அப்பாற்பட்ட நிர்வாகச் செலவு என்ற வகையிலே ஓர் 50 சதவிகிதம் சென்றிருந்தாலும்கூட, அதையும் மீறி வளர்ச்சித் திட்டங்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து அதைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

இங்கே நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். விவசாயத்திற்கென்று இந்தக் கழக அரசு ஒன்றுமே செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். Current financial year-ல் இந்த வருடத்தில் மட்டும் பார்த்தால் பல்வேறு வகையான உதவிகள் விவசாயிகளுக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. நில வரி இரத்து செய்யப்பட்டு 44 கோடி ரூபாய் அதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அபராத வரி ரத்து செய்யப்பட்டு அதற்கு 50 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட மொத்தக் கடன் 697 கோடியே 99 இலட்ச ரூபாய். இதன் காரணமாக 7 இலட்சத்து 60 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்திருக்கிறார்கள். குறுகிய காலக் கடன் என்கின்ற வகையில் 975 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இடைப்பட்டக் கடன் 100 கோடி ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

கிராமங்களைப் பொறுத்தவரையில், விவசாயிகளுக்கு நிதி ஆதாரம் தேவை என்கின்ற வகையில் 3,400 கோடி ரூபாய்க்கு நகைக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் கிணறு தோண்டுகிற நேரத்தில் அந்தக் கிணறு பொய்த்துப் போய்விட்டால், அதிலே தண்ணீர் வரவில்லை என்று சொன்னால், அந்தச் செலவினை நூற்றுக்கு நூறு முழுமையாக விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று நம்முடைய கழக அரசு உத்தரவிட்டிருக்கிறது.

அதேபோல நீண்ட காலக் கடன்கள் (long term loans) என்கின்ற வகையிலே கிட்டத்தட்ட 439 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் மேலாக நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பயிர்ப் பாதுகாப்புக்காக (Crop Insurance) தரப்பட்டிருக்கிற பணம் 72 கோடியே 24 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய். கிட்டத்தட்ட 1 இலட்சத்து 189 விவசாயிகள் இதனாலே பயனடைந்திருக்கிறார்கள். நான் இவ்வளவையும் குறிப்பிடுவதற்குக்



காரணம் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்குக் கழக அரசு எந்த அளவுக்கு உதவி செய்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் (மணியடிக்கப்பெற்றது). அதோடு விவசாயிகளுக்குத் தேவைப்படும் இடுபொருட்கள் (inputs) விதை போன்ற பொருட்களை 455.75 கோடி ரூபாய் அளவிற்கு, கழக அரசு வழங்கி இருக்கிறது. அதேமாதிரி 250 கோடி ரூபாய்க்கு உரம் வழங்கி இருக்கிறது. 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு விதை நெல் கொடுக்கப்பட்டிருக்கிறது. 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பூச்சி மருந்துகள் (Pesticides) வழங்கப்பட்டிருக்கின்றன. ஆக இப்படி பல்வேறு காரியங்கள் நம்முடைய கழக அரசால் சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

வருமானத்தைப் பொறுத்தவரையில் கழக அரசு எந்த அளவுக்கு வருமானத்தை உயர்த்தி இருக்கிறது என்று பார்த்தால் 1995-96-ல் இதனுடைய மொத்த வருமானம் 10 ஆயிரத்து 599 கோடியே 75 இலட்சம் ரூபாய். ஆனால் இப்போது இந்த ஆண்டில் எந்த அளவுக்குப் பெருகியிருக்கிறது என்றால் 15 ஆயிரத்து 867 கோடியே 78 இலட்சம் ரூபாய் என்ற வகையில் அது பெருகியிருக்கிறது. ஆக இப்படி வருமானத்தைப் பெருக்கி ஏழைகளுக்கு உதவி செய்து விவசாயத்தை ஊக்குவிக்கின்ற வகையில், கிராமப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்ற வகையில் நம்முடைய தலைவர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே ஒன்றை மட்டும் சொல்லி என் உரையை முடித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய நண்பர்கள் பாரதிய ஜனதா கட்சி மாநாட்டில் சட்டம் ஒழுங்கு-சரியில்லை என்று குறிப்பிட்டார்கள். அதேபோல நம்முடைய மாண்புமிகு பிரதமர், நண்பர் திரு. வாஜ்பேயி அவர்களும் அதையே விளக்கமாக பொதுக் கூட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில், கோவையிலே உள் துறை அமைச்சர் சமீபத்தில் வந்து பொதுக் கூட்டத்திலே பேசுகிறபோது அவர் குறிப்பிட்டார்: 'சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது; D.M.K. Government moves on the right direction, என்று அப்போது குறிப்பிட்டார். ஆக அவர் சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று சொல்கிறார். நம்முடைய பிரதமர் சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்கிறார். இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், இடைப்பட்டது, பீகார். வேறொன்றும் அல்ல. பீகார் பிரச்சினையில், கழக அரசு, ஆளுகின்ற பாரதிய ஜனதா கட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால், சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று திரு. வாஜ்பேயி அவர்கள் சொல்லியிருப்பார்கள். எனக்கு அவரைப் பற்றித் தெரியும். திராவிட

முன்னேற்றக் கழகம், ஓர் இலட்சியத்திற்காக, கொள்கைக்காக சில முடிவுகளை எடுக்கிற கழகமே தவிர, ஆளுக்காக நிச்சயமாக முடிவுகளை எடுக்கக்கூடிய கழகம் அல்ல என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-30*

பல்வேறு பிரச்சினைகள் குறித்து நான் சொல்லவேண்டியிருந்தாலும், நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தினால், என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அது தமிழகத்தோடு இணைவதற்குப் பலவிதமான போராட்டங்களை பல ஆண்டுகள் நடத்தி இணைந்தோம்.

'சும்மாவா வந்தது சுதந்திரம்?
எத்தனை எத்தனை தடியடிகளைத் தாங்கினர்;
எத்தனை எத்தனை செக்குகளை இழுத்து வாடினர்;
தாக்குகின்ற குண்டினால் உயிரிழந்தோர் எத்தனை?'

என்றெல்லாம் அப்போது பாடுவதுண்டு. அதேபோல் கன்னியாகுமரி மாவட்டம், தமிழகத்தோடு இணைவதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் தியாகங்கள் செய்துள்ளனர். இது ஒன்று.

மற்றொன்று. கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சாதாரணமாகப் பேசுவதுண்டு. எங்களைப் பொறுத்தமட்டில், நாங்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போன்றவர்கள். அதாவது திருவனந்தபுரம் தலைநகராக இருந்தபோது, ஒன்றரை மணிக்குள் திருவனந்தபுரம் சென்றுவிடலாம். ஆனால் இப்போது சென்னைக்கு வருவதற்கு கிட்டத்தட்ட 16 மணி நேரம் ஆகிறது. எவ்வளவோ சிரமப்பட்டு தமிழகத்தோடு இணைந்தோம். எங்களுடைய அலுவல்களுக்கு இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, தமிழக அரசு எங்களைக் கனிவோடு கவனிக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய கோரிக்கை, பொதுமக்களுடைய கோரிக்கையாக உள்ளது. இதையெல்லாம் அடிப்படையாக வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய தண்ணீர் பிரச்சினையைப் போக்கக்கூடிய வகையில், மாம்பழத்துறை திட்டத்தை இந்தத் தடவை



ஒதுக்கித் தந்தமைக்கு, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பில், குறிப்பாக பத்மநாபபுரம் தொகுதி மக்களின் சார்பில், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியது. மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்க ஓர் எளிய முறையைக் கொண்டுவந்து—பல மாணவர்கள் சான்றிதழ்கள் கிடைக்காமல் மேற்படிப்புக்குக்கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது; அதைப் போக்கக்கூடிய வகையில்—சான்றிதழ்கள் வழங்குவதை எளிமைப்படுத்தியது பாராட்டத்தக்கது.

ஊரகக் குடிநீர் வசதிக்காக ரூ.330 கோடியை ரூ.450 கோடியாக உயர்த்தியது பாராட்டத்தக்கது. ஆனால் கிராம இணைப்புச் சாலைக்காக ரூ.254 கோடியாக இருந்ததை, ரூ.270 கோடியாக உயர்த்தியது போதாது. கிராம மக்கள் இன்றும்கூட பல இடங்களுக்கு அவசரக் காரியங்களுக்காக ஆஸ்பத்திரிக்குச் செல்லக்கூடிய நேரத்தில் நோயாளிகளைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே கிராமத்தோடு கிராமத்தை இணைக்கக்கூடிய வகையில் உள்ள சாலைகளுக்கு இன்னும் அதிக நிதியுதவி ஒதுக்கி, அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழகத்தினுடைய மற்ற அனைத்துப் பிரச்சினைகளும் எந்த அளவுக்கு இருந்தாலும்கூட, ஓரளவுக்கு பாதிப்பு இல்லாத சூழ்நிலையில் மக்கள் வாழக்கூடிய இந்த நிலையில், பயங்கரவாதத்தைப் பற்றி நிச்சயமாக தமிழக அரசு கவனத்திலே கொண்டு, ஒரு நல்ல முறையில் பயங்கரவாதத்தை ஒடுக்கக்கூடிய வகையில் ஆவன செய்யவேண்டும்.

சமீபத்தில் தேங்காய்ப்பட்டினத்தில் நடந்த சம்பவம் பற்றி, கடந்த தடவைகூடச் சொல்லியிருந்தேன். 22-2-1999 அன்று C.B., C.I.D. காவல் துறையினர், ஒருவரைக் கைது செய்து, 6 வெடிகுண்டுகளைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அதில் சமுதாயத்தில் மிகப் பெரியவர்களாக உள்ளவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம், 6 பேர் முன்ஜாமீன் கேட்டிருக்கிறார்கள் அவர்களைக் கைது செய்ய முடியாத அளவுக்கு அரசியல் குறுக்கீடுகள் இருக்கின்றன. சட்டப்படி யார் குற்றவாளிகளோ அவர்களைக் கைது செய்து—கோயம்புத்தூர், மற்றும் நெல்லையில் நடந்தது போன்ற ஒரு பிரச்சினை, கன்னியாகுமரி மாவட்டத்திலும் வந்துவிடக் கூடாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு—ஆரம்பத்திலேயே தகுந்தவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக பெரும்பான்மை, சிறுபான்மை என்று பேசுவதுகூட எனக்கு வேதனையாக இருக்கிறது. ஓரிசாவில் பல மாதங்களுக்கு முன்னால், ஒரு பாதிரியாரும் இரண்டு குழந்தைகளும் சுட்டுக் கொல்லப்பட்டதை வேதனையோடு, சட்டமன்றத்திலேகூட பல உறுப்பினர்கள் கண்டித்தோம். அனைத்து அரசியல் கட்சிகளும் கண்டித்திருக்கின்றன. அது பல மாதங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம். ஆனால், சென்ற தடவை சட்டமன்றக் கூட்டத் தொடர் நடந்தபோது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கான கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது, காஷ்மீரில் 22 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்தி வந்தது.

அதுகுறித்து தமிழகத்தில் எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் வேதனைப்பட்டதாகவோ, கண்டித்ததாகவோ பார்க்க முடியவில்லை. மூன்று பேர் சிறுபான்மையினர் கொல்லப்பட்டது குறித்து பெரிய அளவிற்குக் கண்டிக்கப்பட்டது. கண்டிக்க வேண்டியவை; கண்டித்தார்கள். நியாயம்தான். அதேநேரத்தில் 22 பேர் கொல்லப்பட்டது குறித்து ஏன் கண்டிக்கவில்லை? தமிழக அரசியல்வாதிகள் அப்போது அதைப் பெரும்பான்மை என்று பேசியது முறையா? ஆக பெரும்பான்மை, சிறுபான்மை என்று பேசுவதை விட்டுவிட்டு யாராக இருந்தாலும் இதுபோன்ற கொலைச் சம்பவங்கள் நடக்கிறபோது கண்டிக்கக்கூடிய மனநிலை வேண்டும். சிறுபான்மை, பெரும்பான்மை என்று பேசுவதை விட்டுவிட்டு அனைவரையும் ஒன்றாகப் பார்க்கக்கூடிய நோக்கத்தை அனைத்து அரசியல் தலைவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டும். இதனால் அதிகாரிகளுக்கு நியாயமாக செயல்பட வேண்டுமென்ற உந்துதல் வர வாய்ப்பு உள்ளது. *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-35*

**திரு. கே. சுப்பராயன்:** அனைவரையும் ஒன்றாகப் பார்க்க வேண்டுமென்ற பார்வை வந்துவிட்டால், எல்லாம் சரியாகிவிடும் என்றால், பாரதிய ஜனதா கட்சிக்குத்தான் அந்தப் பார்வை முதலிலே வரவேண்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தமட்டில் அனைவரும் சகோதரர்கள். வழிபாட்டால்தான் மாறியிருக்கிறோம். தேசியத்தால் நாம் அனைவரும் ஒன்று என்பதுதான் எங்களுடைய சித்தாந்தம். நாம் அனைவரும்—தானும் வாழ்ந்து, மற்றவர்களையும் வாழ வைக்கக்கூடிய வகையில் தங்களுடைய



வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். அனைவரும் ஒன்றுபட்டு வாழவேண்டும்; ஓரே நாடு என்பதுதான் எங்களுடைய சித்தாந்தம். எனவே சமுதாயத் தலைவர்கள் நேர்மையாக, நல்லவர்களாக, ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தவர்களை, சுதந்திரப் போராட்ட தியாகிகளை, அவர்களை பாராட்டக்கூடிய முகமாக—

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அனைவரும் வேலாயுதங்களாக இருந்தால் நானும்கூட வரவேற்பேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆனால் வேல் ஆயுதங்களை கையிலே எடுப்பவர்களை வரவேற்க முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** Point of order. திரு. வேலாயுதன் அவர்கள் சொன்னதுபோல அது என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட ஒரு பகுதி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்டத் தலைவர்களை, சமயத் தலைவர்களை, நல்லவர்களை அவர்கள் வழியில் சமுதாயம் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தியாகிகளுக்கு, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை என்று எல்லோரும் சொல்கிறார்கள், வேறு ஒன்றுமில்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்து விடட்டும்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் பொறுத்தவரையில், நல்ல மரத்தில்தான் நல்ல காய் கிடைக்கும். பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல

மரம். (சிரிப்பு) என்னைத்தான் அனைவருக்கும் தெரியும். மற்றவர்களிடம் பழகிப் பார்த்தால் என்னைவிட நன்றாக இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படும் இது ஒன்று. இன்னொன்று. நான் கற்றுக்கொண்ட பாடம்கூட என்னுடைய தலைவர்களைப் பார்த்துப் படித்ததுதான். ஏனென்றால் என்னைவிட சிறப்பாக இருப்பவர்கள் அவர்கள். (சிரிப்பு)

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு, அவர்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றி அனைவரும் நல்லவர்களாக சமுதாயத்திற்கு உதவி செய்து வாழக்கூடிய வகையில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தது பாராட்டத்தக்கது; வரவேற்கத்தக்கது.

இன்னொன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முகம்மது கறீம் சாக்லா - எம்.சி. சாக்லா அவர்கள் பாரத நாடு சுதந்திரம் அடைய வேண்டுமென்று போராடிய மிகப் பெரிய தியாகி. பாகிஸ்தான் பிரியக்கூடாது, நாம் அனைவரும் வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு வாழ வேண்டும், ஒற்றுமையின் மூலம் பாரத நாடு உலகத்தில் பெரிய அளவில் உருவாக வேண்டுமென்று சித்தாந்தங்களையெல்லாம் பேசியவர் எம்.சி. சாக்லா அவர்கள். நான் என்ன நினைக்கிறேன் என்றால், ஆங்காங்கு தீவிரவாதம் வளரக்கூடிய இந்தக் காலகட்டத்தில், அவர்களுடைய வாழ்க்கை வரலாறு என்ன, அவர்கள் எப்படிப்பட்டவர்கள், இந்த உலகம் போற்றக்கூடிய வகையில் வாழ்ந்த எம்.சி. சாக்லா எப்படிப்பட்டவர்கள் என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கக்கூடிய வகையில் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் அமைத்தால் ஓரளவு இந்தத் தீவிரவாதம்கூட குறையக்கூடிய வாய்ப்பு ஏற்படுமோ என்று கருதுகின்றேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முகமமது கறீம் சாக்லா - எம்.சி. சாக்லா-அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்க முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. குமரி மாவட்டத்திற்கு சாலைகளுக்காக ஒதுக்கக்கூடிய நிதி போதாது என்ற குறை எப்போதும் இருக்கிறது.

பேருந்துப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் பேருந்துகள் மோசமாக இருக்கின்றன. நேற்று முன்தினம் நான் திருச்சி மாநாடு முடிவடைந்து திருச்சியிலேயிருந்து திருவனந்தபுரம்-சென்னை பேருந்தில் 12 மணியளவில் வரும்போது எனக்கு முன்பகுதியில் seat கிடைக்கவில்லை. கடைசியில்



உட்கார வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பேருந்தில் உட்கார்ந்து வரமுடியாத நிலை இருந்தது. பிறகு சிரமப்பட்டு பாதி வழியிலே கடை ஒன்றிலே இறங்கி வேறு பேருந்து இருக்கிறதா என்று பார்த்து கேட்டு முன் இருக்கையில் உட்கார்ந்தேன். அதுவும் அப்படித்தான் இருந்தது. நான் என்ன நினைக்கிறேன் என்றால் அரசு தன்னுடைய தேவைக்கு வாங்கக்கூடிய பேருந்துகளை முதலிலே அதிகமான போக்குவரத்து நடக்கக்கூடிய விரைவுப் பேருந்துக் கழகத்திற்கு ஒதுக்கிக் கொடுத்த பின்னால், தேவைக்கேற்றாற்போல் மற்ற காரியங்களுக்கு மாற்றக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், அதிக தூரத்திற்கு விரைவுப் பேருந்துகளில் பயணம் செய்பவர்களுக்கு வசதியாக, நல்லபடியாக அமையும் என்று கருதுகிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோன்று அறநிலையத் துறையைப் பொறுத்தமட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆணையடி எஸ்டேட் இருக்கிறது. அதை அரசு எடுத்து சமத்துவபுரமாக அமைப்பதற்கு திட்டம் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். சமத்துவபுரம் என்பது நிச்சயமாக தேவைதான். ஓரளவிற்கு இந்த சாதி, மத வேறுபாடுகளை ஒழிப்பதற்கு இது ஒரு காரணமாக அமையும் என்பதால், அதை வரவேற்கிறோம். அமைச்சரிடம் கேட்டால், போதுமான வருமானம் இல்லை என்று சொல்லக்கூடிய ஆலயங்கள் பல இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எனவே அதிலிருந்து வரக்கூடிய வருமானத்தைக்கொண்டு மற்ற ஆலயங்களைப் பராமரிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தக்கூடிய வகையில் செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கம் செய்யக்கூடிய இன்னொரு காரியத்திற்கு அதைப் பயன்படுத்துவது, ஆலயத்தினுடைய பணிகளை அது பாதிக்குமோ என்ற அச்சம் அந்தப் பகுதி மக்களுக்கு உள்ளது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு என்ன செய்யலாம் என்பதைப் பரிசீலிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித் திருநாடு! வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது, தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே நடந்த ஒரு வெடிகுண்டு சமாசாரத்தைச் சொன்னார்கள். அவர்களைக் கைது செய்ய

வேண்டுமென்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. ஏற்கெனவே இதுசம்பந்தமாக சிறப்பு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இரண்டு தினங்களாக உடல்நிலை சரியில்லை என்கிற காரணத்தினால், அவர்கள் அவைக்கு வராத காரணத்தினால், இதை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அந்தப் பிரச்சினையின் சூழ்நிலையைப் பார்க்கிறபோது வாதி, பிரதிவாதியாக இருக்கின்ற சூழ்நிலை. அங்கே குண்டு வெடித்ததைக் குறித்து காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்தது இஸ்லாமியப் பெருமக்கள்; விசாரிக்க அவர்களை அழைத்து வந்தது இஸ்லாமியப் பெருமக்கள். எல்லாப் பகுதிகளையும் சுற்றிக்காட்டியது இஸ்லாமியப் பெருமக்கள். அவர்கள்மீது இப்போது காவல் துறையினர் வழக்குப் போட்டிருக்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. மனித நேயத்திற்கு மாறானது. அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்றைக்கு விவாதத்தை வைத்துக்கொள்கிறார்களோ அன்றைக்கு நான் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். எனவே ஒரு நிரபராதியைப்பற்றி தவறாகச் சொன்னதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் யார் என்று சொல்லவில்லை. யார் குற்றம் செய்தாலும் தக்கபடியாக நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அமைதியை ஏற்படுத்த வேண்டும். அதற்கு காவல் துறை தயக்கம் காட்டாத அளவிற்கு காவல் துறைக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய வகையில் அரசியல் தலைவர்களுடைய பேச்சு அமைய வேண்டும். அரசாங்கம் அதற்கு ஊக்கம் கொடுத்து, கன்னியாகுமரி மாவட்டம் அமைதியாக இருக்க நடவடிக்கை வேண்டும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கண்டுபிடித்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. எந்தச் சமயத்தையும் நான் குறிப்பிடவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். நம்முடைய நிதிநிலை அறிக்கையில் தொடக்கக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு முகாம்கள், மனிதக் கழிவுகளை மனிதனே எடுக்கவும்,



சுமக்கவும் உள்ள இழிவு நிலையைப் போக்குவதற்கான நடவடிக்கை, தென்மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெறுகின்ற ஜாதிக் கலவரங்களைத் தடுத்து, மக்களின் வாழ்க்கை நிலையை ஆராய்ந்து மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதற்கு உயர்மட்டக் குழு, மாணவர்களுக்கு பள்ளியிலேயே சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கை, தரிசு நில மேம்பாட்டிற்கான ஆணையம், போன்றவற்றையெல்லாம் அறிவித்திருப்பது, மிகுந்த வரவேற்கத்தக்க நடவடிக்கைகள் ஆகும்.

அதேசமயத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு வழங்கும் திருமண உதவித்தொகை 10,000 ரூபாய் என்று இருந்ததை தற்சமயம் சான்றிதழ் கிடைப்பதில் ஏற்படுகிற சிரமத்திற்காக 10 ஆம் வகுப்பு என்று மாற்றி இருப்பது ஏழைப் பெண்களுக்குத் திட்டம் பயன்பட வேண்டுமென்ற கொள்கைக்கு ஏற்புடையதாக இல்லை என்று நான் கருதுகிறேன். ஆதலால் மீண்டும் 8 ஆம் வகுப்புவரை படித்த பெண்களுக்கு அந்தத் திருமண உதவித் திட்டத்தை அளிக்க வேண்டும். அதே சமயத்தில் பள்ளிச் சான்றிதழ் பெறக்கூடிய அந்தப் பிரச்சினையில் 6 ஆம் வகுப்பிலிருந்து மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்தபடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்தவர்கள் மக்கள் தொகையில் 65 சதவிகிதமாகவும், அவர்கள் உழைப்பால் உணவு உற்பத்தி 98 இலட்சம் டன்னாகவும் உயரும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பல்வேறு அறிவிப்புகள் விவசாயிகள் சம்பந்தமாக வந்திருந்தாலும், அவர்களுடைய கடன் சுமை சம்பந்தமாக எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. மக்கள் தொகையில் 65 சதவிகிதமாக உள்ள விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள கடன் நெருக்கடியை மாநில அரசு தீர்க்க வேண்டும். கடன் பாக்கிக்காக சிறு விவசாயிகள் மீது ஜப்தி செய்வதில்லை என்ற அறிவிப்பு மட்டும் போதாது. ஒவ்வொரு ஆண்டும் கடன் சுமையும், கடனுக்கு வட்டிச் சுமையும் கூடிக்கொண்டே சென்று, விவசாயிகளை மீளமுடியாத நெருக்கடியில் தள்ளுகிறது. கடன் சுமையால், இருக்கின்ற நிலங்களை விற்றுவிட்டு, விவசாயிகள் ஓட்டாண்டிகளாக கிராமத்தைவிட்டு பிழைப்பைத் தேடி வெளியேறி கூலி வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் மாநில அரசு விவசாயிகளை, கடன் சுமையிலிருந்து பாதுகாக்க மற்ற துறைகளுக்கு ஒதுக்குவது போல் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு Budget-ல் நிதி ஒதுக்கீடு செய்து, புயல் மழை, வெள்ளம்

மற்றும் வறட்சி ஏற்படக்கூடிய காலங்களில் அல்லது விளைச்சல் பாதிக்கக்கூடிய காலங்களில், இந்த நிதி மூலம் விவசாயிகளுக்குக் கடன் சுமையிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு குறைந்தது வட்டிச் சலுகையாவது அளிக்க வேண்டும், வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. மாநில அரசு சிறிய விவசாயிகளிடமிருந்து ஜப்தி செய்வதில்லை என்று அறிவித்திருந்தாலும்கூட, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் அரசின் அறிவிப்பைக் கண்டுகொள்வது இல்லை. குறிப்பாக திருவள்ளூர் மாவட்டத்தில் இலுப்பூர் என்ற கிராமத்தில் ரூ.3,668.60 பாக்கிக்காக ஜப்தி செய்து 5 வகையான பொருட்களை எடுத்துச் சென்றுள்ளார்கள். அரசின் முடிவுகளை மீறிச் செயல்படும் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயத் தொழிலாளர் நலன் குறித்து கோலப்பன் குழு அறிக்கையின்மீது அரசு உரிய முடிவை இக்கூட்டத் தொடரில் அறிவிக்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை முழு மனதோடு வரவேற்கிறேன். குறைந்தபட்ச ஊதியம் வழங்குவது மட்டும் விவசாயத் தொழிலாளர்களின் பிரச்சினை இல்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று தனித் துறையோ அல்லது தனி வாரியமோ ஏற்படுத்த வேண்டும். 60 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டும். விவசாயத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும். வேலைக்கு உத்தரவாதம் வேண்டும். விவசாய வேலை முடிந்துவிட்டால் மாற்று வேலை வழங்குவது மட்டுமல்லாது வேலையில்லாத காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படுவதுபோல் நிவாரணத் தொகை போன்ற சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நியாயமான ஊதியம் வழங்குவதோடு ஆண் பெண் வித்தியாசமின்றி அனைவருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். அதோடு திரட்டப்பட்ட ஊழியர்களுக்கு இருப்பதுபோல் சட்டரீதியான பாதுகாப்பும் சலுகையும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கக்கூடிய அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியில் தமிழகம் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியிருக்கிறது என்பது மிகவும் பெருமிதம் அளிக்கக்கூடிய நிகழ்ச்சியாகும். அதேசமயத்தில் தமிழகத்தில் உள்ள பஞ்சாலைத் தொழில் அழிந்து கொண்டு வருகிறது. மூடிய ஆலைகளைத் திறக்க முடியாதது மட்டுமல்ல, இருக்கின்ற ஆலைகளும் மூடப்படுகின்றன. மேலும் முதலாளிகளும் ஆலையை மூடிவிட்டு, ஏற்கெனவே வாங்கிய சம்பளத்தில் பாதி, அதற்கும் குறைவாக சம்பளம் வாங்குவதற்குச் சம்மதித்தால் ஆலை திறக்கப்படும் என்று தொழிலாளர்களை மிரட்டக்கூடிய நடவடிக்கையும் இருக்கிறது. குறிப்பாக சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சக்கந்தி நூற்பாலையில் இப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.



அடுத்ததாக என்னுடைய மானாமதுரை தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே முத்தனந்தல் சோமசுந்தரம் ஸ்பின்னிங் ஆலை கடந்த ஆட்சியில் மூடப்பட்டது. ஆலையைத் திறக்க வேண்டுமென்று 1998 அக்டோபரில் காலவரையற்ற உண்ணாவிரதத்தை நான் மேற்கொண்ட சமயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீதிமன்றத் தீர்ப்பிற்குப்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். தற்சமயம் உயர் நீதிமன்றம், அரசே ஆலையைத் திறக்க வேண்டுமென்று தீர்ப்பு அளித்துள்ளது. ஆதலால் மாநில அரசு மேல் முறையீடு எதையும் செய்யாமல் ஆலையைத் திறந்து தொழிலாளர் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை கூடிக்கொண்டே செல்கிறது. அரசுப் பணியில் உள்ள காலி இடங்களை நிரப்புவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பணி நியமனம் இல்லாததால் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த இளைஞர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே சென்றுவிடுவதோடு அவர்கள் வயது வரம்பையும் தாண்டி விடுகிறார்கள். ஆதலால் வேலை பெறுவதற்கு இன்றைக்கு உள்ள வயது வரம்பு 30-35 என்று இருப்பதை மாற்றி வயது வரம்பை நீட்டிக்க வேண்டுமென்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்ற பெரியாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் அணையின் உயரம் 152 அடியாக உயர்த்தப்படுவதற்கு தமிழக அரசும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். ஆயினும்கூட, அது முடிவுபெறாத நிலையில் உள்ளது. எனவே மாநில அரசு பேச்சுவார்த்தை

மூலம் முடிவுக்குக் கொண்டுவர தொடர்ந்து முயற்சிகள் எடுத்து எப்படியாகிலும் அணையின் உயரத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-50*

வைகை நதிநீர் மூலம் பாசனம் பெறும் இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்ட மக்களுக்கு ஒருபோகச் சாகுபடிக்குப் பாசன உத்தரவாதம் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை, அருப்புக்கோட்டை, முதுகுளத்தூர் ஆகிய தொகுதிகளில் பாசனத்திற்குப் பயன்படக்கூடிய கிருதுமால் நதியை மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1992 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் 152 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்து அதைக் கிடப்பில் போட்டுள்ளார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து பணியைத் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்கள் என்று இந்தநேரத்திலே நம்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிலையூர் கால்வாய் செப்பனிடும் பணியை இந்த ஆண்டு எடுத்துக் கொண்டதற்கு மாநில அரசுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மானாமதுரை மற்றும் பரமக்குடி தொகுதியில் பல கிராமங்களில் விவசாயத்திற்கு, பாசனத்திற்கு உதவும் நாட்டார் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு வந்தபோது, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏரிகளெல்லாம் தூர் வாரப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டில் அந்தப் பணியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நீண்டகாலமாக என்னுடைய மானாமதுரை தொகுதியில் இருக்கக்கூடிய திருபுவனத்தை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். நானும் பல தடவை அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற தொடர்ந்து வலியுறுத்தி



வந்துள்ளேன். தமிழக அரசு அந்தக் கோரிக்கையை ஏற்று திருபுவனத்தை தனித் தாலுகாவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியத்திலுள்ள 14 ஊராட்சிகளுக்குட்பட்ட கிராமங்களைப் புதிதாக உருவாக்கக் கோரும் தாலுகாவான திருபுவனத்தில் இணைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை தொகுதியில் பழையனூர் வட்டாரத்தில் மின்வரத்து மிகவும் மோசமாக உள்ளது. வாரத்தில் ஒன்றிரண்டு தினங்கள்கூட முழுமையாக மின்சாரம் வருவதில்லை. இதைச் சரி செய்ய திருப்பாசத்தி அருகே ஆய்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் துணை மின் நிலையப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மானாமதுரை SIPCOT தொழில் வளாகத்தில் தொடங்கப்பட்ட பல தொழிற்சாலைகள் தற்சமயம் மூடப்பட்டுவிட்டன. மானாமதுரை சிறுதொழில் நகரமாக மாறும் என்றிருந்த நம்பிக்கை வீணாகி, அந்தத் தொழில் அமைப்புகளில் பணிபுரிந்த தொழிலாளர்களெல்லாம் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே SIPCOT வளாகத்திலுள்ள தொழிற்சாலைகளுக்கு மேலும் அரசு சலுகை அளித்து சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* அடுத்து துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம்.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த ஆட்சியில் போடப்பட்ட அரசியல் வழக்குகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளை என் கட்சியின் சார்பில் செய்தும் நீக்கிக் கொள்ளப்படாமல் இருக்கிறது. ஆதலால் தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த வழக்குகளை உடனடியாகத் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்று. நம்முடைய மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குடிதண்ணீருக்காக என்னுடைய தொகுதியிலே நீண்ட திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்தப் பணிகளை நிர்வகிக்கக்கூடிய பொறுப்பு ஊராட்சி மன்றத் தலைவர்களிடத்தில் இருக்கக்கூடிய காரணத்தினால் ஏராளமான கிராமங்களில் குடிதண்ணீர் விநியோகம் என்பது மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. அவற்றையும் தெருவிளக்கு பொறுப்பையும் மறு பரிசீலனை செய்து அந்தப் பணிகளை ஊராட்சி

மன்றத்திலிருந்து மாற்றி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

***திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையை மனதார வரவேற்று ஒரு சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3 தினங்களாக உடல் நலககுறைவு காரணமாக சட்டமன்றத்திற்கு வரவில்லை; இன்றைக்குச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள்; அவர்கள் 100 ஆண்டுகாலம் வாழ வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக என்னுடைய நல்லெண்ணத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல. 100 ஆண்டுகள் முதலமைச்சராகவே வாழ வேண்டுமென்ற (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய ஆசையை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய Budget-ஐப் பற்றிப் பல்வேறு பத்திரிகைகள் விளக்கமாகச் சொல்லியிருக்கின்றன ஒன்றிரண்டு பாராட்டுக்களை மட்டும் குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

இந்து பத்திரிகையில் Budget-ஐப் பற்றிக் குறிப்பிடும்போது "Tamil Nadu Budget is largely an exercise in extending the developmental schemes which are already in different stages of implementation" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதோடு தலையங்கத்தில் இன்னொரு இடத்தில், "The downward revision in sales-tax rates for a wide range of electronic items cannot but come as a relief for the industry" என்றும் மிக விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். Indian Express பத்திரிகை "Karunanidhi's Industry-friendly Budget spares poor" என்று பாராட்டி எழுதியிருக்கிறது.

*பிற்பகல் 12-55*

அதோடுமட்டுமல்ல. நல்ல பாராட்டாக 'தினகரன்' தலையங்கத்தில், "பேரவையில் கலைஞர் இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்தபோது 61 முறை 231 சட்டமன்ற உறுப்பினர்கள் கைதட்டி மகிழ்ந்தார்களாம்.



62 ஆம் கைதட்டலாக 6 கோடி தமிழக மக்கள் சார்பாக இங்கே இப்போது கைதட்டி கலைஞரைப் பாராட்டுகிறோம்" என்று அந்தப் பத்திரிகை தலையங்கத்திலே குறிப்பிட்டிருக்கின்றது.

அதேபோல் சென்னைப் புறநகர் வியாபாரிகளுக்கு—"Budget-ல் பல சலுகைகள் அளித்து வணிகர்களின் இதயத்தில் இரத்தின சிம்மாசனம் போட்டு அமர்ந்துவிட்டார் கலைஞர்" என்று பேரவையினுடைய தலைவர் அவர்கள் பாராட்டி இருக்கின்றார். ஆகவே இப்படி எல்லோரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாராட்ட மனம் இல்லாத சிலர் எப்போதும்போல், இந்த Budget-ஐ ஏமாற்றம் தரும் Budget என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலும் இரண்டு வகை. ஒன்று எதிர்க்கட்சி. மற்றொன்று தோழமைக் கட்சிகளிலேகூட சிலர் friendly criticisms என்ற முறையில் தோழமை உணர்வோடு சில கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், "நிதிநிலை அறிக்கை, ரூ. 529 கோடி பற்றாக் குறையைக் காட்டும் ஒரு வரவு-செலவுக் கணக்கு ஏடாக இருக்கிறதே தவிர, நாட்டை வளப்படுத்தவோ, சமுதாயத்தை மேம்படுத்தவோ திட்டம் ஏதும் உருப்படியான முறையில் உருவாக்கப்படவில்லை" என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதைப்போல பாட்டாளிகளின் தலைவர் என்பவர் சொல்கின்றபோது, "தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் புதியதாக ஒன்றும் இல்லை" என்றும் குறிப்பிடுகின்றார். நான் இந்தநேரத்திலே தெரிவிக்க விரும்புவதெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். அவருடைய படைப்புகளைப் பற்றி ஒருவர் கேலி செய்து பேசுகின்றபோது சொன்னார். அவர் எந்த நூலும் எழுதவில்லை. அண்ணா சொன்னார். "என்னுடைய படைப்புகளை ஒரு நூலாசிரியர் பரிகசித்தால் நான் தாங்கிக்கொள்வேன், நூலே எழுதாத ஒரு மலடியா என்னுடைய நூல்களைப் பரிகாசம் செய்ய வேண்டும் என்று சொன்னார். இதையே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய 12-வது நிதிநிலை அறிக்கை இது. இன்னும் சொல்லப்போனால் 12 Budget-களைப் பிரசவித்திருக்கின்ற ஒரு தாயைப் பார்த்து, அனுபவமிக்கத் தாயைப் பார்த்து, சில மலட்டுச் செல்விகளும், சில கிழட்டு மலடுகளும் பரிகசிப்பதா என்பதை மட்டும் நான் இந்தச் சபையிலே கேட்க விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கை தரப்படுகிறது

என்றால் அதிலே இரண்டு நிலைகள் உண்டு ஒன்று, 5 ஆண்டுகளுக்கும் திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்படுவதைப்பற்றி அதிலே சொல்ல வேண்டும். இன்னொன்று, அது கட்சியினுடைய கொள்கைகளை விளக்கமாகக் கொடுக்க வேண்டும். இன்று கலைஞர் அவர்கள் தந்தை பெரியாரின் மாணவனாக, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தொண்டனாக இருக்கிறார். பெரியாரைப் பொறுத்தவரையில் அவருக்கு இரண்டு குணங்கள் உண்டு. சிக்கனத்திலே சிறந்தவர்; இரண்டாவது, ஜாதியை ஒழிப்பதற்காகப் பாடுபட்டவர். இப்போது நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் பெரியாருடைய தொண்டனாக இருக்கிற காரணத்தால் இந்த இரண்டையும் பட்ஜெட்டிலே வெளியிட்டிருப்பதை நான் காண்கிறேன்.

1998-99 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் உத்தேசப் பற்றாக்குறையாக 876.67 கோடி ரூபாய் இருந்தது; சிக்கனத்தின் மூலமாக இதைக் குறைப்பேன் என்று சென்ற பட்ஜெட்டில் அறிவித்தார். இப்போது இறுதிப் பற்றாக்குறை, கலைஞருடைய சிக்கனத்தின் காரணமாக 235.73 கோடியாகக் குறைந்திருக்கின்றது.

இன்னொன்று. ஜாதி ஒழிப்பு. வைக்கம் வீரர் என்று பாராட்டப்பட்டவர் தந்தை பெரியார் அவர்கள். வைக்கத்திலே ஜாதி ஒழிப்பிற்காக போராடியவர். இன்றைக்கு 75-வது ஆண்டு விழா நடக்கவிருக்கின்றது. தலைவர் கலைஞர் அவர்களும் கலந்து கொள்கிறார்கள். தந்தை பெரியாருடைய நினைவாக இந்த 75-வது ஆண்டு "பெரியார் நினைவு சமத்துவபுரம்" திட்டமாகப் பெயர் மாற்றி அழைத்திருப்பது தந்தை பெரியார் அவர்களுக்குத் தருகின்ற மரியாதை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னொன்று. சமத்துவபுரம் திட்டத்தைப் பற்றி 10 நாட்களுக்கு முன்னால் நாங்குநேரி மடத்து ஜீயர் சுவாமி அவர்கள் ஒரு கோவில் விழாவிலே கலந்துகொள்கிறபோது பலவாறாகக் கலைஞரைப் பாராட்டிவிட்டு இந்தச் சமத்துவபுரம் திட்டத்தைப் பற்றி மட்டும் அவர் 10 நிமிடம் பாராட்டிப் பேசினார். அதனாலே நான் குறிப்பிட விரும்புவது, சமத்துவபுரம் திடடத்தை பயனாளிகள் மட்டும் பாராட்டவில்லை; முற்றும் துறந்த முனிவர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்டுகிறார்கள் என்று கூறி நான் இந்த நேரத்திலே இத்திட்டத்தை வரவேற்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோல் அண்ணா அவர்கள் இதே மன்றத்திலே-1967-ல் முதலமைச்சராக இருந்தபோது நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன்; இப்போதுள்ளவர்களில் சிலர் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். சென்னை ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்மொழிந்து அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அண்ணா பெருமகிழ்ச்சியின் காரணமாக, "நான் தமிழ்நாடு என்று மூன்று முறை சொல்வேன், நீங்கள் 'வாழ்க' என்று முழக்கமிட வேண்டும்" என்று சொல்லி இங்கே சட்டமன்றத்தில் 'தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு' என்று அண்ணா அவர்கள் சொல்ல சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும், 'வாழ்க வாழ்க வாழ்க' என்று முழங்கினோம். அதை எண்ணிப் பார்க்கிறேன். அப்படித் தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டுமென்று போராடி உயிர்விட்ட விருதுநகர் சங்கரலிங்கனாருக்கு தியாகிகள் மணி மண்டபத்தில் சிலை வைத்திருப்பது, அண்ணாவின் தம்பி கலைஞர் என்பதை நான் இந்தநேரத்தில் மிகப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

அதைப்போல ஒருகாலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னோடியாக இருந்த நீதிக் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். நீங்கள் வெள்ளைக்காரர்களுக்கு வால் பிடித்தவர்கள்; அவர்களுக்கு அடிமைகளாக இருந்தவர்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டு உண்டு. ஆனால் இன்றைக்குப் பார்க்கிறோம். ஆந்திரகேசரி பிரகாசம் முதல் ஜெயலலிதா அம்மையார்வரை எந்த ஆட்சியிலேயும் எந்த முதலமைச்சரும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்காக எந்த நினைவுச் சின்னத்தையும் எழுப்பவில்லை. ஆனால் வாஞ்சி ஐயர் மனைவி வறுமையில் வாடுகிறார் என்றவுடன் அவருக்கு ஓய்வூதியம் தந்தது நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள். வ.உ. சிதம்பரனாருடைய பேத்திகளுக்குக்கூட வயது வரம்பைத் தளர்த்தி அவர்களுக்கு அரசு வேலை தந்தது (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய கலைஞர் அவர்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் மாண்புமிகு சுப்பராயன் அவர்கள், 'இந்த budget காற்றோட்டமாக இல்லை, சற்று இறுக்கமாக இருக்கிறது' என்று சொன்னார்கள். உண்மையிலேயே நாம் பார்க்கிறோம். 5-வது ஊதியக் குழு அறிக்கையின்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத்தை மாண்புமிகு முதல்வர் தந்திருக்கிறார்;

U.G.C. Scale-படி ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குகிறார். அரிசி விலை அதிகமானதாலே ஆண்டுக்கு 160 கோடி ரூபாய் மேலும் கூடுதல் செலவு. இன்றைக்கு 18 கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள 15 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை தருவதற்காக 185.26 கோடி ரூபாயை கலைஞர் ஒதுக்கி இருக்கிறார். இவ்வளவு சுமையையும் வைத்துக்கொண்டு ஒரு நிதிநிலை அறிக்கை தயாரிப்பது என்பதே முடியாத காரியம். அதைப்போல நம்முடைய மாண்புமிகு நண்பர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சட்டமன்றத் தொகுதிக்கு 50 இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறீர்கள், 35 இலட்சத்தை 70 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்றார்கள். நாடாளுமன்றத்தில் 1 கோடியை 2 கோடியாக மாற்றியிருக்கிறார்கள். 6 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியதுதான் ஒரு நாடாளுமன்றத் தொகுதி. 1 கோடி என்பது 2 கோடியாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆனால் நம்முடைய முதல்வரவர்கள் 6 சட்டமன்றத் தொகுதிக்கும் தருவதைச் சேர்த்தால் 3 கோடி ரூபாய்--மத்திய அரசு 2 கோடி என்றால் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் 3 கோடி ரூபாய் — கூட ஒரு கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள் என்ற செய்தியை இந்தநேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று. ஒரு நிமிடம்.

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றி இங்கே பாரதிய ஜனதா மாநாட்டிலே பேசியதாகச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒரு தகவலைத் தர விரும்புகிறேன். ஒன்றே ஒன்று. இன்றைக்குப் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வு ஊதியத்தை, 1000 ரூபாயாக இருந்ததை 1500 ரூபாயாக உயர்த்தி முதல்வரவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இறந்தால் அவர்களுடைய குடும்ப நிதி 25 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை ரூ. 40 ஆயிரமாக உயர்த்தியிருக்கிறார்கள். இது பத்திரிகையாளர்களுக்கு நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் தந்த பரிசு. ஆனால் பத்திரிகையாளர்களுக்கு டெல்லி அரசு தந்த பரிசு அவர்களுடைய பி.ஜே.பி. அரசாங்கம் தந்த பரிசு என்ன என்பதை மட்டும் பட்டியலிட்டுக் காட்டி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

டெல்லியிலே மட்டும் பத்திரிகையாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஒரு புள்ளிவிவரம். பிரணாய் ராய் அவர்களுடைய New Delhi T.V. பெண் நிருபர் ஷவானி சஜோடியா என்பவர் 2 மாத காலத்திற்கு முன்னாலே டெல்லியிலே படுகொலை செய்யப்பட்டார். அதைப்போல Zee T.V. நிருபர் -- அந்த T.V. யினுடைய நிருபர் — ஆண் நிருபர் ஒருவர், பெண் நிருபர் ஒருவர்



படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். Indian Express-னுடைய புலனாய்வுப் பெண் நிருபர் ஷவாணி பட்நாகர் என்பவர் சென்ற மாதம் படுகொலை செய்யப்பட்டார். சமீபத்தில் Cartoonist இர்ஃபான் ஹுசைன் என்பவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஆகவே இன்றைக்குப் பத்திரிகையாளர்களுக்கு நிதியுதவி தருவது தமிழ்நாடு அரசாங்கம், கலைஞருடைய அரசாங்கம்; பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படுவது டெல்லியில் என்பதைக் கூறி, சட்டம் — ஒழுங்கு எங்கே நிலை குலைந்து போய் உள்ளது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறி, பேச வாய்ப்புத் தந்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அதிலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சந்தனம் உரச உரச மணக்கும் என்பார்கள்; வைரம் பட்டை தீட்டத் தீட்ட ஜொலிக்கும் என்பார்கள்; தங்கம் புடம் போட புடம் போட பளபளக்கும் என்பார்கள், அதுபோல, இந்த Budget பளபளக்கும் தங்கமாய், ஜொலிக்கும் வைரமாய், மணக்கும் சந்தனமாய் அமைந்திருக்கிறது. அதிலே குறிப்பாக ஒன்று சொன்னால் தங்கத்திற்கும், வைரத்திற்கும் வரியைக் குறைத்திருப்பது முக்கியமான அம்சம். இதைப் புரியாத சிலர் வெளியிலேயிருந்துகொண்டு எதற்காக தங்கத்திற்கெல்லாம், வைரத்திற்கெல்லாம், பணக்காரர்கள் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கெல்லாம் வரியைக் குறைக்கிறார்கள். இது தேவைதானா என்று கேட்கிறார்கள். இது அப்படிப் பார்க்கக்கூடிய விஷயமே அல்ல. இன்று ஒவ்வொரு பெண்ணும், தாலி என்றால் தங்கத் தாலி அணியக்கூடிய நிலையிலே தங்கத்திற்கு வரி அதிகமாக இருப்பதனால் நமது தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய வருமானம் கர்நாடகாவிற்கும், பிற மாநிலங்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது. அங்கேயெல்லாம் வரி குறைந்திருக்கிற காரணத்தால் 1997-98 ஆம் ஆண்டு நமது தமிழ்நாட்டிற்கு வந்த, இறக்குமதி செய்யப்பட்ட 73 ஆயிரம் கிலோ தங்கம் சென்ற ஆண்டு வெறும் 7800 கிலோவாகக் குறைந்திருக்கிறது. இதனால் நமது வருவாயிலும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இதுபோல வரி வித்தியாசமாக இருப்பதனால்தான் நமக்கு வர வேண்டிய வருவாய் பிற மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல. அந்தத் தங்கம் நமது தமிழ் மாநிலத்திற்கு வராத காரணத்தினால் இங்கேயுள்ள பொற்கொல்லர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டு அவர்கள் குடிபெயர்ந்து அண்டை மாநிலத்திற்குச் செல்லக்கூடிய ஒரு நிலை. அதுமட்டுமல்லாமல் இங்கே தயார் செய்யப்படுகின்ற தங்க நகைகள் பெரும்பாலும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகின்றன. அந்த ஏற்றுமதி குறைந்ததினால் வருவாய் இழப்பும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது பணக்காரக்கள் விஷயம் என்று ஒதுங்கியில்லாமல் நலன் அறிந்து செயல்பட்டு இருக்கின்றார். அதற்காகத்தான் சொன்னேன் 12வது Budget உரச உரச மணக்கும் சந்தனம் என்று. அதுபோல என்ன தேவை, எப்படி வருவாய் ஈட்டுவது என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்து, அந்த வகையிலே இந்த பட்ஜெட்டைத் தயாரிப்பதிலே முதல்வரவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனை வரவேற்று மேலும் சில பணிகளைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நாகைக்கும் நாகூருக்கும் புறவழிச்சாலை ஒன்றை அனுமதித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 27 கோடி ரூபாய்க்கு அந்தச் சாலையை அனுமதித்திருப்பதற்கு இந்த அரசுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்தப் புறவழிச்சாலை முடிகின்ற இடத்திலே ஓர் இரயில்வே கேட் — நாகை-வேளாங்கண்ணி ரோட்டிலே இரயில்வே கேட்—ஒன்று இருக்கிறது. அதோடு அது முடிகிறது. அவ்வாறு முடிகின்ற இடத்தில், புறவழிச் சாலையில் வேகமாகச் செல்லக்கூடிய வாகனங்கள் அந்த கேட்டில் நின்றுதான் செல்ல வேண்டும். அதன் மேம்பாட்டிற்கு ஒரு கோடி ரூபாயைச் செலவு செய்து மேம்பாலமாகப் போட்டால் எந்தத் தடையும் இல்லாமல் சுலபமாகச் சென்றுவிடலாம் என்பதை கவனத்தில் கொண்டு அதையும் இந்த அரசு அனுமதிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

நான் இந்த மாமன்றத்தில் நுழைந்ததிலிருந்து ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கனிவோடும், பரிவோடும் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அது நாகை துறைமுகம் பற்றியதாகும். நமது நாட்டில் பொருளாதார வளர்ச்சி சிர்பட வேண்டுமானால், வசதிகள் பெருக வேண்டும். போக்குவரத்து வசதிகள், கடல் வழி வசதிகள் எந்த ஊரிலே அதிகமாக இருக்கின்றதோ அந்த ஊர்தான்



அதிகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இன்று குஜராத்தில் அனைத்து கடல்வழித் துறைமுகங்களையும் விரிவுபடுத்தி செவ்வனே செய்துகொண்டிருக்கின்ற காரணத்தால்தான் அது பொருளாதாரத் துறையில் சீக்கிரம் முன்னேறிக் கொண்டிருக்கிற நிலையை நாம் பார்க்கின்றோம்.

அங்கே இந்தக் கடல்வழித் துறைமுகத்திற்குத் தலைவராக இருப்பவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான். ஆகவே நாகை மாவட்டத்தில், பிரதானமான, மிகவும் பழைமையான—நான் சொல்ல வேண்டியதில்லை, அது முதல்வர் அவர்களுடைய சொந்தத் தொகுதி, அவர்கள் பிறந்த ஊர் — அந்தத் தொகுதியிலே மூடப்பட்டு இருக்கின்ற அந்தத் துறைமுகத்தை மீண்டும் இயக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நாகையிலே, வேட்டைக்காரன் இருப்புப் பகுதியிலே ஒரு துணை மின்நிலையம் வேண்டுமென்று சென்ற ஆண்டு கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இந்த ஆண்டு என்னால் எடுத்துக்கொள்ள முடியாது, நிச்சயமாக அடுத்த ஆண்டு செய்வேன்' என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். அதன் அடிப்படையில் அந்தப் பணி இந்த வருடம் தொடங்கப்படவில்லை. ஆகவே அதையும் கவனத்தில் கொண்டு வேட்டைக்காரன் இருப்புப் பகுதியில் அந்தத் துணை மின் நிலையத்தை அமைத்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நாகையிலே பிரதான தொழிலாக இருப்பது மீன் படித் தொழிலாகும். மீன்களைப் பிடித்து கரைக்குக் கொண்டுவருகின்ற இடத்திலே, அக்கரைப்பேட்டை என்ற கிராமத்திலே, கடுவையாற்றின் மேலே ஒரு பாலம் இருக்கிறது. அது மிகவும் குறுகிய பாலம். ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 2 அல்லது 3 கோடி ரூபாய் மதிப்புள்ள மீன்கள் அங்கே பரிமாறப்பட்டு, விற்கப்பட்டு வாங்கப்படுகின்றன. 900-க்கும் அதிகமான படகுகள் அங்கே மீன்களை இறக்கி கரைக்குக் கொண்டுவருகின்றன. அந்தப் பாலம் மிகவும் குறுகியதாக — கடுவையாற்றுப் பாலம் மிகவும் குறுகியதாக—இருப்பதால் போக்குவரத்து நெரிசலும், வருவாய் இழப்பும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தை விரிவுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல கீழையூர் ஒன்றியத்திலே முதலியப்பன்கண்டி, சடையன்கோட்டம் போன்ற பகுதிகளில் மக்கள் தீவுகளில் உள்ளதுபோல வசித்துக் கொண்டிருக்கிறார்கள். முறையான பால

வசதிகள் இல்லை. மழை, வெள்ளக் காலங்களிலே, Collector அவர்களும் நானும் படகிலே சென்றுதான் அந்த மக்களைப் பார்த்தோம். ஆகவே அரிச்சந்திர நதியிலும், சக்கிலியன் வாய்க்காலிலும் பாலங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் வேட்டைக்காரன் இருப்பு, புதுப்பள்ளி இணைப்புப் பாலங்களையும் கட்டித் தரவேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். தாலுகாக்களைப் பிரிக்கும்போது, கீழையூர் ஒன்றியத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களை நாகை தாலுகாவிலிருந்து பிரித்து கீவளூர் தாலுகாவிலே கொண்டுபோய் சேர்த்துவிட்டார்கள். பக்கத்திலே நாகப்பட்டினம்; 14 கிலோமீட்டர் தூரத்திலே சென்றுவிட முடியும். ஆனால் அந்தப் பகுதி மக்கள் 40 கிலோமீட்டர் தூரம் சென்று 2 பேருந்துகள் மாறி, கீவளூருக்குச் செல்கிறார்கள். ஆகவே வேட்டைக்காரன் இருப்பு, புதுப்பள்ளி, விழுந்தமாவடி, காமேஷ்வரம், பி.ஆர்.புரம், வேளாங்கண்ணி, சின்னதுங்கூர், தாடப்பிடாகை, கீழ்ப்பிடாகை, திருப்பூண்டி ஆகிய கிராமங்களை மீண்டும் நாகை தாலுக்காவிலே இணைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் நாகையை cross செய்து, அங்கே பேருந்திலே இருந்து இறங்கி, மறுபடியும் கீவளூருக்குப் போக வேண்டும். ரொம்ப கஷ்டம் அது. இப்போது திருக்குவளை தாலுகாவைப் பிரித்தோம். அதிலே கூட கொஞ்சம் ஊரையும் இதிலே சேர்க்கலாம். ஆகையினால் மக்களுக்குச் சிரமங்கள் குறையும். அதிகாரிகளுக்கு தூரமாகச் செல்லக்கூடிய பிரச்சினைகளும் குறையும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோல நான் சென்றமுறை பேசும்போது கோரிக்கை ஒன்றை வைத்திருந்தேன். நாம் எத்தனையோ திட்டங்களைத் தொடங்கி, அவை நிறைவேற்றப்பட்டு வருகின்ற வேளையில், சத்துணவுத் திட்டத்தை எம்.ஜி.ஆர். ஆரம்பித்து வைத்தார் என்ற காரணத்திற்காக 'மாண்புமிகு எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்று அதற்கு நாம் பெயர் வைத்திருக்கிறோம். சத்துணவுக்கு மூலகாரணமாக இருப்பது மதிய உணவு. அந்த மதிய உணவை வழங்கியவர் காமராசர்; அவர் பெயர் விடுபட்டுள்ளது. ஆகவே, 'காமராசர், எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்' என்று பெயர் மாற்றம் செய்யுமாறு இந்த அவையில் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல காயிதே மில்லத் அவர்கள் பெயரில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நீண்டநாட்களாக தமிழ் மக்கள் கோரிக்கையாக வைத்திருக்கும்—

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காமராசர் அவர்கள் சத்துணவு அளித்தார்கள் என்பதால், மாண்புமிகு எம்.ஜி.ஆர். பெயரோடு காமராசர் பெயரையும் இணைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். அவருக்கு நான் ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். காமராசருக்கும், எம்.ஜி.ஆருக்கும் முன்னால் சர் பிட்டி. தியாகராசன் அவர்கள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளிலே சத்துணவு அளித்தார்கள். அவர்தான் இதற்கு வித்திட்டவர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, பழைய வரலாற்றை நான் தெரிவிக்கின்றேன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சர் பிட்டி. தியாகராசன் அவர்கள் பெயரையும் சேர்ந்து வையுங்கள் என்று கேளுங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** கர்நாடகாவிலே மொழிக்கென்று கொடியை வைத்திருக்கிறார்கள். அதற்கு என ஒரு தினத்தை வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதுபோல பல்வேறு மாநிலங்களில் இருக்கின்றன. நான் என்னுடைய கன்னிப் பேச்சிலே இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். 'தமிழுக்கென்று தனிக் கொடியும், தமிழ் இனத்திற்கென்று தனி தினமும் வேண்டும்' என்று வலியுறுத்தியிருக்கின்றேன். அதை மீண்டும் மீண்டும் நான் வலியுறுத்துகின்றேன். தமிழுக்கென்று தனிக் கொடியைத் தாருங்கள். அது உணர்வு ரீதியாக மக்களை ஒன்றுபடுத்துவதற்கு உதவும். உணர்வு ரீதியாக தமிழை வளர்ப்பதற்கு அது உதவும். தமிழின்பால் உள்ள பற்றையும், பாசத்தையும் வளர்ப்பதற்கு உதவும். ஆகவே, தமிழுக்கென்று தனிக் கொடியும், தமிழ் இனத்திற்கென்று தனி தினத்தையும் தாருங்கள். ஏனென்றால் பொங்கல் திருநாளை, தமிழர் தினம் என்று சொல்கிறார்கள். ஆனால் பொங்கல் திருநாள் பெரும்பாலும் உழவர் தினமாகத்தான் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆகவே தமிழுக்கு என்று தனிக் கொடியும், தமிழ் இனத்திற்கென்று தனி தினமும் அவசியம் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்

ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலையாட்டுகிறார். ஆகவே நிச்சயமாக அது வந்துவிடும் என்று நம்புகிறேன். அதை தயவுசெய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இஸ்லாமிய சமூகத்தினர் நீண்ட நாட்களாகக் கேட்டுவரும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை. சமீபத்தில் மாண்புமிகு முதல்வரவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் பிறகு அது பரிசீலிக்கப்படும் என்ற வாக்குறுதியை, நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். நிச்சயமாக அவர்கள் சொன்னபடி செய்வார்கள் என்ற மிகுந்த நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அது நிச்சயமாக நிறைவேறப் போகிறது. அந்தப் பிரச்சினை முடியும்வரை, இப்போது பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற இட ஒதுக்கீட்டில், முறையாக எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பாகம் கிடைக்கின்றதா என்பதை நீங்களே பரிசீலித்து, எவ்வளவு சதவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்களே அறிவிக்க வேண்டும். சமீபத்தில், பல்வேறு துறைகளில் வேலைக்கு ஆட்களை எடுத்திருக்கிறீர்கள். அதிலே பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டின் மூலமாக முஸ்லிம் இனத்தவர்கள் எத்தனை பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், காவல் துறையிலே காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் பதவியில் எவ்வளவு பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், கல்வித் துறையிலே ஆசிரியர் பதவியில் எவ்வளவு பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு எத்தனை விழுக்காடு வழங்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையையும் மக்களுக்குத் தெரிவித்து, இதிலே உள்ள குழப்பத்தைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய பதவிகளில் இருப்பவர்களைப்பற்றிப் பிரச்சினை இல்லை. அடித்தளத்தில் இருப்பவர்களை முன்னேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகை மாவட்டத்திற்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழங்கி அதற்கான கட்டடம் கட்டுவதற்கு நிதியும் ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இப்பிரச்சினையில் கடந்த கால அரசு அறிவித்து, ஐந்தாண்டுகள் அதைக்கிடப்பிலே போட்டதை மக்கள் மறந்துவிட்டு, இந்த அரசுதான் தாமதம் செய்ததுபோல கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த அரசு வந்தவுடனே அதற்கான முயற்சியை மேற்கொண்டு,



அதற்கான இடத்தையும் தேர்வுசெய்து, நிதியையும் ஒதுக்கித் தந்ததற்கு நாகை மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைக் கூறி வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**THIRU N.S. RAJKUMAR MANDRADIAR:** Hon. Deputy Speaker, Sir,

At the outset, I thank you for giving me an opportunity to express my views on the 'Millennium' Budget.

Given the not so happy economic scenario due to the general recessionary trends world wide, and the consequential financial crunch experienced as never before, it required a visionary with a humane touch such as our very own Dr. Kalaignar, to dedicate a pragmatic Budget to the people of Tamil Nadu for the year 1999-2000.

Due to limitation of time, I wish to highlight only a few areas which I consider as significant in the present circumstances. Firstly, I wish to...

**HON. DEPUTY SPEAKER:** Why don't you speak in Tamil? (Laughter)

*பிற்பகல் 1-15*

**THIRU N.S. RAJKUMAR MANDRADIAR**: Issue of House pattas. Firstly, I wish to bring up the matter concerning the issue of pattas for houses built on 'Odai Poromboke' lands. Since flash floods during rainy seasons could cause damages to property and life, the Government does not normally entertain the issue of house pattas situated in 'Odai Poromboke' lands. In reality, the situation is quite different. Not all the Odai Poromboke lands can be categorised under the risk category. What were 'Odais' earlier, have been converted into dwelling units and the nature of land use has changed over a period of time. Flash floods in these areas have become a thing of the past. Therefore, there is the crying need for regularising these dwelling units owned mostly by the poor and downtrodden.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தமிழ் தெரியுமா? (சிரிப்பு)

**THIRU N.S. RAJKUMAR MANDRADIAR:** Hon. Deputy Speaker Sir, I solicit the kind assistance of the Hon. Revenue Minister for obtaining the Government's approval for this proposal.

Transport: The Tamil Nadu State Transport Corporations are second to none in providing efficient passenger service. Only in Tamil Nadu, all major villages are well linked to the transport network. But still there is resistance for increasing the bus fares which are the lowest in the country. Consequently, despite all "tightening of the belt" efforts, the Transport Department continues to show losses, estimated at Rs.400 crores for the accounting year 1998-99. Such a situation can be finally overcome only by a hike in fare. Some might call it political suicide, citing elections that have been lost following bus fare hikes. But I beg to differ. People are wise enough to realise that it is they who ultimately pay for these losses, if not in the form of a hiked fare, by way of some other form of tax. Therefore, my perception is that the public will not really resent a price hike, provided it can be justified.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் – தலைமை)

The public today, would like to be associated in the decision making process and they do not want to be taken for granted. This can be done by conducting an opinion survey whenever a price hike is warranted as being done by the London Transport quite successfully. The proposed survey should be entrusted to an outside agency for an impartial finding. The survey will also highlight the performance of the Transport Corporations from the commuters' point of view. Hon. Transport Minister, Sir, may I implore you to take up the challenge? You will be pleasantly surprised with the results.

Irrigation: Kalaignar's Government has taken commendable steps to modernise large and medium irrigation schemes. Desilting and maintenance operations of waterways have shown appreciable results.

L.B.P. canal maintenance and modernisation work is the next on the agenda requiring the Government's immediate attention. For more than 3 decades now, maintenance of the L.B.P. canals which irrigate more than 2 lakh acres have been neglected. Lack of maintenance has resulted in heavy leakages enroute and the tail - end farmers never receive their full quota of water supply. Thanks to the efforts put in by our Hon. Chief Minister, an interim arrangement has been reached in the Cauvery dispute between the



concerned riparian States. It cannot be said any more that, since Bhavani is a tributary of Cauvery, development work in the Lower Bhavani Project areas cannot proceed till a solution for the Cauvery dispute is found. Therefore, I request the Hon. P.W.D. Minister to speed up the modernisation and maintenance work in the L.B.P. region with World Bank's help, which in any case is only an exercise in better management of the available water.

Rural Development: First and foremost, I thank the Hon. Chief Minister for enhancing the allocation for the MLA's Constituency Development Fund to Rs.50 lakhs. We, the MLA's, assure you Sir, that these funds will be put to good and proper use.

'Anna Marumalarchi Thittam' has proved to be a great success warranting further encouragement. The Government should, therefore, take up at least two villages every year under the 'Anna Marumalarchi Thittam' for integrated development instead of one village as at present.

பிற்பகல் 1-20

'Namakku Naame Scheme' lays emphasis on self-help. Many villages are coming forward to opt for this scheme. Through this scheme, problems that have remained unsolved for years together have been brought to a successful conclusion. I request that the allocation for this public interest scheme be doubled during the coming financial year.

TWAD Board has left no stone unturned in the D.M.K.'s successful march towards its avowed goal of providing safe drinking water to all rural habitations in Tamil Nadu. I bow to the Hon. Local Administration Minister for his excellent stewardship in this regard. I also profoundly thank the Hon. Chief Minister for conceding to my request and taking up the Avinashi Athikadavu Drinking Water Scheme for consideration. On completion of the detailed project survey which is now under progress, I wish that this scheme which will benefit 7 Assembly Constituencies comprising of 10 Panchayat Unions in two Districts, should be allocated funds in the Revised Budget Estimates for 1999-2000 for execution during the said financial year itself.

The introduction of new tax measures in the Budget is a right step towards adoption of uniform tax rates by all States. Tax reduction (gong was sounded) from 8% to 2% on man made yarn and fibre is appreciated. Considering the plight of the Textile industry, the Government should also consider waiving of Sales Tax on Cone and Hand Cotton yarns and Waste

Cotton for at least a limited period of two years, to offset the upward revision of Excise duty on Cotton Yarn by over 3% in the Central Budget. Here I wish to thank the Hon. Chief Minister for getting the stand alone spinning units also included for consideration under the Technology Upgraded Fund Scheme. Considering that about 60% of all spinning units in this country are in Tamil Nadu, this is a great achievement by any standards.

I praise the Hon.Chief Minister for the proposed erection of a 133 feet high statue of Thiruvalluvar at Kanniyakumari. This is the greatest tribute Tamilian could pay to the poet Laureate. I take this opportunity to request the Hon. Chief Minister to construct a memorial this year for Kodi Katha Tirupur Kumaran, a freedom fighter, at Chennimalai in my Kangeyam Constitutency.

Overall, the D.M.K. Government has been providing an honest, efficient and transparent administration. Transparency in tenders, computerisation of land records, easy accessibility through the internet of Citizen's Charters, availability of Community, Income and Nativity Certificates to X and XII students at their school doorsteps, are all measures that will go a long way in achieving the dream goal of the D.M.K. administration which is to present a corruption free and people friendly Government to the people of Tamil Nadu. For my part, I wish to conclude my debate on the budget by citing the following Thirukkural which I feel is apt in praising my revered leader and architect of the millennium budget.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு"

செயலுக்குரிய கருவியும், ஏற்ற காலமும், செய்யும் வகையும், செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லவன் அமைச்சன். அவர்தான் நம் உயிரினும் மேலான தலைவர் கலைஞர். நன்றி, வணக்கம்.

## 4. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (இ) பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே நான் சொன்னதுபோல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள்மீது அடுத்த நடவடிக்கை என்ன என்று முடிவெடுக்க, அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் என்னுடைய அறையில் நடைபெற்றது. சட்டமன்றத்திலே தாமரைக்கனி அவர்களுடைய நெடிய வரலாறு நாடறிந்த ஒன்று. இந்தச் சட்டமன்றத்திலேகூட அவரால் அன்பால் தட்டப்பட்ட ஓரிரண்டு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லக்குமார், அதைப்போலவே கடந்த காலங்களில் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன், திரு. ஜி. விசுவநாதன் போன்றவர்களெல்லாம் இன்று — இவரால் அடிக்கப்பட்டவர்கள் என்பதை நாடு அறியும். இந்தப் பின்னணியிலே—எதிர்காலத்திலே என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று கூட்டப்பட்ட கூட்டத்தில்—அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம் காலை சுமார் 12 மணியளவில் என்னுடைய அறையிலே கூடி, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி நேற்றையதினம் அவையில் நடந்துகொண்ட செயல் குறித்து அடுத்த நடவடிக்கை என்ன எடுப்பது என்று விவாதித்தது. பல்வேறு கருத்துக்கள் அப்போது தெரிவிக்கப்பட்டன.



பிற்பகல் 1-25

தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகளில் மீதம் உள்ள காலத்திற்கு அவரைப் பேரவையிலிருந்து வெளியேற்றலாம் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களுக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 326-ன்படி ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள்வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதித்து தண்டிக்கத்தக்க ஒரு செயலாகும். அந்தச் சட்டத்தின் அடிப்படையில் அத்தகைய தண்டனையைக் கொடுக்கலாம் என்றுகூடக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. குறைந்த அளவு இரண்டாண்டுக் காலம் சிறைத் தண்டனை வழங்கலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக ஜனநாயகத்திலே நம்பிக்கையுள்ளவர்கள் இப்படிப்பட்ட செயல்களைக் கடுமையாகக் கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டுமென்று எல்லோருமே கருத்துத் தெரிவித்தார்கள். நேற்றையதினம் இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானம் ஒருமனதாகப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு அதன் அடிப்படையில் அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரைத் தாக்கி கொடுங் காயம், grievious injury ஏற்படுத்திய செயலை, பேரவைத் தலைவர் முதல், அனைத்துக் கட்சித் தலைவர்கள், அவையில் அமர்ந்திருந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள், அரசு அதிகாரிகள், அவைக் காவலர்கள் ஆகிய அனைவரும் நேரடியாகப் பார்த்த நிகழ்ச்சி என்ற காரணத்திற்காக வழக்கமான நடைமுறையைப் பின்பற்றாமல் சட்டமன்றப் பேரவையே தண்டனை கொடுக்கலாம் என்றும் சட்டமன்றத்தின் இறையாண்மையை — Sovereignty of the Legislature — காப்பாற்றும் வகையில் நம்முடைய நடவடிக்கை அமைய வேண்டும் என்றும் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏற்கெனவே திரு. தாமரைக்கனி ஒரு வார காலம் சிறையிலே வைக்கப்பட வேண்டும் என்று பேரவைத் தலைவர் உத்தரவு பிறப்பித்தது முறைதான் என்று ஏற்றுக்கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களும் திரு. தாமரைக்கனி அவர்களை அவை உரிமை மீறல் குற்றம் செய்ததற்காக இந்த அவை வன்மையாகக் கண்டித்து, அவருக்கு 15 நாட்கள் சாதாரண சிறைத் தண்டனை அளித்து, அவர் சிறையிலே அடைக்கப்பட வேண்டும் என்று ஒருமனதாக முடிவெடுத்து, அதற்குரிய தீர்மானத்தை பேரவையிலே முன்மொழிந்து நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தினர். தொடர்ந்து இப்படிப்பட்ட குற்றத்தை அவர் இழைப்பாரேயானால் சட்டமன்றத்தின் எஞ்சிய காலத்திற்கு திரு. தாமரைக்கனி அவர்களை வெளியேற்றுவது என்ற கருத்தும் எல்லோராலும் வலியுறுத்தப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேரவை முன்னவர் அவர்களை தீர்மானத்தை முன்மொழியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்

### பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவர் திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்





அவர்களைத் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளதன் மூலம், அவை உரிமை மீறல் என்ற குற்றத்துக்கு ஆளானதுடன் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும் நடவடிக்கைக்கு உள்ளாகின்றார். எனினும் அவரது செயலை வன்மையாகக் கண்டித்து அவையின் மாண்பைக் கருதி, அவருக்கு 15 தினங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கப்பெற வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கின்றது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போர் இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போர் இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

தீர்மானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சென்னை மத்திய சிறையிலே 15 நாட்கள் சாதாரண காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று அறிவிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

## 4. அறிவிப்புகள் — தொடர்ச்சி

**4. முன்னாள் முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா, 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து வெளியிட்ட அறிக்கையின் மீதான உரிமைப் பிரச்சினை குறித்து — பேரவைத் தலைவர் தீர்ப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 22-3-1999 அன்று பேரவையில் நடைபெற்ற சம்பவம் குறித்து முன்னாள் முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை இந்த அவையின் உரிமையை பற்றிய ஒன்றாகும்

[பேரவைத் தலைவர்] [1999 மார்ச் 23

என்று மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அப்துல் லத்திப் அவர்களும், இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களும் அவை உரிமை மீறல் தீர்மானத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இது குறித்தும் விவாதத்திலே எல்லோரும் பங்குகொண்டு முடிவிலே இந்த அவை உரிமை மீறல் பிரச்சினை, தெளிவாக அவையின் மாண்பைப் பாதிக்கக்கூடிய பிரச்சின என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இங்கே நேற்று நடந்த சம்பவத்தை இதுவரை யாருமே மறுக்காத சூழ்நிலையில், இப்படிப்பட்ட சம்பவமே நடக்கவில்லை என்று முன்னாள் முதல்வர் கூறுவது அரசியலிலே மிகமிகக் கீழ்த்தரமான ஒரு நடவடிக்கை என்பது நம் அனைவருக்கும் தெரிந்திருந்தாலும், இதற்குமேல் அந்த உரிமை மீறல் பிரச்சினையிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்று முடிவு செய்து, உரிமை மீறல் பிரச்சினையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவிக்கின்றேன்.

இந்த அளவோடு பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(24-3-1999)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*78. 1997-98*-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-I) பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*79. 1997-98*-ஆம் ஆண்டிற்கான அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் (தமிழ்நாடு கோட்டம்-2) ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



*1999 மார்ச் 23*]

*80. 1997-98*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*81. 1997-98*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-1) இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*82. 1997-98*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-3) ஐந்தாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*83. 1997-98*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-I) இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

*84. 1997-98*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-2) பதினோராவது ஆண்டறிக்கை. (*1956*-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

221091

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280
and 283 of the Tamil Nadu
Legislative Assembly Rules and
printed by the Director of
Stationery and Printing,
Chennai-600 002.